
# போர் உலா



கப்டன் மலரவன் எழுதிய பயணக்குறிப்பு

தமிழீழ ஆவணக்காப்பகம்
tamileelam archive

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# போர் உலா

மணலாற்றிலிருந்து
மாங்குளம் முகாம்வரை
கப்டன் மலரவன் (லியோ)
என்ற புலிவீரனின்
பயணக்குறிப்பு

இது
தமிழீழ விடுதலைப் புலிகள்
வெளியீட்டுப் பிரிவின்
வெளியீடு.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தனது தனித்துவத்திற்கு அப்பால் தேசத்திற்குச் சேவை புரியும் இந்த உயரிய பண்பு, புலிகள் இயக்கத்தின் விழுமியங்களில் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை இப்புலிவீரனின் போராட்ட வரலாறு, பல சாதனைகளையும், மறக்கமுடியாத பல சம்பவங்களையும் கொண்டதாகவே இருக்கின்றது.

கப்டன் மலரவனின் போராட்ட வரலாறு சம்பந்தமான விரிவான குறிப்பொன்றை, அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச் செல்வன் எழுதியுள்ளார். அது இந்நூலின் பின்னிணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளது. அத்துடன் மலரவனின் தாயார் மலரவனது வாழ்க்கை தொடர்பாக எழுதிய ஒரு கவிதையும் இணைக்கப் பட்டுள்ளது.

'போர் உலா' என்ற இந்த நூலை எழுதிய கப்டன் மலரவன், தொடர்ந்து சிலாவத்துறை களநிகழ்வுகளைச் சுற்றி அலைபாயும் தன் நினைவுகளை எழுதவிருந்தான்: அதை இந்நூலின் இறுதியில், தன் கைப்படக் குறிப்பிட்டுமிருந்தான்.

ஆனால், பலாலி சிங்களப் படைத்தளத்தின் கிழக்குப் பகுதிமீது, 23/11/92 அன்று புலிகளின் பெரியதொரு அணி தொடுத்த தாக்குதலின்போது, மலரவன் வீரச்சாவடைந்தான்.

அதன்பின் அவனது உடைப்பையிலிருந்து எடுக்கப்பட்ட கையெழுத்துப் பிரதிதான், இங்கே நூலுருப்பெற்றுள்ள 'போர் உலா' ஆகும்.


'போர் உலா' என்ற இந்தப் புதிய பரணி தமிழீழத்தின் போர்கால இலக்கியத்திற்குக் கிடைத்த ஒரு பொக்கிசமாக என்றைக்கும் விளங்கும்!

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

*வெளியீட்டுப் பிரிவு,*
*தமிழீழ விடுதலைப் புலிகள்,*
*தமிழீழம்.*



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



# கப்டன் மலரவன் (லியோ)

காசிலிங்கம் விஜித்தன்
இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

பலாலி கூட்டுப்படைத் தளத்தின் கிழக்குப் பாதுகாப்பு வியூகம் மீது 23-11-1992 அன்று நடாத்தப்பட்ட மிகப் பெரிய தாக்குதலின்போது இன்னும் 57 புலிகளுடன் வீரச்சாவு அடைந்தார்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

உருப்படியா வரமாட்டாய்." என வசந்தனைச் சீண்டினான் இதயன்.

"டேய், அவன் எனக்குச் சொன்னவன். நீ ஏன் கத்திறாய்?" என இடையில் வெட்டினேன் நான். வசந் கையில் எடுத்த தடிக்குச்சியால் இதயனுக்கு ஒரு குத்துவிட்டுத்தான் அடங்கினான்.

உழவியந்திரம் வெளியை (வெட்டையை) விட்டு காட்டுப் பாதையில் இறங்கியது. எல்லோரும் வயிற்றைப் பிடித்துக் கொண்டார்கள். "இனி கொஞ்சத்தூரம் தண்டவாளத்திலதான் போகும்." ரைவர் சேது கூறிச் சிரிப்பது கேட்டது.

"இவன் ஒரு மூதேவி. இப்படி இடங்களில வேணுமெண்டு ஓடுவான். நாங்கள் கத்திறத பாத்தா இவனுக்கு சந்தோசம் போல." தன் இயலாமையைக் கொட்டினான் வசந்தன்.

காட்டுப்பாதை என்பது காட்டுக்குள்ளே மரங்களை வெட்டி பாதைபோல அமைத்து, பின் நீரில் அள்ளுப்படாமல் மரக்கட்டைகளை வெட்டி சிலிப்பர் கட்டை போல வரிசையாய் அடுக்கி பின்னர் மண்போட்டு இறுக்குவதே. இது வருடா வருடம் மழை முடிந்தவுடன் சீரமைக்கப்படும். கேட்டவுடன் சுலபமாகக் கூறிவிடலாமே தவிர இது மிகக் கடினமான வேலை. காட்டை வெட்டி சீராக்குவதே பெரும்பாடு. பின்பு மரங்களை சிலிப்பர் கட்டைபோல துண்டு துண்டாக்கி சுமந்து வரவேண்டும். பின் சிவந்த மண்ணை குன்றாய் குவிந்திருக்குமிடங்களில் வெட்டி அள்ளி, கடகங்களில் சுமந்து வரல்வேண்டும். இவ்வளவிற்கும் கோல்சரும் ஆயுதமும் உடலில்தான் இருக்கும். வியர்வையில் எல்லாப் போராளிகளும் குளித்துவிடுவார்கள். அனல் தெறிக்கும் வெயிலில் இந்த வேலை செய்வதென்றால் மிகக் கடினம். என்ன செய்யிறது, எங்கட றோட்டு, நாங்கள்தானே செய்யோணும் என 'தளபதி' உற்சாகமூட்டுவார். அவர்கூட பல இடங்களில் தானும் நின்று செய்வார்.

இளம் போராளிகள் தாங்கள் வெட்டிய வீதியை துப்பரவு செய்வார்கள். அந்த நேரத்தில்கூட நண்பர்களை வம்புக்கிழுக்கும் இதயன் மற்றவர்களைச் சீண்டுவான். சிலவேளை இவனை யாராவது மண்ணால் குளிப்பாட்டி விடுவார்கள். வியர்வைச் சேற்றில் மண்பட பார்ப்பதற்கு பரிதாபமாக இருக்கும்.

டடெங் டாங் என உழவியந்திரம் பெரிதாய் குலுங்கியது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

"ஐயோ! என்ரா இப்படி ஓடுகிறாய்? மெல்லமாப் போவன்." என வசந்தன் கேட்பதும் சேது அட்டகாசமாய் சிரிப்பதும் தெளிவாகக் கேட்டது.

"உவன் சிரிக்கிற சிரிப்பைப் பாத்தா இண்டைக்கு பிரட்டி எடுப்பான் போல கிடக்குது" என்று இதயன் எரிச்சலுடன் கூறினான்.

எம்மைத் தொடர்ந்து வரும் உழவியந்திரங்கள் மிகத் தொலைவில் வருவது தெரிந்தது. டேவிட் அண்ணர் ஓட்டிவருவதற்கு ஒற்றை லைற்தான் எரிந்தது. அது தூரத்தில் தெரிந்தது.

பெரிய பெரிய பாலை, வீரை மரங்களைப் பார்க்கையில் ஏனோ துக்கமாக இருந்தது. "எங்களை விட்டு எங்க போறியள்" எனக் கேட்பதைப்போல அவை காற்றுக்கு அசைந்து இரைந்தன.

'எவ்வளவு நல்ல காடு, தாய் மாதிரி இவ்வளவு காலமும் எங்களைக் காத்தது இதுதானே, இனி எப்ப வரப்போறம்' என மனதில் எண்ணிக்கொண்டேன். ஆவலை அடக்க முடியாமல் கையை உயர்த்தி மரங்களிற்கு "டாட்டா" காட்டினேன்.

"டேய் என்னடா செய்யிறாய்?" என வசந் கேட்டான். ரைக்ரர் குலுக்கி மண்டை பிசகிட்டுதோ என எண்ணினான் போலும்!

"சும்மாதான்" என்று, விழியில் திரையிட்ட நீரைத் தட்டிவிட்டேன். முத்தாய் உருண்டு அது செம்மண்ணில் விழுந்தது; எமது வியர்வையூறிய மண்ணில். இதயன் இப்போது லைற்றைப் பிடித்தபடி நித்திரை தூங்கினான்.

நான் கோல்சரை கொஞ்சம் தளர்த்தி விட்டு ரி. 81 ஐ உயர்த்திப் பிடித்துக்கொண்டேன். முகில்கள் வேகமாய் தலைக்கு மேல் விரைந்தன.

காட்டின் ஆரம்பமுகாமில் ஒருகணம் குலுங்கி நின்ற ரைக்ரரை, சலாம் சென்றியுடன் கதைத்துவிட்டு வேகமாக வெளியே எடுத்தான். ரைக்ரர் மணல் வெளியூடாகப் பாயத்தொடங்கியது. உற்சாகமாக ஓடினான்.

"சலாம், ரைக்ரரை நிற்பாட்டு, வசந்தன் கீழே விழுந்திட்டான். என்ன கண்டறியாத ஓட்டம் ஓடுறாய், பேயா!" எனத்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

திட்டிக்கொண்டு இதயன் இறங்கி, முன்பக்கமாக ஓடினான். சலாம் நல்லாப் பயந்து போனான். என்னடா, என்னடா எனக் கேட்பதற்குள் ரைக்ரரின் 'மட்காட்டில்' ஏறிய இதயன் இனி எடடா என்றான். சலாமிற்கு நொடியில் விளங்கியது, இவன் தன்னை ஏமாற்றி விட்டான் என்று. இல்லாவிட்டால் சலாமாவது நிற்பாட்டி ஏறு என்று சொல்லுறதாவது. தோல்வியுடன் சலாம் சிரித்தபடி அக்சிலேற்றரை ஊன்றி மிதிக்க ரைக்ரர் ஜீப் மாதிரிப் பாய்ந்தது.

''இனி இவங்கள் இரண்டுபேரும் சேர்ந்து எங்களைக் கொல்லப்போறங்கள்'' என்று வசந் ஆற்றாமையால் எரிந்தான். தன் பெயரைப் பாவித்த கோபம் அவனுக்கு இருந்தது. தூரத்தில் நாயாற்றுப்பாலம் பெரிய மிருகம் போலக் குந்தியிருந்தது.

''இந்தியன் இருக்கேக்க மச்சான், இதிலையெல்லாம் வர ஏலாது. மண்டை சிதறும்!'' என்று பழையதை நினைவுகூர்ந்தான் வசந்தன்.

''இவ்விடத்தில்தான் ஒருக்கா நல்லாக் குடுத்தனாங்கள்'' என்று ஞாபகப்படுத்தினேன்.

''ஏராளமான ஆமி செத்ததல்லே?'' என வினாவாக எழுப்பினான்.

''ஓ, 26 ஆமி செத்தது. 21 ஆயுதம் எடுத்தனாங்கள். கால்கஸ்ரோ, பிறன் எல்லாம் எடுத்தது.'' என்று நினைவுகூர்ந்தேன்.

ரைக்ரர் வீதியில் ஏற முன், நீர்க்கிடங்கினுள் விட்டு எடுத்தான் சலாம். என்னிலும், வசந்திலும் அதன் பெரிய ரயர் நீரைவாரி எறிந்தது. சலாம் சிரிக்க எனக்கு உண்மையில் கோபம் வந்தது. ''விசரா, ரைபிளல்லே நனைஞ்சு போச்சு'' என்று கோபத்தைக் கொட்டினேன். ''சரி. நானினி அப்படி ஓடேல்ல.'' என்று சலாம் சொன்னான். வாய்க்குள் போன நீரைத் துப்பியபடி வசந் இருந்தான்.

பெரிய கருமுகில் ஒன்று சந்திரனை திரையிட்டு மறைத்தது. வெள்ளிகள்கூட குறைந்து விட்டன. வானவெளி வெறிச்சோடிக் கிடந்தது. ''அங்கற்றா'' என்று வசந் காட்டினான். ஒரு வெள்ளி பால்வெளியில் ஓடி எரிந்து மறைந்தது. என்னடா அது என வசந்தன் வாயைக் கிண்டினேன்.



தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

"மச்சான் உதைத்தான் வெள்ளி விழுகிறது என்கிறவை. பார்க்கக் கூடாதாம். பாத்தா உடனே பால்மரத்தைப் பாக்க வேணுமாம்." என்று சுழலவிட்டான் கண்ணை. கண்ணுக்கெட்டிய தூரம்வரை மரமேயில்லை. "உதப்பாத்தா ஆராவதுக்கும் என்னமும் நடக்கும் எண்டு அய்யா சொல்லுறவர்" என்றான் அவன். கிராமத்தில் வளர்ந்தவன். அந்த ஆசாரங்கள் இருக்கத்தானே செய்யும்.

"உதெல்லாம் வெறும் கட்டுக்கதையடா. அது வெள்ளியில்லை. ஆகாயக்கல் எண்டு சொல்லுறது" என சிந்து விளக்கம் கூற, அவன் ஏற்றுக்கொள்வதாகத் தெரியவில்லை. சரி கதையை விடு என பேச்சை மாற்றினேன்.

என்னவென்று கதைமாறியது என எனக்குத் தெரியவில்லை. எப்படியோ வீட்டுக்கதை வந்துவிட்டது.

சலாமின் வேகம் குறைந்து ரைக்ரர் நாயாற்றுப்பாலத்தில் இரைச்சலுடன் ஏறியது. நாங்கள் இருக்கும் பெட்டி போன்ற கோபுர ஆயுதம் மிகப் பாரமானது. இழுப்பது கடினம். அதனால் தான் ரைக்ரர் கஷ்டப்பட்டது. ஏறியிறங்கவும் டேவிட் அண்ணரின் ரைக்ரர் வளைவு ஒன்றில் திரும்புவது தெரிந்தது.

சகபோராளிதானே என்று என்னிடம் எல்லாவற்றையும் கூறுவான் வசந்தன்.

"மச்சான் நான் இப்பிடி இருக்கிறன். முந்தின கூத்துக்களைச் சொன்னாச் சிரிப்பாய். வீட்ட தெரியுந்தானே. நானும் அம்மா, அப்பர், அப்பு மற்ற இரண்டு தம்பியும் மூன்று அக்காவும். இது தான் மச்சான் என்ர குடும்பம்.

நான் பிறந்தது தெரியிறதில இருந்து அப்பர் குடிக்கிறது நல்ல ஞாபகம். எந்த நாளும் குடிக்காட்டிலும் கிழமையில் ஒரு நாளைக்கு சின்னத்தம்பியின்ர முட்டியோட வருவார். முட்டியோட புளாவில வாத்துக் குடிக்கிறதெண்டால் வலு சந்தோசமாம். ரண்டு மூண்டு புளாக் கள்ளுக் குடிப்பார்."

"இனிக் குடிக்கமாட்டன்" என சத்தியம் செய்துவிட்டும், புலவிற்குப் போவார். இவ்விதம் தனது இளம்பராயக் கதைகளைக் கூறிக் கொண்டு "அந்தக்காலத்தை மறக்கேலாதடா" என வசந்தனின் பெருமூச்சு எழுந்தது.

"இத்தனை வருசமாய் மனதுக்கை அடக்கிவைத்திருந்தும்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இண்டைக்கு ஏனோ சொல்லோணும் மாதிரிக் கிடந்தது, அதுதான் சொன்னனான்."

"அட, இவ்வளவு முசுப்பாத்தியைச் சொல்லிட்டு ஏன் அழுகிறாய்?" என்றேன். எனக்கு உண்மையில் விளங்கவில்லை.

"அதில்லை மச்சான் பிறகுதானேடா பிரச்சனை வந்தது. அப்புக்கடா கான்சர் வந்திட்டுது. புகையிலைத் தோட்டத்தில் ஆயுதம் தாட்டுக் கிடந்தது எனச் சொல்லி ஆமி வந்து அப்பரைக் கொண்டு போட்டுதடா. பிறகு ஆறேழு நாளையால காதுக் கடுக்கனை வைச்சுத்தான் அடையாளம் பிடிச்சம். ரயர்போட்டு எரிச்சிட்டான்கள்." எங்கோ பார்த்துக் கூறினான்.

"பிறகு நான் இங்க வந்திட்டன். இந்திய ஆமி சுட்டு அம்மாவுக்கு இடுப்புக்கு கீழ வழங்காது. அக்காமார்தான் ஏதோ புலவில வேலைசெய்து வாழ்கினம்."

ரைக்ரர் சில்லு ஒன்று துள்ளித்துள்ளி ஓடியது.

"டேய் சலாம், ஒருக்கா நிற்பாட்டு. டயர் பழுதாப்போட்டுது போல" என்றேன். குலுக்கலுடன் ரைக்ரர் நின்றது.

"ரயர் நட்டை உடைச்சுப் போட்டுது. 8 நட்டில 5 தான் நிற்குது; சிலோவாப் போகலாம்" என்று கூறி, கியரை மாற்றினான்.

அது ஊரத்தொடங்கியது.

"இதிலையெல்லாம் முந்தித் தமிழ்ச்சனம் தான் இருந்தது. இப்ப எல்லாத்தையும் குண்டு போட்டு அழிச்சுப் போட்டான்கள். எவ்வளவு வள்ளங்கள், வலையள எரிச்சுப் பொசுக்கினான்கள். இந்தச் சனம் எல்லாம் எழுந்து எங்கோ போட்டுதுகள். கொஞ்சச் சனம்தான் இருக்குதுகள். எல்லாச்சனமும் நல்ல ஆதரவு மட்டும்" என்று வசந்தன் கூறினான்.

தூரத்தே, கைவிடப்பட்ட குடிசைவீடுகள் பாழடைந்துபோய், கிடுகுகள் எல்லாம் இற்றுப்போய்க் கிடந்தன. சில கொட்டில்கள் குப்புறவீழ்ந்து கிடந்தன. இரண்டொரு கிடுகு மட்டைகள் காற்றில் ஆடுவது நிலவிற்கு உயிரினங்கள் அசைவது போலத் தென்பட்டது.

"அங்க பார்" என்று வசந்தன் காட்டினான்.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

"உதுதான் சின்னச் சின்ன நீர்த்தேக்கங்களுக்குள் மீன் பிடிக்கிற வழி. கடலுக்கதான் போக ஏலாது என்றால் வயிற்றுக்கு என்ன செய்யிறது?"

தேக்கமான நீரின் கரையில் தீப்பந்தங்களை பெரிதாக கொளுத்தி வைத்திருந்தார்கள். திடீரென்று ஒருவர் அவ்விடத்தில் வலையை வீசினார். இன்னொருவர் வலையை இழுத்துப் போட்டார். தூரப் போக ஆட்கள் மறைய ஆரம்பித்தனர். அவர்களின் ஏக்கமான முகங்கள் மட்டும் தெளிவாக உள்ளத்தில் பதிந்துவிட்டன. குடும்பமே திரண்டுநின்று இவ்விதம் மீன்பிடிக்குது என்றால் என்ன வறுமை என, என்னுள் உணர்ந்து கொண்டேன்.

வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்த வசந்தன், "சலாம் லைற்றை நிற்பாட்டு" என்று கத்தினான். இரண்டாம் முறையும் கத்த சலாம் லைற்றை அணைத்தான்.

"என்னடாப்பா கெலியே, கவனமாப் பார். பின்னால் வாறவன்களுக்கு சிக்னல் காட்டுங்கோ" என்றான். நான் ரோச்லைற்றை எடுத்து சங்கேதமாக மும்முறை காட்ட வரிசையான 5 ரைக்ரர்களும் இருட்டாகி நின்றன.

வானத்தில் நிலவைக் கடந்து ஒரு கெலி சென்றது. விளக்குகள் அணைந்ததை அவதானித்தான் போலும். சடுதியாக மடக்கிவெட்டி சுற்றத் தொடங்கினான். அவரவர் ஆயுதங்களையும் பொருட்களையும் எடுத்துக்கொண்டு வீதியைக் கடந்து ஓடினோம். எல்லோரையும் நிலையெடுக்கக் கூறினார் டேவிட் அண்ணர். நான் வோக்கி டோக்கியை அலைவரிசையில் விட்டு, பின் ஜி.பி.எம்.ஜி வைத்திருந்த டாவினை அழைத்துக்கொண்டு ஒரு மரத்தின் பின் சென்றேன்.

இரண்டாவது தடவை சுற்றியபின் நல்லாகச் சரியத்தொடங்கி, வீதியை நோக்கி 50 கலிபரை இயக்கத் தொடங்கினான் எதிரி. ரேசர் ரவைகள் சீறிப் பாய்ந்தன. சில ரவைகள் தரையில் பட்டு வெடித்தன. வோக்கியில் டேவிட் அண்ணர். கட்டளைகள் பிறப்பிக்க ஆரம்பித்தார். "அவன் கீழ செய்யப்பார்த்தா பெரிசால 100 கொடு" என்றார்.

திடீரென்று பம் என்ற சத்தத்துடன் ஏதோ இரைந்தது. "மச்சான் பரா அடிச்சிட்டான். படுங்கோடா. இண்டைக்கு கண்டான் எண்டால் புக்கைதான். ஏலுமெண்டால் முன்னாலை செல்லுங்கோ" என்றார் டேவிட். மண்கும்பிக்கு பின்னால் நின்ற

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

சலாம் ரைக்ரரை நோக்கி ஓடினான். இடையே 5 அங்குல ஷெல்களை ஹெலி வீசியது. டும்.. டும்.. என புகை எழுந்து நிலம் அதிர்ந்தது. சலாம் ரைக்ரரை இயக்கி அக்சிலேட்டரை மிதித்தான். பரா வெளிச்சத்தில் ஹெலி பதியத்தொடங்கியது. ரைக்ரருக்குப் பின்புறமாக வீதி மேலாக சென்றால் இலகுவாக 5 அங்குல ஷெல்லை வீசலாம் என எண்ணியதாய் வீதியில் நன்றாய் பதிந்தது.

"டாவின் அலேட்" எனக் கத்தியபடி நான் உத்தரவை வழங்க ஜி.பி.எம்.ஜி. நெருப்பைக் கக்கத் தொடங்கியது. எதிரிகள் இதை எதிர்பார்க்கவில்லை. சடுதியாய் மேலெழுந்து 50 கலிபரால் அடித்தபடியே மறைந்தது. முறையாய் கொழுவிவிட்டுது போல என்று சந்தோசமாய் சிரித்தான் நேசன். ஜி.பி.எம்.ஜி. பரல் சிவந்து கிடந்தது. ரோச்லைற்றை அடித்து லிங்குகளைப் பொறுக்க ஆரம்பித்தான். "நாம் ஒரு நாட்டு இராணுவமல்ல, போராளிகள். எமக்கு உதவிகள் குறைவு. நாம் மிக சிக்கனமாக இருக்கவேண்டும். ஒவ்வொரு ரவையும் ஒவ்வொரு ஆக்கிரமிப்பாளனைக் கொல்லவேண்டும். வீணான ஆயுத பாவனையைத் தவிர்க்க வேண்டும்" என்று சொல்லும் செல்வராஜா மாஸ்டரின் நினைவு வந்தது.

ரைக்ரர் பயணம் ஆரம்பமானது. எல்லோரும் வானை நோக்கி தயாராக இருந்தார்கள். போன ஹெலி மீண்டும் வரலாம் அல்லது வேறுவகை எதிர்ப்புகளைத் தர முயல்வார்கள் என்று எண்ணியிருந்தோம். சில்லு துள்ளித் துள்ளிச் சென்றது. டெலிக்கா வான் லைற் ஒன்று வேகமாய் வந்து நின்றது. ரைக்ரர் சைற்றுக்காக ஒதுங்கியது. வானில் இடப்புறமாக அரசியல் பொறுப்பாளர் ரமேஸ் அப்பா இருந்தார். என்னமாதிரி ஹெலி அடி என்று கேட்டேன். அவன் போட்ட 5 அங்குலம் ஒன்று விழுந்து வெடித்து மீன் பிடித்துக்கொண்டிருந்த குடும்பத்தில் ஒரு ஆள் சரி; 2 பேருக்குக் காயம் என்றவர், வேகமாய் பறந்தார். எமது அரசியல் பொறுப்பாளர்களையும் அன்றைய மூத்த அரசியல்வாதிகளையும் ஒருகணம் நெஞ்சில் எண்ணிக் கொண்டேன். அந்த நீர்த்தேக்கத்தில் மீன் பிடித்து நின்ற குடும்பம் மனதில் வந்து மறைந்தது. விழியில் வடிந்த துளி நீர் ரைபிளின் மகசீனில் பட்டுத் தெறித்தது. அலட்சியமாய் உதறிய பின் வீதியைப் பார்த்தேன்.

அலம்பிலில் பெரும் தென்னந்தோப்புகள் எங்கும் பரவிக்


தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

கிடந்தன. நல்ல வளமான பூமி. இத் தென்னைகளால் வரும் வருமானமே எமக்குப் பெருமளவு போதுமானதாக அமையும் என எண்ணினேன். பெரிய குடை போன்ற தென்னைகள் சுமக்கமுடியாமல் தேங்காய்களைச் சுமந்தவண்ணம் காற்றில் தலைவிரிகோலமாகத் தள்ளாடுவது பார்க்கப் பயமாக இருந்தது.

இடையிடையே பெரும் பெரும் விருட்சங்கள் மலைகள் ஆகாயத்தில் தொங்குவதாய் தள்ளாடி நின்றன. தண்ணிமுறிப்பு நீர் கால்வாய்களை நிறைத்துக்கொண்டு பாய்ந்தது. அந்த அலைகள் கற்களைத் தாண்டிக் குதிக்கையில் நிலாவொளி பட்டு முத்து முத்தாய்த் தெறித்தன. நீர்க்கோளங்கள் மோதிமோதிச் சிதறின. வாய்க்கால் கரைகளில் மூடி வளர்ந்திருந்த நீர்ச்செடிகள் குலுங்குவது தனிக்காட்சியாய் இருந்தது.

அலம்பில் சந்தியால் குமுழமுனை வீதியில் ரைக்ரர் திரும்பியது.

"மச்சான் றோட்டுச் சரியில்லை பார்த்து ஓடு. இல்லாட்டிப் பிரட்டிப் போடும்" என்ற வசந்தன், பின்புறமாய் திரும்பி வானத்தைப் பார்த்தான். முகிலை நீக்கிய நிலா எங்கும் பரந்துகொண்டிருந்தது.

குமுழமுனை வீதியின் மருங்குகள் தோறும் பெரிய வயல் நிலங்கள் விதைக்கப்பட்டு இளந்தளிர் தள்ளி வயலே நிரம்பி வழிந்தது. களனிகள் அருகே கால்வாய்களில் நீர் நெளிந்து ஓடியது. அது தண்ணி முறிப்பு நீர் வாய்க்கால் வழியோடி வயலுக்குப் பாய்கிறது. வயலுக்கு மேலாக எங்களையும் கடந்து அவலமாகக் கத்தியபடி ஆள்காட்டிக் குருவி பறக்கிறது. இதற்கு உறக்கமே இல்லையா? சிறுவயதில் தாத்தா கூறுவார் "உந்த ஆள்காட்டி தம்பி, இனி உயிரோட இராது. அதின்ரை சோடியைத் தேடித்தான் கத்தும். பிறகு எங்கேனும் விழுந்து சாகும்" என்பார். அப்பிடியென்றால் உவ்வளவு ஆள்காட்டியும் என்னென்று உயிரோட திரியுது என ஒருநாளும் நான் கேட்கேல்ல. அட கேட்டு மடக்கியிருக்கலாம் என மனம் குழந்தையாய் எண்ணியது.

தூரத்தே ஆறேழு பனைகள் தனித்து நின்றன.

நேரம் 11.52 இரவு எனக் கடிகாரம் காட்டியது. எப்படியும் போய்ச் சேர இரண்டு நாளாவது வேணும் என்று எண்ணினேன். வசந்தன் ரி.56ஐ தடவியபடி ஏதோ யோசனையில் இருந்தான்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

குமுழமுனை நேர்வீதி சென்று திரும்பும் வளைவு. அதன் ஓரத்தே நாவலொன்று சாய்ந்து வீதியில் வேர் புடைத்துப்போய் இருந்தது. சலாம் இரண்டு கைகளையும் ஸ்ரேறிங்கில் வைத்து லாவகமாகத் திருப்பினான். அக்கறையாய் அவதானமாய்த் திருப்பினான். எத்தனையோ தடவை திருப்பிப் பழக்கப்பட்டவன் அவன். உடம்பும் சேர்ந்து திரும்பியது. அட அவ்வளவு பெரிய முடக்கோ இப்பிடித் திருப்பிறான். சலாமின் உடலில் ஏதோ அவசரம், ஏதோ நடக்கக்கூடாதது நடந்துவிட்டதாய், வியர்த்து விறுவிறுத்து பேயறைந்ததாய்க் கத்தினான். "டேய் பின்னாலை குதியுங்கோடா! ஸ்ரேரிங் றொட் உடைத்துப்போட்டுது!"

பின்னிருந்த நான் ஒரே தாவலாய்த் தாவினேன். தாவும்போதே திரும்பிப் பார்த்தபோது வசந்தன் நித்திரை தூங்கினான். இல்லையில்லை, துரோணர் போல் நிஷ்டையில் இருந்தானோ?

"டேய் வசந்த், டேய் குதியடா அடிபடப்போகுது!"

உடலிலுள்ள சக்தியெல்லாம் திரட்டி அப்படியே தொண்டைக்குக் கொண்டுவந்து குரல்கொடுத்துக் கத்தினேன். காட்டுக் கத்தலாய் அட்ட திக்கும் அதிர்ந்தது. பாலைமரமும், வீரைமரமும் ஒருமுறை அசைந்தன. நிலவு ஒருமுறை அழுதது. மரத்திலிருந்த பறவைகள் கத்தியபடி கலைந்தன. பட்டியில் நின்ற பசுக்கள் ஒருமுறை அம்மா என்றன. ஆட்காட்டி ஒன்றை ஒன்று துரத்திக் கத்தியது. மயில் ஒன்று அவலமாய் அகவியது. ஊர்மக்கள் எல்லோரும் எழுந்துகொண்டனர். ஒரு துளி இரத்தம் என்னில் தெறித்தது. நாவல் வேரில் ரைக்ரர் ஏறி இறங்கியிருக்க, பின்னால் வந்த உயரமான அந்தப் பெட்டி ஏறி வீதிப்புறமாய் கவிழ்ந் திருந்தது. விழுந்த நோவையும் மறந்து வேகமாய் ஓடினேன். டேய், வசந்! வசந்! மீண்டும் அதே காட்டுக்கத்தல். சலாமும் இதயனும் இரும்புச் சனியனுக்குள் அகப்பட்ட தோழனை, உயிரான நண்பனை மீட்டெடுக்கப் போராடினர். ம்..ம்..ம்.. மூச்சு முட்டி, விழி பிதுங்கி வெளியே வருமோ எனும் கோரமாய் இருந்தான் வசந். இயலுமட்டும் இழுத்துப் பார்த்தபின் பின்னே திரும்பி குடிசைகளைப் பார்த்து அழுகையோடு, "யாராவது வாருங்களேன் என் வசந்தை மீட்க...." உரத்துக் கத்தினேன். அது காற்றைக் கிழித்து படலையைப் பிரித்து வீட்டுத் திண்ணையில் அப்புவையும் அம்மாவையும், அக்காவையும், அண்ணாக்களையும் எழுப்பியது. "எல்லோரும் வாருங்களேன்...... எல்லோரும் வாருங்களேன்"

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அந்த அழகான வைக்கோலால் வேயப்பட்ட குடிலுக்குள், வீட்டின் ஒரேயொரு பஞ்சு மெத்தையின்மீது வசந் கிடந்தான், அரைமயக்கமாக. வலதுகை தோள்மூட்டுடனும், இடதுகை முழங்கைக்குக் கீழாகவும் சிதைந்து தொங்கியது. மூச்சு மேலும் கீழுமாய் ஏறி இறங்கிக் கொண்டிருந்தது. இரண்டு கைகளுக்கும் இவ்விரண்டு தலையணையாக, வீட்டில் இருந்த எல்லாத் தலையணைகளும் இரத்தத்தால் தோய்ந்து கிடந்தன. அந்த அம்மா, பாசம் மிகுந்த தாய், அன்பான அக்காவின் கரத்திலிருந்த சூடான கோப்பியை விரைவாக வாங்கி வசந்தின் உதட்டோரம் சரித்தார். முதிர்ந்த ஐயா வசந்தைப் பார்த்தபின் பசுக்களின் பட்டியோரம் போனார், கொஞ்சம் பால் எடுக்க. பசுக்கன்று ஒன்று அம்மா என அழுதடங்கியது.

டேவிட் அண்ணர் வோக்கியில் 'சுப்பர்ரொட்' மாற்றி உடனே வாகனத்தைக் கொண்டுவருமாறு பணித்தார். இடையில் கிராமத்தில் இருக்கும் மருத்துவபீட மாணவன் ஒருவன் பூரண முதலுதவி சிகிச்சையை மேற்கொண்டபின், வலியம் 3 மில்லிலீற்றர் மயக்க ஊசி மருந்தைச் செலுத்திய பின் வசந் கொஞ்சம் அமைதியானான். என்னருகே இருந்து இவ்வளவு காலமும் எங்களுடன் ஒன்றாய்த் துயின்ற மண்ணின் மைந்தன் களப்படுக்கையில் இருக்கின்றான். அருகே அமைதியாக இருந்த அக்காவுடன் கதைக்கத்தொடங்கினான். வசந் என்னடா உரையாடுறான் என்று வியந்தேன்.

"அக்கா, அக்க....." இழுத்தது குரல்.

"உம், என்ன தம்பி?"

"நீங்க சரியா எங்கட மூத்தக்கா வித்தி மாதிரி. எங்கக்கா இப்ப என்ன செய்வா? சின்னத்தம்பிக்கு பக்கத்தில படுத்திருப்பாவோ? தோட்ட வேலை செய்து கஸ்டப்படுங்கள். எல்லாம் ஆமியால..... எளிய சிங்களவங்கள்..... எங்கட அப்பர் குடிச்சாலும் நல்லவர். ஐயோ, அய்யா....." வேதனை மிகுந்த அந்த தீனமான குரல் மெல்லிய அலையாக ஒலித்தது.

முற்றத்தில் நின்ற நாய் மெதுவாய் ஊளையிடத்தொடங்கியது. ஊ....ஊ..... என உயிரையே துளைத்துவிடும் தொனி. தேங்காய் நெய்விளக்கு உயிரற்று எரிந்தது. மஞ்சளாய் உருகி உருகி அழுதது. விட்டிலொன்று திரியில் பட சிறகுகள் கொஞ்சம் வெளிச்சமாய் எரிய, பின் எண்ணெய்க்குள் விழுந்து துடித்தது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

எண்ணெய் அலையோடு ஆடியபின் ஓரமாய் ஒதுங்கியது.

தூரத்தே வாகனமொன்றின் இரைச்சல் அருவியோட்டத்தின் மேலாகத் தவழ்ந்து வருகிறது. அவ்விதம் வந்த டெலிக்கா வான் வசந்தைத் தாங்கிய வண்ணம் மீண்டும் வேகமாய் நகரத்தொடங்குகிறது. நான் வசந்தின் பக்கத்தினின்று அவனை ஆதரவாகப் பிடித்திருந்தேன். குருதிப் பெருக்கினால் அவன் பலம் குறைவது தெரிந்தது. வெள்ளமலை ஏற்றமடியில் கிறீஸ் என்ற சத்தத்தோடு வான் ஒரு புறமாக இழுபட்டுப்போய் நின்றது. காற்றுப்போட்டுது போல என வாகனத்தை ஓட்டிய தோழன் கூறியபடி இறங்கினான். வேறுவழியில்லாமல் வோக்கி டோக்கியில் தொடர்பு கொண்டு வேறு வாகனத்தை அழைத்தேன்.

எதிர்ப்புறமாக வந்த ஜீப்பை மறித்து வசந்தை ஏற்றிவிட்டபின் அவனது சொரசொரப்பான கன்னத்தை அன்போடு வருடிவிட்டு நான் விடைபெறவேண்டியவனானேன். "லியோ, என்னைத் தனியே விட்டிட்டுப் போகாதே!" எனப் புலம்பினான். நான் என்ன செய்ய? வாகனம் மறையும் வரை என் நெஞ்சமும் அதன்பின் ஓடிக்கொண்டிருந்தது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# 2

வானிற்கு எக்ஸ்ராவீலை மாற்றிக்கொண்டு குமுழமுனை நோக்கிப் பயணமானோம். அப்போ நேரம் 5.35 அதிகாலை. எந்தப் பெரிய காடுகள்! அவற்றிற்குக் குறுக்காக பெரும் கால்வாய்களில் மாரிவெள்ளம் சீறிப்பாய்ந்து வந்தது.

“இங்க இப்படித்தான் தண்ணி எக்கச்சக்கமாகப் பாயும். சில நேரம் றோட்டையும் மூடிப் பாயும். பெரிய பெரிய பாலை, வீரை மரங்களையெல்லாம் பிரட்டிப்போடும்” நான் வேறுபகுதியை சேர்ந்தவன் என அவன் இனங்கண்டுவிட்டான் போலும்!

ஒரு பெரிய பாலத்தடியில் திடீர் பிறேக் போட்டு நிற்பாட்டினான். “அங்க பாரும் அந்த பாலைக்கட்டையிலை முதலையொன்று கிடக்குது” எனச் சுட்டிக்காட்டினான்.

“எங்க கிடக்குது?” உண்மையில் எனக்கு சரியாகத் தெரியவில்லை.

“அங்கபாரும் அந்தப் பாலையிலை” என்று எனக்குச் சுட்டிக்காட்டினான். ஒரு பெரிய முதலை, மரத்தோடு மரமாக ஒட்டிக் கிடந்தது. கொஞ்சமும் வித்தியாசம் தெரியாமல் இருந்தது.

“உது இப்பிடித்தான் இருக்கும். ஏதாவது இரைகள் ஆடு மாடுகள் அகப்பட்டால் அவ்வளவுதான்! பிடிச்சா விடாது. முந்தி இப்பிடித்தான் நான் சின்னவனாயிருக்கும் போது, எங்கட பசுவும்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கன்றும் மேயப்போனதுகள். மத்தியான வெய்யிலுக்கை தண்ணி குடிக்கப்போன கன்றை பெரிய முதலை பிடிச்சுக்கொண்டு போட்டுது. இரவு எல்லா மாடும் பட்டிக்கு வந்தும் வெள்ளைப் பசுவைக் காணேல்ல. என்னையும் அண்ணாவையும் அப்பு அனுப்பினார் பார்க்கிறதுக்கு. எல்லா இடத்தில் தேடியும் காணேல்ல. பின் தண்ணி குடிக்கிற இடத்துக்குக் கிட்ட போகேக்க பசு கதறின சத்தம் கேட்டுப் போய்ப்பார்த்தா பசு நின்றது.

அண்ணாதான் சுருக்கைப் போட்டு இழுத்தவர். பசு வரமாட்டன் என்றுட்டுது. பிறகு அப்பாவிடம் போய் சொல்ல இன்னும் இரண்டுபேரும் வந்து கட்டி இழுத்துக்கொண்டு வந்திச்சினம்."

"பிறகு?" என்றேன் ஆவலாக,

"பிறகென்ன? கொஞ்ச காலத்தில் சாப்பிடாமல் செத்துப்போச்சு" என்றான். எனக்கு வசந்தின் அம்மா முகம்தான் நினைவில வந்தது. பசுக்களைப்போல அம்மாக்களும் இருப்பார்களே. அதுகளைப் போலச் சாப்பிடாமல் கிடந்து ஒருவேளை அதுகளைப் போலவே... சே, என் கற்பனை. அதுகள் ஐந்தறிவு பிராணிகள். என்னைத் தேற்றிக்கொண்டேன். சில கணங்களில் திடுக்கிட்டு வெளியே பார்க்கிறேன். பாலத்தைக் கடந்து வெகுதூரம் வந்துவிட்டோம்.

வாகனம் தனிக்காட்டைத் தாண்டி முள்ளியவளை கிராமத்துக்குள் நுழைந்தது. அதிகாலைப் பனிப்படலம் இன்னமும் முற்றாக நீங்கவில்லை. வாகனத்தின் முன் வருவனவற்றை இன்னதென நிச்சயிக்க முடியாத நிலையாக இருந்தது. அதனால் மெதுவாகச் செல்லவேண்டிய அவசியம் ஏற்பட்டது. பாதை நெடுகிலும் அங்கொன்றும் இங்கொன்றுமாய் தேநீர்க்கடை லாந்தர் விளக்குகள் தூங்கி வழிந்துகொண்டிருந்தன. அவற்றின் மஞ்சள் ஒளி பனிப்புகாருடாக விட்டு விட்டுத் தெரிந்துகொண்டிருந்தது.

முள்ளியவளையில் ஒரு கடையில் தரித்து, தேநீரைச் சுடச் சுட அருந்திவிட்டுப் புறப்பட்டோம். இரத்த உடையுடன் இருந்த என்னை முழுவியளமாய் ஏற்க கடைக்காரர் விரும்பவில்லை என்பதை, அவரது முகம் காட்டியது. வசந்திற்கு கோப்பி கொடுத்த அம்மாவை ஒருகணம் நினைத்தபடி வானில் அமர்ந்தேன்.

தூரத்தே முறிப்புக் குளக்கட்டு தெரிய ஆரம்பித்தது. கட்டுக்கு இப்பால் வயல்வெளி பரந்து காணப்பட்டது. பார்க்குமிடமெல்லாம்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பசேலென இருந்தது. குளக்கட்டுப்புறமாக கூழைக்கடாப் பறவைகள் கூட்டமாய்ப் பறந்துபோய்க் குளத்தில் இறங்கியிருக்க வேண்டும். வயலுக்குள் இருந்த கொக்குகள் ஏர் பிடித்த உழவனுக்கு போக்குக் காட்டிப் பறந்து, அப்பால் இறங்கின. சட்டென திடுக்குற்றேன். எங்கோ அபரிதமாய் கேட்ட அந்த அவலக்குரல் ஞாபகம் வந்தது. அது ஆட்காட்டியின் குரல்தான். அது ரோட்டைக் கடந்து பறந்து மறைந்துபோனது. நாங்கள் இறங்கினோம். எனது இதயத்தில் அதன் ஒலி எதிரொலித்துக் கொண்டிருந்தது. கண்ணயர்ந்தேன். "மச்சான் நான் படுக்கப்போறன். மத்தியானம் எழுப்புங்கோ" என்று சொல்லிவிட்டு, பெரிய பாலை மரத்தின் கீழ் சாக்குகளைப் போட்டுவிட்டு, என்னுடைய புத்தகப் பையைத் தலையணையாக்கி உறங்கிப் போனேன்.

மதியவேளை 12.30 அளவில் திடுக்குற்றுக் கலைந்தேன். எனக்குப் பெரும் வியப்பாக இருந்தது. ஏராளமான பாடசாலைச் சிறுவர், சிறுமிகள் சூழ்ந்து நின்றார்கள். அவர்களுக்கு இதயனும் சலாமும் போக்குக் காட்டிக்கொண்டிருந்தார்கள். குழந்தைகள் ஒரேயடியாகக் கேள்விகேட்டு அமர்க்களப்படுத்தினார்கள்.

"இது எப்படி அண்ணை சுடுறது. எங்கட அப்பாவின்ர துவக்கு பொல்லுமாதிரி நீட்டெல்லோ?" சிறிய அண்ணனை உசுப்பினாள்.

"அது வேறயடி. சொட்கன் என்றது ஒருக்காத்தான் சுடலாம். இதில இதுக்க கிடக்கிற கனக்க குண்டுகளையும் ஒரேயடியாக சுடலாம்"

எல்லாக் குழந்தைகளும் அவனைப் பார்த்தன. "எங்கை குண்டைப் பார்ப்போம்" என, இதயன் மகசீனைக் கழற்றி ஒரு ரவையை நீட்டி, "எல்லோரும் பார்த்திட்டுத் தாங்கோ" என்றான். ஆவலாய்ப் பார்த்தன குழந்தைகள்.

"எனக்கும் இதில ஒன்று வேணும்"

"இப்ப வேண்டாம், வளர்ந்தாப் பிறகு எல்லாம் தருவம்"

"நீங்க எத்தனை ஆமியைச் சுட்டனீங்கள்?"

"ஏன் சுடவேணும், அவங்கள் பாவங்களெல்லே?"

"அப்ப எங்கட..... மாமாவை, பெரியப்புவை ஏன் சுட்டவங்கள்?"

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

"குஞ்சுக்கு ஆர் சொன்னது அவங்கள் சுட்டதென்று?"

"நான் சின்னனா அம்மாவின்ர மடியில இருக்கேக்க வீட்டுக்குள் புகுந்து சுட்டவங்களாம். அம்மாவின்ர கையிலும் காயம். மாமா நல்லவர். ஒவ்வொரு நாளும் ரோட்டால கூட்டிப்போவார். இனிப்பு, வாழைப்பழம் எல்லாம் வாங்கித்தருவார். எனக்கு காய்ச்சலாய் கிடக்கேக்க இரவிலையும் மருந்து வாங்க கூட்டிப்போனவர் என அம்மா சொல்லுறவ."

"அப்ப உங்களுக்கு அழுகை வரேல்லையோ?"

"ஓ, நிறைய நேரம் அழுவேன். அப்ப அம்மா சொல்லுவா, நீ அழாதே வளர்ந்தாப் பிறகு அவங்களை நீதான் சுடவேணும் என்று எனக்குச் சொல்லுவ. வளரமுதல் வந்து என்னையும் கொண்டுபோடுவாங்களோ?"

நீர்த்திரை கட்டியது. குழந்தையை இறுக அணைத்தபடி, "நாங்கள் ஏன் இருக்கிறம்? கட்டாயம் அவங்களைக் கொல்லுவம்." பற்களை நறும குழந்தை பயத்துடன் பார்த்தது. மறுபடி இதயன் சிரித்துக்கொண்டு பூவை அணைத்துக்கொண்டான். சலாம் கொட்டாவி விட்டான்.

"அண்ணா எப்ப சாப்பிட்டனீங்க?"

கிராமத்துப் பிள்ளைகள் இப்ப என்ன சாப்பிட்டனி என கேட்பதை விட, எப்ப சாப்பிட்டனீங்க என்றுதான் கேட்குமோ என மனதுள் எண்ணிக்கொண்டேன்.

"ராத்திரிக்குப் பிறகு ஒன்றும் சாப்பிடேல்ல" என கையால் காட்டினான் சலாம்.

சரியான தீனிமாடு!

எமது ஆயுதங்களை நெடுநேரமாகப் பார்த்த பிள்ளைகள் ஏற இறங்கப் பார்த்துவிட்டு, நாகரிகமாய் டாட்டா சொல்லாமல், போட்டுவாறம் என கையசைத்து விடைபெற்றனர். மறையும் வரை நாங்களும் கைகளைக் காட்டினோம். தூரத்தே வண்ணத்துப் பூச்சிகளாக மறைந்து போனார்கள். தூரத்தே ஒரு அம்மா குடத்து நீரை இடுப்பில் சுமந்துவர, அருகே சிறுமி ஒருத்தி ஊமல் பையுடன் வந்துகொண்டிருந்தாள். நல்ல வெய்யில் சுட்டு எரித்துக்கொண்டிருந்தது. பாதணியற்ற பாதத்துடன் வரும் அவர்கள் எப்படித் தவிப்பார்கள்! கறுப்புத் தார்வீதி கிடங்கும்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

குழியுமாய் விரிந்து கிடந்தது.

"இப்ப சாப்பாட்டுக்கு என்ன செய்யிறது மச்சான்?"

"வோக்கி எடுத்துப்பார். நான் நினைக்கேல்ல இருக்குமென்று. இண்டைக்கு சில பட்டினிதான் போல. காட்டுக்க மூன்றுநேரமும் வடிவாத் திண்ட உனக்கு கஸ்டமாய்த்தான் இருக்கும்."

இதயன் சலாமைச் சொறிய ஆரம்பித்தான். ஏற்கனவே கொட்டாவி விட்டவனுக்கு நல்லா ஏற, அருகே கிடந்த கட்டையால் வீசினான்.

"றோட்டால வந்த அம்மா இஞ்சதான்ரா வாறா."

அம்மா களைப்புடன் குடத்தை இறக்கி வைத்துவிட்டு பாசமாய்ச் சிரித்தாள்.

"என்ன பிள்ளையள் வாடிப்போனியள். ராவும் நித்திரை முழிப்புப் போல. குடத்துத் தண்ணீரில கையைக் கழுவிவிட்டுச் சாப்பிடுங்கோ, பிறகு உடம்புக்கு ஏதும் செய்தாலும்."

எல்லாம் அறிந்தவள் போல கூறிச் சிரித்தாள். சிறுமி பையை வைத்துவிட்டு ஆயுதங்களைப் பார்க்கப் போனாள்.

"அது வெடிக்கும் தங்கச்சி கவனம்"

"இல்ல இல்ல" என மழலை சிரித்தது.

"நீங்கள் சாப்பிட்டியளோ?"

"இல்ல, நீங்க சாப்பிடுங்கோ. நான் பிறகு சாப்பிடுறன்."

"அது சரிவராது. எல்லோரும் ஒன்றாய்த்தான் சாப்பிடோணும்."

இதயன் சிறுமியைத் தூக்கிவந்து மடியில் வைத்துக் கொண்டான். பள்ளியால் வந்த அவள் தண்ணீரைக் குடித்துவிட்டுத்தான் வந்திருந்தாள்.

கவளம் கவளமாய் சோற்றை அம்மா திரட்டித் தர உண்டு முடித்தோம். தயிரின் நெய் வாசனை தாளவில்லை. "திறமான சாப்பாடு" சலாம் சொன்னான்.

"அம்மான்ர பிள்ளையள் என்ன செய்யினம்?" உணவு இறங்கியவுடன் பழங்கணக்குக் கிளறத் தொடங்கினான் சலாம்.

"மூத்தது உங்களோட. மற்றது உது. இரண்டும்தான்."

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஐந்தாறு அம்மாக்கள் இப்படி உணவுடன் படையெடுக்க களைத்துப்போன நாங்கள், ஐயோ காணும், ஐயோ காணும் என குழறினோம்.

அருவி பாய்கிறதா, அன்பு பாய்கிறதா, தெரியவில்லை. பிற்பகல் 6.30. குமுழமுனையின் அரைவாசி மக்களைக் கண்டு கையசைத்த வண்ணம் நகரத்தொடங்கினோம், வசந்தனின்றி.

எனக்குப் பின்னால் இருக்க மனம் வராததால் முன்னே சென்று மட்காட்டில் ஏறிக்கொண்டேன். வாகனம் குலுக்கியபடி மெதுவாக அசையத்தொடங்கிய பின்னர் தன் வேகத்தைக் கூட்டியது. நான் பின்னால் திரும்பிப் பார்த்தேன். வசந்தனை இப்ப யாழ்ப்பாணம் கொண்டுபோயிருப்பாங்களோ? ஓ, என விரைவாக தலையாட்டினேன். பார் வெளிக்கிட்டு கொஞ்ச நேரத்தில் ஒன்று ம்... ம்... இந்த சண்டையில முன்வரிசையில் அவனையல்லா எதிர்பார்த்தன்? உயிருக்கேதாவது? சீ! அப்பிடியிராதென்று நினைக்கிறன். மூவரும் அமைதியடைய ரைக்ரர் சில்லு தூரத்தை விழுங்கிக் கொண்டிருந்தது. மேற்கில் சூரியன் மௌனமாக அமிழத் தொடங்கினான். அவனின் அந்தச் செந்நிறக் கதிரினால் வானமே சிவப்புக் குழம்பாகத் தோன்றிற்று. முகில்களில் கூட அந்தச் செம்மை பற்றித் தெறித்தது.

பெரிய வயல்வெளியில் தேங்கிய நீர்கூட சிவப்பாகத் தெறித்து சோகம் கொண்டாடியது. செவ்வானத்திடையே வெண்ணிறக் கொக்குகள் ஊடுருவிப் பறந்தன. மாடுகள் பட்டியாய்த் திரும்பிக்கொண்டிருந்தன. ஒரு தாய்ப்பசுவை கன்று இடைவிடாது மடியை முட்டி உபத்திரவம் செய்துகொண்டே போயிற்று. ஆவலுடன் அதைத் திரும்பிப் பார்த்தேன். நெஞ்சிலோர் வருடல்.

"மச்சான், அதில துவக்கோட நிக்கிறவருக்குப் பக்கத்தில நிற்பாட்டு" வாகனம் ஊர்ந்துசென்று நின்றது. ஒரு தந்தையும் மகனுமாய் இருக்கவேண்டும்.

தந்தைக்கு 70 வயதளவிலும் மகனுக்கு 45 வயதும் இருக்கும் போல தென்பட்டது. வீட்டு வாசலில் குடும்பத்துடன் கதைத்துக்கொண்டிருந்தார்.

"என்ன தம்பியவை வேணும்?"

"ஒன்றுமில்ல நீங்கள் கதையுங்கோ. தண்ணீர்க்கான்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

சரிஞ்சிட்டுது போல, அதப் பார்க்கத்தான் நிற்பாட்டினாங்கள்." "நல்லாப் பொய்சொல்லுகிறான்" என இதயன் முணுமுணுத்தான்.

"என்னப்பா போறியள். எப்ப வருவியள்?" என்றாள் அம்மா. ஐயாவின் மனைவியாக இருக்க வேண்டும்.

"இண்டைக்குத் தங்கம் அவசரமாய் போறம். எப்ப வாறமோ சொல்லேலாது. ஏன், வீட்டில எல்லாம் கிடக்குத்தானே?"

"இஞ்ச எல்லாம் கிடக்கு. பேரனுக்கு இரண்டு நாளா காய்ச்சல். அதுதான் யோசிக்கிறம்."

"அப்படியேதும் அவசரமென்றால் பக்கத்துவீட்டு சின்னப்புவைக் கூப்பிடு. அவன் வருவான். நானும் சொல்லிட்டுப் போறன்." வீட்டுக்குள்ளிருந்து மருமகள் வெளிக்கிட்டாள்.

"இந்தாங்கோ சாப்பாடு."

"என்ன ஆக்கினனி?" மகன் கேட்டான்.

"புட்டும் மீன்குழம்பும் இருக்கு. உங்களுக்குப் பிடிச்ச சாப்பாட்டத்தான் செய்தன்."

அன்புடன் மனைவியைப் பார்த்தான்.

"மெய்யேப்பா உவன் சின்னவனுக்கு காய்ச்சலும் மாறுதில்லை. கெதியாய் வந்தியள் என்றால் ஒருக்கால் முள்ளியவளைப் பக்கம் கொண்டு போகலாம்."

"அம்மா, தம்பி இப்பவும் வாந்தி எடுத்திட்டான்" இது மூத்தமகள்.

"நில்லப்பு வாறன்."

உள்ளே ஓடிச் சென்று குழந்தையைத் தூக்கிக் கொண்டான். அருகே மனைவி, முற்றத்தில் வைத்து முத்தமிட்டபின் கொடுத்தான்.

"நான் கெதியாய் வந்திடுவன். என்னைப் பாராமல் நீ மருந்தைப்போய் எடு."

"அப்பு இந்தமுறை எத்தனை ஆமியள் சுடுவியள்?" பேரன் இடுப்பில் வைத்தபடி கேட்டான்.

"உதுக்கெல்லாம் கணக்கோடா பொடி. வாற ஆமிக்காரனை

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

யும், காடையனையும் நான் உசிரோட இருக்கும் வரை சுடுவன்."

"உசிரில்லாட்டி?"

"நீ ஏன்ரா பொடி இருக்கிறாய்? நான் போனா நீதான் சுடவேணும். இல்லாட்டி எங்கட வீட்டில இருந்து புலவுகளையும், உன்ர அம்மாச்சிப் பசுவையும் கன்றையும் கூட கொண்டு போயிடுவான்கள். பிறகு அடுத்தவன்ரை கொட்டிலிலதான் இருப்பாய்."

"அப்ப, ஏனப்பு எனக்கு நீ காட்டித் தரேல்ல?"

"நீ இப்ப சுட்டா உன்னை துவக்கு இழுத்துக்கொண்டு போயிடும். நீ வளர்ந்தாப்பிறகு பழகலாம். அப்ப போட்டுவாறம். பிள்ளையள், பொடியக் காட்டி மருந்தை எடுங்கோ"

ஐயா, மகனுடன் எம்பக்கம் விரைந்தார். "ஐயாவுக்கு கதையைக் குடு. தண்ணி வாங்கிக் கொண்டு வாறன்." என்றேன்.

"அம்மா, கொஞ்சம் தண்ணி"

மூத்த மகள் கானைக் கொண்டு போனாள். சிறுமி ஓடிவந்தாள்.

"அம்மா பட்டியில அம்மாச்சி பசுவைக் காணேல்ல. மற்றதெல்லாம் நிக்குது."

ஒருகணம் திகைத்து மறுகணம் குரலை உயர்த்திய மகளை இழுத்து வாயைப் பொத்தி, உள்ளே இழுத்துச் சென்றாள்.

"கொப்பர் போற நேரத்தில் கத்தாதை, வா இரண்டுபேரும் போய்ப் பார்த்து வருவம்." மெல்லியதாய்க் கேட்டது.

வீதியால் வந்து என்னைக் கடந்துகொண்டு வெள்ளைப் பசு ஒன்று கன்றுடன் புகுந்தது. "இங்க நிக்குது" ஓடிவந்து கட்டிக்கொண்டு முத்தமழை பொழிந்தான். அதுவும் நாக்கால் நக்கியது. கன்று இவனை செல்லமாக இடித்தது.

இந்த அன்பிற்காக என்றாலும் இவன் தன் பிறந்த மண்ணைக் காக்க உறுதியோடு நிற்பான் என எண்ணியபடி, நீருடன் நடந்தேன். தமிழரின் சரித்திரபூர்வ வாழிடமான வடக்கு, கிழக்கை இணைத்துவரும் இப் புண்ணிய பூமியில், இவ்வாறான மக்களின் தேவையை எண்ணி வியந்தேன். பின்னால் இருந்து அப்புவின் குரல் தெளிவாகக் கேட்டது.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

"50ம் ஆண்டு காலத்தில் சிங்களவருக்கு நல்லாக் குடுத்தனாங்கள். செம்மலைக்கு வந்தவங்கள் நல்ல வெளுவை கொடுக்க ஓடிப்போனாங்கள். பிணைச்சு வைச்சிருந்த எங்கடையாக்களையும் மீட்டு அவங்களின்ரை வாடிகள் எல்லாத்தையும் கொளுத்திப்போட்டு வந்தனாங்கள். பிறகு பொலிசு வர நாங்கள் காட்டுக்க ஒளிச்சிட்டம். எங்கடயாக்கள் நாலு பேரை பிடிச்சுப்போய் வழக்காடி விட்டவனாம். பிற்பாடு ஆமி வந்தல்லவோ சனங்களைக் கொடுமைப்படுத்திக் கலைச்சவன். உதில் நிற்பாட்டுங்கோ, நாங்கள் வாறம்."

இருவரும் வயல் வரம்பினூடாக நடக்கத்தொடங்கினர். நான் இதயனைப் பார்த்தேன். அர்த்தத்துடன் சிரித்துக்கொண்டான். நாங்கள் ஒரு புரட்சிகர ஆயுதப் போராட்டத்தை ஆரம்பிக்கு முன்னர் எமது தாயக இணைப்பைத் துண்டாட முயன்ற சிங்களவரை எதிர்த்துக் கலைத்த மூத்தவர்கள் இவர்கள். எங்கட அரசியல்வாதிகள் இவர்களுக்கு போதிய ஒத்துழைப்பு வழங்கியிருந்தால் நிச்சயமாக ஒரு பெரிய மாற்றத்தை அடைந்திருப்போம். சிதறிக்கிடந்த இவர்களை புரட்சிகர நோக்குடன் வழிப்படுத்தியிருப்பின் எமது தேசம் விடிந்திருக்கும். அதைவிட்டு வெறும் அரசியல் சதிகளுக்குள் இறங்கி நாற்காலி சண்டை பிடித்து சனங்களையும் திசை திருப்பியதனால் ஏற்பட்ட காலப்பின்னடைவே இது என்றேன்.

இவ்விதம் எம் வாகனச் சில்லின் வேகத்தோடு என் சிந்தனையும் சுழன்றபடி எம் பிரயாணம் தொடர்ந்தது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# 3

சந்திரோதயம் புலரத் தொடங்கியது. நட்சத்திரங்கள் கண் சிமிட்டின. இவை அனைத்தின் ஊடே எம் பிரயாணம் தொடர்ந்தது.

வீதி மிகவும் கேவலமாக இருந்தது. திருத்தப்பட்ட வாகனம் மீண்டும் பழுதடையலாம் என்பதனால் ஏனைய ஐந்து வாகனங்களையும் முன் அனுப்பிவிட்டு, பின்னே ஆறுதலாக வந்தோம். நல்ல இடங்கள் என இதயன் கூறிக்கொண்டான்.

எனது சிந்தனையை வசந்தனே மொய்த்திருந்தான். சலாம் ஒன்றும் பேசாமல் வீதியைப் பார்த்து கிடங்குகளைத் தவிர்த்து வெட்டிக்கொண்டிருந்தான். முறிப்புக்குளம் கடந்து பெரிய பாலங்களைக் கடந்து பூதன் வயலுக்கூடாகத் தண்ணீரூற்றை நோக்கி நகர்ந்துகொண்டிருந்தோம்.

''மச்சான் இதுதான் கற்பகப் பிள்ளையார் கோயில். சின்னனில இங்க இருக்கேக்க அடிக்கடி வாறனாங்கள். உம், இஞ்ச ஒரு கிழவன் இருந்தது. வெள்ளிக்கிழமைகளில கூட்டுப்பிரார்த்தனை நடக்கிறது.''

சங்கக்கடை, மில் எல்லாவற்றையும் கடந்த வாகனம் ஒரு பெரிய வாய்க்கால் மேல் ஏறியது. ''உதிலதான் முந்தி இருந்தனாங்கள்'' என்று சுட்டிக்காட்டினேன். எத்தனையோ


தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

வருடங்களுக்குப் பிறகு இவ்விடத்தைப் பார்க்க சந்தோசமாய் இருக்கு. உந்த வேம்பிலதான் குரங்குகள் படையாத் தங்கிறதுகள். சின்னனில எனக்குச் சரியான பயம். வீட்டுக்கு முன் போர்டிக்கோவில அப்பாவும் இன்னும் நாலைந்து பெரியவர்களும் ஒன்றாய்ச் சேர்ந்து கதைப்பினம்.

இவ்விதம் பல நினைவுகளுக்கும் கதைகளுக்குமிடையே பொழுது ஓடிக்கொண்டிருந்தது. எங்கள் வாகனங்களும் முன் சென்றுகொண்டிருந்தன. முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியைக் கடந்து அப்பால் தொடர்ந்தோம். மாவீரர் தினத்தில குடுக்கிற அடியோட கட்டாயம் பயப்பிடுவான். எங்கட இடத்தில எங்கேயும் இருக்கேலாத நிலை கட்டாயம் வரும். மணலாறு மக்களை நினைத்துக் கொண்டேன். கரிபட்ட முறிப்புக்கடக்க, "சரியா நித்திரை தூக்கி அடிக்குது" என இதயன் அலுத்துக் கொண்டான். எனக்கும் தூக்கியடித்தது. சலாம் மட்டும் சிரித்தபடி, "நான் நித்திரை தூங்கினால் என்ன நடக்கும் தெரியுமே" என்றான்.

அருகே ஓடிய பெரிய கால்வாயைக் காட்டினான். அடப்பாவி, நித்திரை தூங்கிவிடாதே என்று எச்சரித்தோம்.

"உதென்ன மச்சான் றோட்டைக் கிண்டி புளக் போட்டிருக்கிறான்கள்?"

"இதுதான்ரா ஒட்டிசுட்டான் பொலிஸ்ரேசன். முந்தி ஆமியும் இருந்தது."

"பிறகு எப்ப அடிச்சது?"

"90 சண்டை தொடங்கியவுடன் எங்கடயள் கொமாண்டோ ரெய்ட் பண்ணி பிடிச்சவங்கள். பிறகு கட்டடங்களை பிரட்டினது."

"முந்தியுமொருக்கா அடிச்சதோ?"

"ஓ, அது 85லையா இருக்கோணும். அதுவும் முறையான அடி! எக்கச்சக்கமான ரைபிள்கள் எடுத்தது. சபா அண்ணை, லோறன்ஸ் அண்ணை ஆட்கள் நின்று அடிச்சவை."

முகாமில் ஆக்கிரமிப்புச் சின்னங்கள் இன்னும் எஞ்சித் தொங்கிக் கிடந்தன. அதே தொடரான மதில்கள் இடையிடையே உடைந்தும் சிதைந்தும் கிடந்தன.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

சில ஒரு தொடராய் வீழ்ந்து கிடந்தன. அவற்றின் நடுத்தூண்கள் மட்டும் வானைப் பார்த்தபடி நின்றன. 'இராணுவ தடைமுகாம்' எனும் தகரம் சிதைந்துபோய் ஓரமாய்க் கிடந்தது.

"சிலோ பண்ணு மச்சான். கொஞ்சம் பார்ப்பம்."

நித்திரை ஒரு துளிகூட முகத்திலை இல்லை. முகாம் எனக்கு ஓரளவு தெரியும்.

1986ல் இராணுவம் எனது சகோதரனைக் கைதுசெய்து இதேமுகாமில்தான் வைத்திருந்தார்கள். அப்போது நான் சிறுவனாகையால் அம்மாவுடன் வந்து அழுவேன். வேறு என்ன செய்ய? இதுதான் மச்சான் பெரிய வாசல். அவன்ர கவேட்றக் அதுகள் போறதுக்கு மட்டும் திறப்பாங்கள். உதுக்கு முன்னால சக்கை விட்டாலுமெண்டு பெரிய கிடங்கு வெட்டி வைச்சிருந்தான்கள்.

அந்தா அதில இருக்கிற பாலை இருக்கேல்லே? அதிலைதான் முதல் சென்றி. அப்ப மண்மூட்டையைவிட மரங்கள், செங்கல்லுகள்தான் கூட அடுக்கியிருப்பான்கள். சிலநேரம் மரங்களில கூட இருப்பான்கள். முத்தையன்கட்டு றோட் ஏறுற இடத்தில மற்றக்கரை சென்றி நிற்பான். இடையில ஒரு றோட்டை பள்ளம் திட்டி ஆக்கியிருப்பான். ரோட்டை மறிச்சு, வளைஞ்சுதான் போகவேணும். குறுக்க றம் அடுக்கியிருப்பான். அங்கபார் பெரிய தண்ணீர் தாங்கி பிரண்டு கிடக்கெல்லே? உது பெரிசா இருக்கேக்க அதிலைதான் மண்மூட்டை அடிச்சு ஓ.பி. சென்றி இருக்கிறவன். உதில இருந்தா எல்லா இடமும் வடிவாத் தெரியும். தலையைக் காட்டினா வேட்டை நாய் மாதிரி பாய்ஞ்சு வருவான்கள். உங்கபார் கட்டிடங்கள் எவ்வளவென்று!

எதில் எங்க இருப்பானென்று தெரியாது. சுத்தி முள்ளுக்கம்பி அடிச்ச பிறகு முள்ளுக்கம்பியை சுத்தி றோலாய்ப் போட்டிருப்பான்கள். அதற்குப் பிறகு பொறிக்கிடங்கு. உதப் பார்க்கத்தான் ஞாபகம் வருகுது. ஒரு பொடியனைப் படுத்தின பாடு.

எங்க அண்ணனைப் பிடிச்சுக்கொண்டுபோய் நாலாம் நாள் விடிய ஒரு ஆறுமணியிருக்கும். முதலாவது பஸ்ஸில வந்திட்டம். விடிய சரியான பனி. மரமே நடுங்கும். வந்து சென்றியைக் கேட்டுக்கொண்டு சும்மா நிற்க, நான் பார்த்தன். முள்ளுக்கம்பி இருக்கெல்லே அதை நிலத்துக்கு மேல அரையடி உயரத்திலை



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அடித்துவிட்டு, முள்ளுக்கு மேல ஒரு பொடியனை குப்பிறக் கிடத்தி கட்டி வைத்திருந்தான்கள். பனியில் ஆடாமல் அசையாமல் கிடந்தான்.

கொஞ்சத்தால மச்சான், ஏழெட்டுப்பேர் வந்தான்கள். நடுவில பெரியவன் ஒருவன் எருமை மாதிரி வந்தான். வந்தவன் ஏறி உழக்கினான். "ஐயோ" என்று பொடியன் கத்தினான். மச்சான் யானை கூட இப்படி சத்தமாய் கத்தாது. அப்பிடி இருந்ததடா. முதுகில ஏறிநின்று பிடரி மயிரைப் பிடித்து மேலே இழுக்க குதிரைச் சவாரி விட்டான். அவன் கத்தின சத்தம் கேட்கேலாது. மயிரை விட்டிட்டு நெத்தியில பிடிச்சு ஒரேயடியா இழுத்துவிட்டான். "அம்மா" என்ற சத்தம் அரைகுறையாய் நிற்க கழுத்து முறிஞ்ச கோழி சேவல் மாதிரி இழுத்துக்கொண்டான். பிறகு ஆடவேயில்லை. கம்பிக்கு கீழாலை ரத்தம் சொட்டுச் சொட்டாய் ஊத்திச்சு. அம்மா என்னையும் இழுத்துக்கொண்டு வெளியால ஓடினா.

திரும்பிப் பார்த்தேன் இரண்டுபேர் அவனை கழட்டிக்கொண்டு போனாங்கள். அவனுக்கு கம்பி குத்தி ரத்தம் வடிந்தது. கழுத்து நாடியோட முறிந்து கிடந்தது. அப்பதான் பார்த்தன் வட்ட முள்ளுக்கம்பி இருக்கல்லே? அந்த வட்டத்துக்குள்ள ஒரு பதினைஞ்சு பேரை அடைச்சு வைச்சிருந்தான்கள். பெரிய பொல்லுகளால உருட்டி உருட்டி அடிச்சான்கள். "வா மோனை நாளைக்கு வருவம்." அம்மாவுக்கு விம்மல் பெரிய அழுகையாய் வெடிக்க என்னை இழுத்துக்கொண்டு ஓடினாள். சென்ரியில நின்றவன் விசிலடிச்சுச் சிரிச்சான். என்னால என்னென்று மறக்கிறது?

நான் உம் என்றபடி முள்ளுக்கம்பியருகே போய்ப் பார்த்தேன். கறளோ என்னவோ தெரியவில்லை. சிவப்புச் சிவப்புத் திட்டாய்த் தெரிந்தது. கோபமாய் காலால் உதைத்துவிட்டு இதயனுடன் திரும்பி நடந்தேன். கட்டிடங்கள் தலைகுப்புறக் கிடந்தன. தமிழீழ விடுதலைப் புலிகள் பலகை நிலவில் எம்மைப் பார்த்துச் சிரித்தது. சந்தியில் மாவீரர்களின் படங்கள்; சிரம் தாழ்த்திக்கொண்டோம்.

வீதியை விட்டு மெல்லிய ஒழுங்கையூடாகத் திரும்பினோம். நல்ல காடாகப் பார்த்து நிற்பாட்டு. இனி விடியப்போகுது. பிறகு வீண் பிரச்சினை. சலாமிற்குக் கூற அவன் அடர்ந்த காட்டில் ஊடுபாதை தேடினான்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

"உதுக்க விடு"

மெதுவாய் றிவேஸ் செய்து, கச்சிதமாக ஒன்றும் தெரியாதபடி உள்ளே கொண்டுசென்று நிற்பாட்டினான். மூவரது காதுகளையும் மழைத்தொப்பி மூடியிருந்தாலும், குளிரால் உடல் நடுங்கிக்கொண்டேயிருந்தது. பனியால் வரிப்புலி உடை தோள்மூட்டுப்புறமாக நனைந்து குளிரை அதிகமாக்கியது. நேற்று பின்னேரம் 6.00 மணிக்குச் சாப்பிட்டது. இப்ப நேரம் 3.20. இன்னும் ஒன்றும் சாப்பிடவுமில்லை; சூடாகக் குடிக்கவுமில்லை. இதன் தாக்கம் மூவரையும் வெகுவாய்ப் பாதித்தது.

''டேவிட் அண்ணராக்கள் எங்கேயோ தெரியாது. விடிந்தவுடன் 7.00 மணிக்கு தொடர்பெடுக்க வேணும்.'' சலாம் கூற "உம்" என்ற நான் படுக்க இடம் தேடினேன்.

''சரியான பனியடா. மரத்திலிருந்துகூட சொட்டுச் சொட்டாய் ஊத்துது. உதுவழிய படுத்து விடிய புத்தி பிசகும்'' என்றான் இதயன்.

"சரி வாங்கோ பெட்டிக்குக் கீழ படுப்பம்"

நித்திரை தூக்கலில் சாக்குகளை இழுத்தபடி நான் முன் போனேன். பசி வயிற்றைக் கிள்ளியது. தூரத்தே யானைகள் பிளிறும் ஓசை கேட்டது.

"எத்தனை சாக்கடா கிடக்குது?" கவலையுடன் கேட்டான்.

"இரண்டுதான்ரா கிடக்குது. நீங்கள் படுங்கோ" என்றேன்.

"விசரா, விரிச்சுப்போட்டு மூன்றுபேரும் படுப்பம்."

''ஆ... ஆ... ஐ...யோ!'' காலையும் கையையும் உதறினான் இதயன். என்னடா என்று ரோச்சை அடித்தோம். உடம்பு எல்லாம் முசுறுக்கூடு ஒன்று விழுந்து சிதைந்து, உடல் முழுவதுமாய்ப் பரவி கடித்துக்கொண்டு தற்கொலை செய்தன. ''வெளியாலை வா, சேட்டைக் கழற்றிப்போட்டுத் தட்டு.'' மூவரும் சேர்ந்து தட்டிவிட்டோம். இடையிடையே "ஆ... ஆ..." என்றான். பார்க்க மிகவும் பரிதாபமாக இருந்தது.

இவனுடைய நண்பர்களெல்லாம் இனிய கனவுடன் எங்கோ உல்லாசமாய் உறங்குவார்கள். அவர்களுக்கு இது 3ம் சாமமாய் இருக்கும்.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அப்படியானால் இவன் காலத்திடம் தோற்றவனா? வாழ்க்கை இவனை வஞ்சித்ததா? இல்லையில்லை. வரலாறு இவனுக்கு வாழ்க்கையைக் காட்டிவிட்டது. இனிவரும் சந்ததி ஓய்வாய் சுவாசிக்க இவர்கள் இதற்குள் இருப்பது வரலாற்றின் தேவை. காடு இவர்களுக்குக் காப்பரணாய் இருப்பது, இன்றைய அவசியம்; இதுவே இவர்களுக்கு இன்பம்.

"என்னடா யோசிக்கிறாய். ஒழுங்கா கரையில படுப்பம், பரவாயில்லை"

ஓரமாய் விரித்து இருவரும் சரிய இதயன் தவித்தான். எப்படிப்படுப்பது? முதுகுத் தழும்புகள் முள்ளாய்க் குத்துமே? தூக்கம் அணைக்குமா? நெடுநேரமாய் முனகி' முனகிக் கிடந்தான். இப்போது எனது காவற்கடமைப் பணி தொடங்கிற்று. தற்காலிகமாய் தூக்கத்தைத் தூக்கிப்போட்டுவிட்டு, துப்பாக்கியை எடுத்துக்கொண்டேன். பொலித்தீனூடாய் குளிர் சில்லிட்டது, மனம்போல.

நிலவு இலேசாக மங்கத் தொடங்கியது. முகில்கள் எங்கோ அவசரமாய் ஓடின. வனம் உறங்கிக் கிடந்தது. இடையிடையே மட்டும் சிறு சிறு ஒலிச் சலசலப்புகள். திடீரென்று மயில் ஒன்று அகவியது. கூடாத வேளையில் ஏன் இப்படி? ஆ, எங்கோ கேட்ட குரல் ஒன்று தூரத்தே அழுது கிட்டியது. பின் கடந்து போனது. திடீரென மனதில் ஏக்கம் படர்ந்தது. அது ஆட்காட்டிதான். தன் இணையைத் தேடுது போலும். காட்டுக்குள் திடீர் சலசலப்பு. திடுக்குற்றேன். அது மிக மிக வேகமாய் அண்மித்தது. கூடாத மணம் நீக்கமற்றதாய் பரவியது. சலாம், மச்சான் ஏதோ வருகுதடா! யானை போல. ஒழுங்கையை மறைத்து 75 யார் தூரத்தில் கருங்குன்று ஒன்று மூசியபடி நின்றது. இரண்டு விழிகள் பளபளத்தது. வாலால் இலையான்களை விளாசியது போல சத்தம். எம் பக்கமாய்த் திரும்பிப் பார்த்தது. துதிக்கையை உயர்த்தி ஏதோ செய்தது.

"மச்சான் இனி ஓடேலாது. இதயனை எழுப்பு. ஓடிப்போய் ரைக்ரரை ஸ்ராட் பண்ணி லைற்றை போக்கஸ் பண்ணு பார்ப்பம்"

ரீ. 81 ஐ லோட் செய்து சேஞ்சரில் லிவரை ரெகுலராக்கினேன். ரைக்ரர் ஒளியில் கண் மின்னியது. ஒளிக்கு நேராய் வரத்தொடங்கியது.

"இனி ஆபத்து. நீ இதயனோட பின்னால ஓடு. நான் பார்க்கிறன்."

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

வரவர நெருங்கிவிட்டது. இயற்கைவளம். வீணே மிருகங்களை சாகடித்தால் எமது தேசவளத்தை பெருமளவு பாதிக்கும். எமது போராளிகள் இவ்விடயத்தில் கவனமாய் கையாளவேண்டும். காட்டில் பொறுப்பாளர்கள் கூறுவர். சலாமைத் தொடர்ந்து விரைவாய் ஓடினேன். இனி ஏலாது. யானையின் தலைக்கு மேலாக ரவை ஒன்றைச் செலுத்தினேன். ஒருகணம் நின்று மீண்டும் இந்தக் கணம் பலமாகப் பிளிறி துரத்தத் தொடங்கியது. இனி தவிர்க்க முடியாது, போடத்தான் வேண்டும். "ஐயோ" என பெரிய மரக்கட்டையில் விழுந்து எழும்பினான் இதயன். அவனைத் தூக்கினான் சலாம்.

வீரைக்குப் பின் நிலையெடுத்து 45 யாருக்கு நெருங்கியவுடன், வெறியாய் வரும் அந்தக் கருங்குன்றின் நெற்றியில் டுமீல்... டுமீல்... நேராய் ஓடிவந்து குப்புற விழுந்தது. "தவிர்க்கேலாது" பெருமூச்சுடன் நடக்கத்தொடங்கினோம். குருதி சிறிது சிறிதாய் சொட்டுப் போட்டது கீறல்களிலிருந்து. இப்போ சலாம் காவலில் ஈடுபட்டான். காலை விடிய ஆரம்பித்தது. புள்ளினங்கள் பாட நான் மயங்கி உறங்கிப் போனேன்.

காலை 9.30 மணியளவில் தட்டி எழுப்பினான். வோக்கியில் அருகிலுள்ள முகாமுடன் தொடர்புகொள்ள ரைக்ரரில் உணவு வந்து சேர்ந்தது. பாண் பிசு பிசுக்கிது. கறி ஒரு மாதிரிக் கிடக்குது. சலாமின் முகத்தில் துளி ஒளிர்வுமில்லை.

"தெரியுந்தானே அண்ணை? இது சரியான தூரம். விடியச் சாப்பாடு 11.00 மணி அப்படித்தான் வரும். இது இராத்திரியான்." என்றான் வந்த போராளி. பாணைக் கடித்துவிட்டு தண்ணீரைக் கானிலிருந்து வார்த்தேன். வஞ்சகமில்லாமல் நிறைய மிதந்தது. "தண்ணிப் பிரச்சினையோ?" என்றேன். "ஓமண்ணை, ஆழமாண கிணறு. எப்பிடியோ குடம்பி பெருகுது. ஆனா நல்லாக் கொதிக்க வைச்சது. வடிச்சும் கொஞ்சம் மிதக்குது."

"சரி பரவாயில்லை. டேவிட் அண்ணற்றை தொடர்பு இருக்கோ?"

"ஓ, விடிய 8.10 போல எடுத்தவர். சாப்பிட்டிட்டு வாங்கோ போவம். இதுக்க சனம் வராது. கட்டவுட்டும் நிற்குது; விடமாட்டாங்கள்."

நாம் சனசஞ்சாரமற்ற மரக்கூடலுக்குள் 'உருப்படிகளை' மறைத்துவிட்டு, அதற்குரிய காவற்பொறுப்புகளை அந்த முகாம்


தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

பொறுப்பாளரிடம் ஒப்புவித்த பின்னர் எல்வ் றக்கில் ஏறி, மாங்குளம் நோக்கிப் பறந்தோம். பெரிய பாலம், மரப்பாலம் எல்லாம் கடந்து நேராக விரைந்தது.

தூரத்தே நிமிர்ந்து நின்ற ஈட்டி போன்றதைக் காட்டி ஈசன் சிரித்தார்.

"உதுதான் அவன்ர ரவர்"

மேலும் மேலும் நெருங்க அந்த 'ரவர்' பல இழுவைகள் சுற்றி இழுக்கப்பட்டு கட்டி உறுதியாய் நிமிர்ந்து நின்றது. மெதுவாய்ப் போன றக் தரித்து, பின் மெதுவாய் ஒரு சிறு ஒழுங்கைக்குள் திரும்பியது.

"நேரா மெயின் றோட்டால போகேலாதோ?"

"போனா பொடியும் எடுக்கேலாது. உந்த வளைவுக்கு அங்கால அவன்ர 'ராகற்'. நாய் போனாலும் சுட்டுத்தள்ளுவான். ஒரு தேட்டியும் 303 உம் ஜியும் வைத்து அடிக்கிறவன்."

ஒழுங்கை மிக மோசமானது. அது உண்மையில் வயலாக இருந்து பின் எம்மவரால் ஒழுங்கை ஆக்கப்பட்டதென எண்ணிக்கொண்டேன். இன்னும் ஓர் ஒழுங்கை சீராகப் பிரிந்து சென்றது.

"உதால போகேலாதோ?"

"உதத்தான் முந்தி பாவிச்சனாங்கள். ஒருநாள் பெரிய ஜீப் ஒன்று போக அங்கிருந்து 4 அஞ்சிஞ்சி குத்திவிட்டான். நல்ல ரேஞ்சா விழுந்து 6 பேருக்குக் காயம். பிறகு வாகனத்தில போகவேண்டாமென்று மக்கன்றோ அண்ணையாட்கள் சொன்னவை. நடந்து போகலாம்."

ஒரு முகாமின் முன் போய் நின்றது. நேரம் பி.ப. 2.30. மதிய உணவை அங்கே எடுத்துக் கொண்டோம். பின் ஜீவன் வந்து படை முகாமைப் பார்க்கவென அழைத்தார். மூவரும் சேர்ந்துகொண்டோம். இதயனின் முகம் இப்போ மகிழ்ச்சியாக இருந்தது. வேதனை மறைந்ததோ அல்லது பொருட்படுத்தவில்லையோ தெரியவில்லை. இரவு விழுந்து கட்டை கிழித்த காயம், இரத்தம் உறைந்துபோய் இருந்தது. ஜீன்ஸ் கிழிந்துபோய்க் கிடந்தது. பிரதான வீதி ஓரமாய் நடந்து சென்றோம். எறிகணைகள் விழுந்தும், குண்டுவீச்சினாலும் வீடுகள்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

சிதைந்துபோய்க் கிடந்தன. ஒரு குடிசை வீடு எரிந்துபோய்க் கிடந்தது. சட்டிகள், பானைகள் கருகித் துண்டு துண்டாய்க் கிடந்தன. உடைகள் எரிந்து அரைகுறையாய்க் கிடந்தன. வேலிக்கம்பியில் சேலை ஒன்று சிக்கிப் பறந்து கொண்டிருந்தது. அது நாராய்க் கிழிந்து வெளிறிப்போய், வீட்டைவிட்டு ஓடிய தாயின் அவசரத்தைக் காட்டியது.

முற்றத்தில் நின்ற மாமரம் அரைப்பகுதி கருகிப் பட்டுப்போயிருந்தது. இன்னொருபுறம் துளிரிருந்தது. அவ்ரோ குண்டு வீசியிருக்க வேண்டும். எரிந்த சாம்பல் மேட்டில் சில புற்கள் துளிர்விட்டன. ஆச்சரியமாக இருந்தது. இதில் எப்படி? இது நல்லா மழை பெய்த பின் காகம் போட்டிருக்கும்.

அடுத்ததாய் பெரிய வீடொன்று உள்ளே கூரை பிரிந்து, இரவென்றும் பகலென்றும் பாராமல் ஒளியாய் இருந்தது. தென்னை ஒன்று வட்டுச் சரிந்து கிடந்தது. ஒரு எதிரியின் முகாம் எமக்கு பலவகையில் பிரச்சினைகளைத் தருகிறது. இராணுவ ரீதியாகப் பார்ப்பின் எமது நகர்வுகளை ஓரளவு கட்டுப் படுத்துகிறான். போராளிகளின் நேரமும் உடல் உழைப்பும் குறிப்பிட்ட அளவிற்கு செயலாக்கப்படுகிறது. மேலும், தந்திரோபாயமான தொந்தரவுகளை ஏற்படுத்துகிறான். இதன் போது எமக்கு ஆயுதச் செலவும், உயிரிழப்பும் அதிகரிக்கின்றது. இவை மட்டுமா?

அரசியல் ரீதியாகவும் எமக்கு பாதிப்பு ஏற்படுகின்றது. மக்களின் வாழிடப் பிரச்சினை போன்றவையும் தன்னாதிக்க வல்லமை உண்டென அவன் மார்தட்டவும் இம் முகாம்களே காரணம். பொருளாதார ரீதியாக மிகத் துன்பமடைய வேண்டியுள்ளது. மக்களது இடப்பெயர்வு. இதனால் பொருள்களையும் பல இடங்களில் குடும்ப உறவினர்களையும் இழந்த அவர்கள் மாற்றிடங்களில் துன்பப்படுகின்றனர். உழைப்புச் சக்தியும் விரயமாக்கப்படுகின்றது. இதனால் நாட்டின் பொருளாதார பாங்கு பின்னடிக்கின்றது. ஏராளமான பயிர்ச்செய்கை நிலங்கள் வீணே கிடக்கின்றன. ஆனால் இடம்பெயர்ந்தோர் ஒரு பரப்புக் காணி இன்றித் தவிப்பர். வேறுபட்ட வாழ்க்கை முறையால் அவர்கள் நிபுணத்துவம் அடைய முடியாது. பிரதான போக்குவரத்துப் பாதைகள் தடைப்படுவதனால் பெரும் செலவுகளும் ஏற்படுகின்றன. இது எமது தமிழீழத்திற்கு அத்திவாரம் இடக்கூடியதல்ல. நாம் அனுமதிக்கக்கூடியதும் அல்ல.


தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கலாசார ரீதியாகவும் பிரச்சினையுண்டு. இங்கு இராணுவம் பெரிய கோயிலுக்குள்ளும் தரித்திருக்கின்றது. (சண்டையில் மிக முக்கியமான தாக்குவலயம், கோயில் காவலரண்)

"இதுதான் மாங்குளம் மகா வித்தியாலயம்"

ஜீவன் அருகே சுட்டிக்காட்டினார். பெரிய பாடசாலை பெருமளவில் சேதமடையாமல் இருந்தது. மைதானத்தில் புல் இடுப்பளவிற்கு மண்டி நின்றது. இப்படியே இருந்து ஒரு நாளைக்குக் காடாகும்.

ஓ! இனிய தம்பி தங்கைகளே! எங்கே சென்றீர்கள், உங்கள் கல்வித் தாயைவிட்டு? எங்களுக்குத் தெரியும், உங்களையும் உங்களது பிஞ்சுப் பாதங்கள் இந்த மைதானத்திலோ, வகுப்பறைகளிலோ பதிவதையும் அந்த எதிரி விரும்பமாட்டான். நீங்கள் புத்தகச் சுமையுடன் வருவது அவனிற்குக் கசக்கும். தமிழரின் முதுகெலும்பான கல்வியை அழிப்பது அவனது பணியன்றோ!

எனக்குத் தெரியும், நீங்கள் இப்போது எங்காவது ஒரு குடிலுக்குள் அல்லது இடிந்த அரச கட்டிடத்திற்குள் மழைக்கு ஒதுங்கியிருப்பீர்கள்! நிச்சயம் மழை உங்களை குளிப்பாட்டும். ஏனெனில் குடிசையை எனக்குத் தெரியும். அது வேயப்பட்டது ஓலையால், இப்போ எஞ்சியிருப்பது ஈர்க்குகள்தானென்று. மதியம் சாப்பிட்டீர்கள். வயிறு புகைந்து புகைந்து பெருந்தீயாய் எரியும். அவை சேர்ந்து ஊழித்தீயாகும். இன்னும் சில நாளில்! மீண்டும் இங்கே வாருங்கள். உங்கள் பிஞ்சுப் பாதங்களை சாமியார் குளத்திலோ, கற்குளத்திலோ கழுவுங்கள். நான் உங்களைத் தேடி அலையாய் வருவேன். இந்தப் பள்ளியில் பதியுங்கள் பாதங்களை! உங்கள் பாதங்களை நான் பூமியில் இருந்து வாங்கிக் கொள்வேன் இனிமையாய், படிக்கையில் தென்றலாகி வந்து தழுவுவேன் உங்களை!

நாங்கள் அவதானமாக எம் அசைவுகளை வைத்து எதிரியின் அரண்களில் எம் கண்ணோட்டத்தைச் செலுத்தினோம்.

"பட பட பட!"

தலைக்கு மேல் 'உய்' என்று இரைப்புடன் ரவைகள் காற்றைக் கிழித்துப் பாய்ந்தன.

"படுமச்சான்! ஒ.பி. காரன் கண்டிட்டான். அந்த புளியில

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இருந்துதான் அடிக்கிறான். சிலநேரம் மட்டும் ஏறி அடிச்சிட்டு இறங்கிடுவான்."

எமது ஆட்கள் முன்னால் இருந்து நாலைந்து ரவைகளைப் பாய்ச்ச எல்லாம் அமைதியானது.

"வாருங்கோ போவோம். குனிந்து வாங்கோ."

ஜீவன் முன்னே ஓடிப்போக நாங்கள் தொடர்ந்தோம்.

"கும்"

முதல் படுத்த இடத்தருகே எறிகணை ஒன்று வீழ்ந்து வெடித்தது.

"சப்ளைய கட் பண்ணிப் போட்டாங்கள்; அதுதான் கோபப்படுகிறார். ஒரு கிழமையாக பிவ்ரீ வைத்து அடிச்சு ஒரு கெலியையும் இறக்க விடேல்ல; பேதியில அடிக்கிறான்." காவலரணில் நின்ற போராளி மெலிதாய் சிரித்தபடி கூறினான்.

ஒவ்வொரு காவலரணூடாக இலக்குகளை இனம் காணத்தொடங்கினோம். ஜீவன் ஒவ்வொரு எதிரியின் காவலரணையும் தெளிவாகக் காட்டி விளக்கினார்.

"கோயில் பொயின்ர கடந்துவாற தெரு முல்லைத்தீவு றோட். அதுதான் இதில ஏறுது. அந்த மூலையில தெரிகிறது கடை. அதற்குப் பக்கமாய் இருக்கிறதுதான் விகாரை. அங்கால தான் அவன்ர பழைய காம்ப்." அதற்கு முன்னால் மாங்குளம் தடைமுகாம் என்ற சீமெந்து சுவரில் கொஞ்சத்தை ரவை தின்றிருந்தது.

"உதில வைச்சுத்தான் மன்னங்குளத்தில் வீட்டுக்குப் போன எங்கள (என்னையும், அப்புவையும்) பிடிச்சு வெருட்டினவங்கள்" அருகில் நின்ற போராளி கூறிச் சிரித்தான்.

ஓ! உன்னால் அன்று குட்டப்பட்ட குழந்தை, நீ காலால் மிதித்த ஆலங்கன்று, நீ ஏளனம் செய்த தமிழன், இன்று உன்முன் கையிலே துவக்குடன் நிற்கிறான்! உன்னையே வியக்க வைக்கும் விருட்சமாக நிற்கின்றான்! தலை நிமிர்ந்து தமிழன் என்கிறான்! ஆக்கிரமிப்புவாதிகள்தான் போராளிகளை உருவாக்குபவர்கள் என்ற உண்மை உனக்கென்று புரியும்? நீ அடித்தவன், உன்னை அடைத்து வைத்திருக்கிறான். ஓநாய் வெள்ளாட்டைத் தின்ன வந்தால் அது புலியாக பாயவேண்டியது, காலத்தின் கட்டளை!


தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

ஜீவன் மேலும் விளக்கினார்.

"காம்பின்ர அந்தப் பக்கம் மாந்தோட்டம். அதுக்குள்ள சுத்தி ஏழெட்டு பொயின்ற் இருக்கு. சிலது டம்மி பொயின்ற். தெரியாத மாதிரி இடைக்கிடை ரவுன்ஸ் அடிப்பாங்கள். அதுக்கு மேலால லக்சபானா பக்கம் தெரியிறதுதான் மலைப் பொயின்ற். சரியான உயரத்தில இருக்கிறதால அந்த வெளியெல்லாம் கவர் பண்ணுவான். பிவ்ரி அல்லாட்டி எல்.3 இருக்குமென்று நினைக்கிறன்."

இராணுவ முகாம் மிகவும் பலமாகத்தான் அமைக்கப்பட்டிருந்தது. சுற்றுப்புறங்கள் பெரும்பாலும் வெளியாக இருப்பதனால், எமது தரை நகர்வுகளின் போது பெருமளவு உயிர் விலை கொடுக்கப்படல் அவசியம் என, எதிரி தீர்மானித்திருத்தான் போலத் தெரிந்தது.

நாம் பிரதான வீதியை துணுக்காய் சந்திக்கு சற்று முன்னாக பெரிதாகத் துண்டாடியிருந்தோம். அதேபோல் அவனும் பிரதான முகாம் முன்பாக துண்டாடியிருந்தான் போல் தெரிந்தது. சிலவேளை அது விநியோகப் பாதையாக அல்லது போலியாக கூட இருக்கலாம். இராணுவத்தை நேரடியாகத் தெரியும் இடங்களில் படங்குகளைக் கட்டி மறைத்திருந்தோம். சந்தியில் நின்ற புளியமரத்தினூடாக அவதானித்துக் கொண்டிருந்தோம்.

"தொடர்ந்து பார்க்காதையுங்கோ சினைப்பண்ணிப் போடுவான்." ஜீவன் கூறினார்.

"இந்தக் கரையில தெரிகிறதுதான் சேச். அது சிஸ்ரற்ற மடமாம். அதுகளெல்லாம் வீடுகள். அவ்விடத்தில் இருக்கிற பொயின்ருகள்தான் மெயின்காம்பை இந்தப்பக்கத்தாலே பாதுகாக்குது. கெலி இறக்கக்கூட வசதியானதற்கு காரணம் இதுகள்தான். 90 சண்டைக்குப் பிறகுதான் இவற்றை பிடிச்சவன்."

"கிட்டவாத் தெரியுது. ஆர். பி. ஜி யால அடிச்சு பிரிக்கேலாதோ?"

"பார்க்க இப்படித்தான் தெரியும். ஆனால் நல்ல பலமான பொயின்ருகள். எக்கச்சக்கமாய் மண்மூட்டைகள் அடுக்கி வைத்திருக்கிறான். சுவருக்கு பின்னால் எல்லாம் மண் மூட்டைகள்தான். கோயில் பொயின்ற் இன்னும் இறுக்கம்."

காவலரணுக்கு அருகில் வந்துவிட்டார்கள். 30, 25, 20, 15

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

யார்கள் குறுகிக்கொண்டுவந்தன. பட பட பட... நாங்கள் இயங்கமுன் இராணுவத்தின் மூன்று நாலு எல். எம். ஜீ. கள் முதல் பொயின்றை சல்லடையாய்த் துளைக்கத் தொடங்க, ஆர்வமாய் தூக்கினர். அப்போது ஜீ. 3 ம், எமது ரி. 81 ம் சிலகணம் நெருப்புக் கக்கின. துப்பாக்கியையும், தலையையும் கீழெடுத்து விரைந்து வெளியே ஓடினோம். இன்னும் சில ஆயுதங்கள் சேர ஒரே கொண்டாட்டம்!

எமது காவலரண் மண்மூட்டைகளை ரவைகள் சோதிக்கத் தொடங்கின. டும்....டும் டும்... அடுத்தடுத்ததாய் கேட்க பொசிசன் பங்கருக்குள் அமிழ்ந்து கொண்டோம். கும்... கும்.... கும்.... மூன்றும் அருகருகாய் வீழ்ந்து வெடித்தன. காவலரண் பகுதி ஒரே புகைமண்டலம். புகை மெல்ல நீங்க காவலரண்கள் ஒன்றிரண்டு மண்மூட்டைகளை இழுத்து உறுதியாய் நின்றன. சில பைகளில் மண்கொட்டியது. மூன்று பேரும் அப்படியே கிடக்கினம். சிரித்தபடி, பொழுது கருகுகையில் மெதுவாய் நகரத்தொடங்குகிறோம்.

"இனி காலமை பார்ப்பம்; றோட்டால போவம் இருட்டினா அடிக்கமாட்டான்."

காட்டு மயில் ஒன்று தூரத்தே அகவியது. நட்சத்திரங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாய் மின்னத்தொடங்கின. மாங்குளம் புகையிரத நிலையத்தினுள் நுழைந்தோம். எங்கும் பயணச் சீட்டுக்கள் பரவிக்கிடந்தன. மாரிகால மழையில் நனைந்து உப்பிப்போய்க் கிடந்த வெள்ளைச் சுவர்களில் சிறிது சிறிதாய் பொத்தல்கள் இடப்பட்டிருந்தன. கூரையூடாக வானத்தின் நிர்வாணம் தெளிவாய்த் தெரிந்தது. பெரிய தீராந்தி மரங்கள் முறிந்து அந்தரத்தில் அரைகுறையாய் தொங்கிக் கிடந்தன.

"போன கிழமை இதுக்கை எறிகணை ஒன்று விழுந்தது. உதுக்காலை பார்த்தா சேச் கொன்வென்ற் தெரியும். பகலிலை சினைப்பண்ணுவான் இங்க பார்."

யன்னல் ஊடாக சுவரில் நிறைய பொத்தல்கள். யன்னல் கம்பிகள் சிலவும் வெட்டுண்டு கிடந்தன. இந்த ஒவ்வொரு ரவையும் இந்த மண்ணை நேசிக்கும், தம்மையே காணிக்கையாக்கும் போராளியைத் தேடி செலுத்தப்பட்டவைதான். அதே செப்பு ரவைகளைத்தான் நாமும் செலுத்துகின்றோம்; ஆனால் ஆக்கிரமிப்பாளனை, எம்மண்ணை அபகரிக்கும் அந்நியனை வேட்டுவைக்க.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

"மச்சான் உதுக்கை ஏதோ மணக்குது."

கதவைத் தள்ளினான் சலாம். சீ, நாயொன்று எறிகணை பீஸ் பிடிச்சு செத்துக் கிடக்குது. மணம் தாளமாட்டாது எட்டிப்பார்த்தேன். அது முன்னர் மண்ணிற நிறத்தில் சடை மயிருடன் காதுகளை செங்குத்தாய் நிமிர்த்தி, கொத்தான வாலுடன், ஒரு குடும்பத்தின் அன்பான சேவகனாய், குழந்தைகளின் தோழனாக இருந்திருக்கும். அம்மாவை காவலுடன் புலவிலிருந்து அழைத்து வந்திருக்கும். ஏன், குழந்தைகளை பாடசாலை வரை கூட்டிப்போய் கூட்டி வந்திருக்கும். இன்று அந்நியனின் குறிதேடலில் அகப்பட்டு அநாதையாய், உப்பிய வயிறுடன் நீட்டி நிமிர்ந்து கிடக்கிறது. மறுகணம், தலையை வெளியே இழுத்துக் கதவைச் சாத்திவிட்டு வெறுமனதுடன் வெளியே வந்தேன்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# 4

"அட என்ன இன்றைக்கு காம்புக்க ஏதோ எரிக்கிறான்கள். சாக முதல் பொங்கலை கிங்கல பொங்கித் தின்னப்போயினமோ?" ஜீவன் கூற எட்டிப்பார்த்தோம்.

"வாங்கோ, முன்னுக்குப் போய்ப் பார்ப்பம். ஆமியைத் தொடுகின்ற தூரம் வரை ஊர்ந்து செல்வோம். சென்றியில் சிகரெட் பிடித்தபடி எங்கோ பார்த்து புகை விடுவார்கள், கடமை வீரர்கள்."

"சரசரக்காதே, சத்தம் கேட்டுட்டா சல்லடையாக்கி விடுவார்கள்."

மெல்ல ஊர்ந்து ஒரு நாயுருவிப் பற்றைக்குப் பின் மண்ணாய்க் கிடந்தோம். ஒன்றுக்கு ஒன்றாய் இரு உடல்கள் வெந்து கருகி அக்கினிக்குள் அஸ்தமமாகிக் கொண்டிருந்தன. சுமார் பத்தடி தூரம் தள்ளி ஒரு சிங்கள வெறியன், தோளில் ஏ.கே.எல்.எம்.ஜியை சிலிங்கில் தூக்கியபடி, சிகரெட் ஒன்றை இழுத்துவிட்டான். (முகாம் அமைப்புகள் பற்றிக் கூறக் கூடியவையல்ல) காலில் நீண்ட பூட்ஸ் அணிந்து கண் சிவக்க நின்றிருந்தான்; பின்னடியாய் நடந்து சென்று திரும்பினான்.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

எங்களைக் கண்டுவிட்டானோ? ஒரு கணம் சிலிர்த்தது. சாவதற்காய் வருந்தவில்லை. சாவிற்கு முன் சாதிக்கவேண்டியவை ஏராளம். அதனால்தான். மண்முடையில் சாய்ந்தான். எமக்கு அப்பால் புகையிரத தண்டவாளத்துப்புறமான பற்றை ஒன்று அசைந்தது. மெதுவாய்ச் சரசரத்தது. ஒரு கணம் கூர்மையானேன். பின் ஏ.கே.எல்.எம்.ஜியை கழற்றி மண்முடையில் சாய்த்தான். மறுகணம், ஆ... ஆ... ஆ... எனக் கத்தியபடி டட்...டட்...டட்..... ஒரு லிங் முடியும்வரை அவன் றிகரை விடவில்லை! சே, இதுவா இராணுவம்? கட்டுப்பாடற்ற கட்டாக்காலிக் கும்பல்கள்! மெதுவாய் திரும்பி ஊரத்தொடங்கினோம்.

அந்த ஓ.பி. சென்றி இவ்விதம் வீதியை நோக்கி சில ரவைகளை அனுப்பி தான் இருப்பதை உறுதிசெய்துகொண்டான்.

மெதுவாய் வீதியோரம் நடக்க ஆரம்பித்தோம். பிணவாடை இன்னமும் சுவாசத்தை விட்டுப் போகவில்லை. கட்டுப்பாடற்ற இராணுவம் வெளியே புறப்பட்டால் 1 றம் ரவுன்சை சனத்தில் புதைத்திருப்பான். இதை எண்ணியபடி நடந்தேன். காலில் தைத்த முட்கள் குத்திக் குத்தி வலித்தது; இதயத்திலும்தான். நேரம் காலை 9.00 மணி. இப்போ வெளிக்கிட்டாத்தான் மத்தியானத்துக் கிடையில் போய்ச்சேரலாம்.

“காம்பில்லாட்டி ஐந்து நிமிசத்தில போற தூரம்”

ஸ்ரெயினரை தோளில் மாட்டியபடி முன்னே நடந்தார் ஜீவன்.

“உங்கட மற்றாக்கள் எங்க?”

“அவையள் அங்கால போட்டினம்.”

சைகையைப் புரிந்துகொண்டார். எத்தனை உருப்படி? விரலசைப்பில் தெரிந்துகொண்டார். அப்ப நாங்கள் கெதியா மற்ற ஒழுங்குகளை செய்ய வேணும். ஜீவன் தூரத்தே தெரிந்த முகாமை கூர்ந்துபார்த்துச் சொன்னார்,

“வேளைக்கு முடிச்சு உருமறைப்பு பண்ணிட்டா பிரச்சினை இல்லை. நேற்றைய மாதிரி அடிவாங்காமல் இதுக்குள்ளாலை போவம்”.

தூரத்தே இராணுவக் காவலரண்கள் குட்டிப் பிரமிட்டுக்களாய்த் தோன்றின. ஏரியல் கம்பீரமாய் நின்றது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

சூரியனின் வெப்பக்கதிரில் இலேசாய் மின்னியது. 'இரு, இரு வாறன்'- கறுவியபடி நடந்தேன்.

பிரதான வீதியை விட்டிறங்கி பாலத்தின் மேலாக ஒரு வீட்டு வாசலுக்குப் போய், பிரிந்து கிடந்த அந்த வீட்டைப் பார்த்தபடி, மூலை வேலியைத் தாண்டி ஒற்றையடி ரயில் பாதையூடாய் நடக்கத்தொடங்கினோம். இடுப்பளவு உயர ஜாம் மரக்கன்றுகளின் பசிய இலைகள் எங்களை மறைத்தன. அங்கிருந்து 'பிவ்ரியால்' அடிப்பானோ? இல்லை, எறிகணை போடுவான். வரம்புகளூடாய்த் தாவித்தாவி துணுக்காய் வீதியில் ஏறினோம்.

"உங்க பாருங்கோ, உதில எரிச்சுக் கிடக்கெல்லே?"

"ஓ, ஓமோம்! இப்ப இரண்டு மூன்று மாதத்துக்கு முதல்ல ஆமியை கெலியால இறக்கி பெரிய அடிபாடு நடந்தது. அதில செத்த ஆமியைத்தான் இந்த இடத்தில எரித்தது."

"எப்பிடி தெரியாமல் இறக்கினவன்?"

"எங்களுக்குத் தெரியும். காம்புக்குள் விடாட்டி எங்காவது பின்னாலை இறக்கி மூவ் எடுப்பான் என்று இருந்தம். அப்ப ஒருநாள் விடிய நாலு கெலி வந்து, நாங்கள் எதிர்பார்த்த பக்கத்தில நாலைந்து தரம் சுற்றிப்போட்டு, உதுக்கையிருக்கிற கற்குளத்துக்கு முன்னால இறங்கிவிட்டான். அவ்விடத்தில் எங்கடயள் கொஞ்சந்தான் நின்றவங்கள். இவன் பட பட என்று இறங்கிட்டான். காடு கீடெல்லாம் ஒரே அடி அடிச்சான் கெலி. கிட்டத்தட்ட 150 பேர். உடனே உடைக்கத்தொடங்கிட்டான். பிறகு நின்ற ஸ்ரான்பை குறூப்பையும் போட்டு அடிச்சது.

அவன் உள்ளுக்குள்ள போட்டான். அதில செத்த எட்டு ஆமிக்காரன் பொடியும் உதிலதான் எரிச்சது. அதற்குப் பிறகுதான் அவங்கள் பொம்மராலையும் அடிச்சு மிச்ச இடங்களெல்லாம் பிடிச்சவங்கள்"

"நாங்கள் வைத்திருந்ததையோ?"

"ஓமோம். காம்பின்ர சூழல் அமைப்பும் ஆட்பலமும் இல்லாததால, பொலிஸ்ரேசன், கண் ஆஸ்பத்திரி, மடம், சேச், கோயில், வங்கி, போஸ்ற், ஓபீஸ், பாற்சபை, நெல் சேமிக்கிற இடம் இதெல்லாம்தான்."

எமது பலம் குன்றிய வேளையில் பின்வாங்குவது ஒரு சிறந்த



தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

ராஜதந்திரம் என சேகுவேரா கூட கூறியுள்ளார். நாம் அவ்வாறு செய்யாதிருப்பின் பெரும் இழப்புக்கள் ஏற்பட்டிருக்கும். துணுக்காய் வீதி வளைவூடாய் நடந்து, கற்குளத்தின் குளக்கட்டில் வரிசையாய் ஏறினோம். தூர இன்னும் அன்ரனா (ஏரியல்) பார்த்தபடி இருந்தது. ஓரளவு விஸ்தீரணமான குளம் அது. தாமரைகளோ, அல்லிகளோ பூத்திருக்கவில்லை. சில இடங்களில் குளத்தில் திட்டுத் திட்டாய் உயர்ந்த மரங்கள் காய்ந்து சருகுகளை உதிர்த்து தனியனாய் நின்றன. சருகுகள் குளக்கரையில் ஒதுங்கிக் கிடந்தன. நீர்க்காக்கைகள் ஒன்றிரண்டு மரங்களில் குந்தியிருந்து அங்குமிங்குமாய் பார்த்தவண்ணம் இருந்தன.

குளத்தின் துரிசு இறுகிக் கிடந்தது. மரக்கட்டையொன்றி லிருந்து ஏதோ ஒன்று நீரில் குதித்து மறைந்தது. "உந்தா முதலை குதிச்சுப் போகுது" என்று, அதன் சொரசொரப்பான முதுகைச் சுட்டிக்காட்டினார்.

"முதலையில்லாதது குளமே?" என்று சிரித்தபடி நடந்தோம். கலிங்கு குட்டையில் ஏராளம் குஞ்சுமீன்கள் அங்குமிங்குமாய் நீந்தித் திரிந்தன. வெண்ணிறக் கொக்கு சிறகை அகல விரித்து பறந்து வந்து, குட்டை அருகே வசதியாய் அமர்ந்துகொண்டது. வெய்யிலில் வாடிய மீன்கள் அந்த நிழலில் கூட்டமாய் ஒதுங்கின.

"என்ர அப்பா! எவ்வளவு வயல் எல்லாம் சும்மா கிடக்குது."

"சனமொன்றும் வந்து செய்யிறதில்லை. எல்லாம் பயப்பிடுதுகள்."

"மூன்று மைல் நடந்திருப்பமே?"

ஜீவன் சிரித்தார். "ஒரு இரண்டுமைல் இருக்கும்."

அடுத்த குளக்கட்டு குத்தென நின்றது. ஏறினோம். கண்ணெதிரே பரந்து கிடந்தது சாமியார் குளம். சின்னஞ் சின்னனாய் ஏராளம் பூக்கள் நீரின் மட்டத்தில் பூத்துச் சொரிந்தன. பெரிய விருட்சங்கள் சாய்ந்து நல்ல நிழலாக நின்றன. கொஞ்ச நேரம் நின்றிட்டுப் போவம். இங்கும் மரங்கள் அழுகி அழுகி நின்றன. நல்ல நல்ல விருட்சங்கள் நீருக்காய் ஏமாந்து, இன்று நீரே விழுங்கிவிட்டது. இலை, வேர், காய் எல்லாவற்றையும் உறிஞ்சிவிட்டது. இனி சிலகாலத்தில் தண்டும் உக்கிவிடும். பின், அடியே தெரியாமல் நீர் சிரித்துக் கும்மாளமடிக்கும். அழிந்த மரங்களை ஒரு நிமிடம் பரிதாபமாகப் பார்த்தேன்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கல்லு முள்ளுகளில் பதித்த கால்களை பசும் புல்லில் வைக்கும்போது சுகமாய் இருந்தது. ஏன் அழுகிறாய்? இன்னும் கொஞ்சக் காலம்தான். அலுத்துக்கொண்டது, காலைப் பார்த்த மனம். காட்டு ஆமணக்குகளை விலக்கிக் கொண்டு நடந்தோம். தூரத்தே இடிந்த, எரிந்த குடிசைகள் தெரிந்தன. அவற்றைப் பார்த்து ஆறுதலடையவில்லை. வந்துவிட்டோம் என ஆறுதலடைந்தோம். காட்டு ஆமணக்குகளை விலத்தி ஒற்றையடிப் பாதையூடாய் நடக்க ஆரம்பித்தோம். அது பிரதான வீதியின் பொலீஸ் நிலையத்துக்குப் பின்னாலுள்ள காட்டுப்பகுதியைக் கடந்த குடியிருப்புகள். அம்மக்கள் பெருநிலங்களில் விவசாயம் செய்யும் விவசாயிகளாக இருந்திருக்கலாம்.

அவை பெரும்பாலும் மண்ணால் சுவர் எழுப்பப்பட்டு அமைக்கப்பட்டும், ஒரு சில செங்கற்களாலும் அமைக்கப் பட்டிருந்தன. ஏறத்தாழ முழுவதும் எறிகணை விழுந்து சிதைந்துபோய்க் காணப்பட்டன. கிணற்றடியைத் தாண்டி வீட்டுக்கான நடைபாதையில் இறங்கி நடந்தோம். இருமருங்கும் செவ்வரத்தை மரங்கள் காய்ந்து பின் புதுத்தளிர்களைப் பரப்பியிருந்தன. அவற்றில் பூக்கள் பூத்துக் குலுங்கின. பலா ஒன்று முறிந்துபோய்க் கிடந்தது. குடிசையின் ஒரு புறச் சுவர் முற்றாக விழுந்திருந்தது. கூரையும் இறங்கிப்போயிருந்தது. குடிலில் சிறு பிள்ளைகள் இருந்திருக்க வேண்டும். பல புத்தகங்கள் சிதறி அங்கும் இங்குமாய்க் கிடந்தன. ஒரு பிள்ளையார் படம் கண்ணாடி தொங்கி கிழிந்துபோய்க் கிடந்தது.

குடிலைக் கடந்து முன்புறமாக எமது காவலரணுக்குச் சென்றோம். ஒரு புறத்தில் ரைக்ரர் சிலிர்ப்பர் கட்டையுடன் நிற்க, போராளிகள் கட்டைகளை ஒவ்வொன்றாய்ச் சுமந்தும் போயினர். எனக்கு இன்னமும் அந்த நிமிடங்கள் மறக்க முடியாததாக உள்ளன. காலை உணவை 10.54க்கும் உண்ணாத போராளிகள்- மிக இளம்பராயத்தினர் மிகக் கஸ்டப்பட்டு வேலை செய்தபடி நின்றார்கள். இரண்டு இளம் போராளிகள் (12, 13 வயதிருக்கும்) பாரமான சிலிர்ப்பர் கட்டைகளை வேகமாக சுமந்துகொண்டே இருந்தனர். பசிக்களையில் அவர்களது கால்கள் தள்ளாடிப் பின்னடைவது நன்றாகத் தெரிந்தது. கைகள் சிலிர்ப்பர் கட்டைகளை உயர்த்தியபடி இருக்க ஜீவமரணப் போராட்டத்தை நடத்தின. முகத்தில் பசிக்களை படிந்திருந்தாலும் அதனையும் வென்று ஒருவகை மகிழ்ச்சி, உறுதி, எதிர்பார்ப்பு இருந்தது. இடைநடுவே சிலிர்ப்பர் கட்டையைப் போட்டுவிட்டு ஆளையாள்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பார்த்தார்கள்.

"இது என்னடாப்பா பிணக்கனம்! கையை முறித்துப்போடும் போல" ஒருவன் அருகே இருந்த பாலை வேரில் குந்தி முழங்காலில் ஏற்பட்ட சிராய்ப்புக் காயத்தை அழுத்திட்டான். அவன் பெயர் கண்ணன் என பிறகு தெரிந்துகொண்டேன்.

"பிரசாத் தலையைச் சுத்துது. கொஞ்சந் தண்ணி எடுத்துக்கொண்டா குடிப்பம்"

வயிற்றை நீரால் நிரப்பி சிரிப்பை முகத்தில் ஏற்றிக் கொண்டான். கோல்சரை சற்று தாழ்த்திவிட்டான்.

"இன்றைக்கு எப்படியாவது பொயின்ற் வேலை முடிக்க வேணும். இல்லாட்டி கரைச்சல். கெதியா வா, எல்லாத்தையும் இறக்கிவிட்டு ரைக்ரரை அனுப்புவோம். பிறகு கெலி வந்தா அடிப்பான்." நீரை அருந்திய பாலன் இப்போ கண்ணனுடன் சிலிர்ப்பர் கட்டையைத் தாங்கியவண்ணம் என்னைக் கடந்து போனான். சற்று முன் பசித்த எனக்கு இப்போ சத்தியமாய் பசிக்கவில்லை. பசி இருந்த இடமே தெரியவில்லை. சத்தமின்றி மெதுவாய் ஊர்ந்து சாக்குத் தொப்பியுடன் மெதுவாக முகாமைக் கண்களால் ஆராயத்தொடங்கினோம். "இது நோட்டட் இல்லாத பொயின்ற். கவனமாய்ப் பாருங்கோ. கண்டானெண்டால் பிறகு வேலை செய்யிறது கஸ்ரம்." நீரை எம்மிடம் தந்தபடி பாலன்தான் கூறினான். "பிரச்சினை இல்லையடாப்பா" என்றான் ஜீவன்.

"உதிலை தெரியிறதுதான் பொலிஸ்ரேசன். முன்னாலை நாலைந்து வீடுகள். உதுக்கை நிறைய டம்மிப் பொயின்ற் இருக்கு. அதிலை சிலிர்ப்பர் கட்டைப் பொயின்ரை தென்னோலையால் மறைத்து அடைத்திருக்கிறான். அந்தத் தண்ணித் தாங்கியிலும் பொயின்ற் இருக்குது. இந்த மூலைக் கட்டிடத்துள்தான் கூடப்பேர் இருக்கிறான்கள்"

"றோட்டுக்கு அங்கால தெரியிறது என்ன?"

"அதுதான் கடைசிப் பொயின்ற். றோட்டுக்குப் பக்கமாக அடிச்சிருக்கிறான். இரவில் அண்ணை, இந்தக் கட்டித்துக்குள் பாட்டெல்லாம் பைலாப் போட்டு பாடுறவன். துப்பரவா அலேட் இல்லை" என, காவலரணைச் சேர்ந்த பாலன் கூறினான். ஒரு சிலிர்ப்பர்க் கட்டையை இறக்கி வைத்தபின் தூசைத் தட்டியபடி, "றைற். இங்கால இடமெல்லாம் சரி. மிச்ச வேலையள் பார்த்தாச்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

சரி. அங்கால போய் றோட் பொயின்ருக்கு போட்டுப் போவம்" என்றான்.

சிறிய குடிசைகளைக் கடந்துசெல்ல பெரிய வீடு ஒன்று காணப்பட்டது. புகையிரதப் பாதையைக் கடந்து வீதியோரமாக இருந்த வீடு. அப்போதுதான் கவனித்தேன். அதில் பெண் போராளிகள் இருப்பதை "ஆர், கேள்சோ இருக்கினம்?"

"ஓ, இப்ப ஒரு கிழமைதான் மாற்றியது."

"உதால போய் அடிவாங்கப்போறியள்." பெண்போராளி கூற, எட்டிப்பார்த்தோம் வெளியூடாக. மலைப்பொயின்ற் சிறு குன்றின் மேல் பலமாக குந்தியிருந்தது. றோட்டுப் பொயின்ருக்கு இதால போகலாம். அவ்வழியால் விரைந்தோம். அவ்வீதிக் காவலரண் மிக முக்கியமான காவலரண். இராணுவம் முன்னேறுவதாயின் வாகனங்களுடன் இவ்வழியேதான் வருவான். விமானம்கூட இதற்குத்தான் அதிகமாக குறிபார்க்கும். வீதியின் குறுக்கே மிகப் பலமான எமது காவலரண் அது. எந்தத் தாக்குதலையும் சந்திக்கத் தயாராக பெண்புலிகள் உறுதியாய் நின்றனர். ஆர்.பி.ஜி, 30 கலிபர்களுடன் நம்பிக்கையுடன் நின்றார்கள்.

அவ்வழியாய் காவலரண்களைப் பார்த்துவிட்டு, மதியம் 1.45 மணியளவில், பிரதான முகாம் நோக்கி வந்த பாதையால் திரும்பினோம். "இன்றைக்குப் பின்னேரம் சேரமான், சத்தியராஜ் அவையின்ரை பொயின்ருகளைப் பார்ப்பன். அந்தப் பக்கத்தால கிட்டத்தான்" என ஜீவன் கூறினார். காலை உணவை மதிய உணவாய் உண்டபின்னர், சுமார் 3.25 அளவில் கோயில் காவலரண்களை அவதானித்து வரக் கிளம்பினோம். அகலம் குறைந்த ஒழுங்கையினூடாக நடந்தோம். இருமருங்கும் தோட்டங்களும், வயல்களும் பரவிக்கிடந்தன. வயல்கள் வெறும் தரிசாய் புற்கள் மண்டிக் கிடந்தன. தோட்டத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாய் துளிர்க்கும் பூசினிக் கொடிகளும், தானிய வகைகளும், அடிகெட்டுப்போன வாழைகளும், இவற்றை மூடி புற்களும் மூடிக் கிடந்தன.

ஏராளமான மாந்தோட்டங்கள் இருந்தன. விதம் விதமாய் மாங்காய்கள் தொங்க, வளவுக்குள் இறங்கி மாங்காய்களைப் பறித்துச் சப்பியவண்ணம் நடந்தோம். மழைகாலச் சூரியன் சுரீர் என்று மயிரணுக்களைத் தாக்கியது.

"இங்கால இரண்டு செற்றப்பண்ணோணும். வடிவா



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இடத்தைப் பார்த்துச் செய்வம்" என்றேன். ஒழுங்கையை விட்டு ஒரு வீட்டின் வழியாக இறங்கி, வளவுகளைக் கடந்து போனோம். எனக்கு ஒரு செருப்பு அகப்பட்டதால் ஓரளவு தாக்குப் பிடிக்கக் கூடியதாய் இருந்தது. சிறிய பனங்கூடலைக் கடந்து அப்பால் நிமிர்ந்து நின்றிருந்த எமது அரணைப் பார்த்தோம். காவலரணில் நின்ற போராளியுடன் ஒவ்வொரு அரணூடாகவும் பார்க்க ஆரம்பித்தோம்.

"இந்த பொயின்ற்தான் ஆமியிலிருந்து கன தூரத்தில் இருக்குது. முன்னால ஒரே வெளி. குண்டடியால் முன்னுக்கு அடிச்சால் பொம்பர் அடிப்பான் என்று பின்னுக்கு இழுத்திருக்கிறம்" என்று ஜீவன் கூறினார்.

"இந்தப் பொயின்ரிலை நின்று பார்த்தாத்தான் மடத்தின்ரை றோட்டு சைற்பக்கமும், முல்லைத்தீவு றோட்டுல இருக்கிற வீடுகள், கட்டிடங்கள் எல்லாம் வடிவாத் தெரியுது" எங்களைப் பார்த்தார் ஜீவன்.

"ஓமோம், பிள்ளையார் கோயிலோ? அதுவும் வடிவாத் தெரியுது. இந்தப் பக்க பொயின்ருகள் நல்ல ரைற்போல, நீட்டுக்கு பொயின்ற் அடிச்சிருக்கிறான். சப்ளை மூவிங் பங்கரும் இருக்கும் என்று நினைக்கிறன்" என்றேன்.

"ஓமோம், இந்த மடமும் கோயில் பொயின்ரும்தான் அவன்ரை உயிர். அதனால், எல்லா செற்றப்பும் இருக்கும். அதைவிட பொயின்ரில இருந்து இதுவரைக்கும் ஒரே வெளிதானே. மைன்சும் எக்கச்சக்கமாய் வைத்திருப்பான். இந்தப் புறமாக இறங்கும் தாக்குதல் அணிகள் மிகவும் எதிர்ப்பைச் சந்திக்க நேரும். வெளியாக இருப்பதாலும் இராணுவத்தின் பெரிய பார்வை இந்தப் புறமாக இருப்பதாலும், ஏராளமான துப்பாக்கிச் சூடுகளை வெளியில் பெறவேண்டியிருக்கும். அத்துடன், இனங்காண முடியாத மிதிவெடிகள் பெரும் பிரச்சினைக்குரியவை. இதற்கு மேலாக விமானத்தாக்குதல் முற்று முழுதாக இப்பகுதியில்தான் இடம்பெறும் சந்தர்ப்பமும் அதிகம். இழப்புகள் ஏற்படும் வாய்ப்புகள் அதிகம்."

ஆயினும், இராணுவ முகாமைக் கைப்பற்றுவதாயின் அது பிரதானமாகத் தங்கியிருக்கும் கோயில், மடக் காவலரண்களை வீழ்த்திய பின்னர்தான் வான்வெளி விநியோகத்தை தடுத்து, இராணுவத்தை முற்றுகைக்குள் அமிழ்த்த முடியும். என்ன உயிர்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

விலைகளைக் கொடுத்தும் இப்பகுதியை நிச்சயமாக கைப்பற்ற வேண்டும். இதுவே சண்டையைத் தீர்மானிக்கும் என எண்ணிக்கொண்டேன். விநியோகப் பாதையைத் துண்டிப்பதில் பீரங்கிகள் முக்கிய பங்காற்ற வேண்டும் எனத் தீர்மானித்துக் கொண்டேன். லக்ஸபானா மின்சாரத்தூண்கள் எம்மைக் கடந்து எதிரியினூடாக சென்று, சின்னச் சின்னதாய் தூரத்தே புள்ளியாய் மறைந்துபோயின.

"இங்கிருந்து ஏழெட்டு தூண்கள் வரையும் இருக்கின்றன" ஜீவன் சொன்னார். காவலரணில் இருந்து வீதிக்குக் குறுக்கான காவலரணை நோக்கி பதுங்கியபடி ஓடிச்சென்றோம். அங்கிருந்து சினைப்பண்ணுவான். உந்தச் சாக்கைப் பாருங்கோ. எத்தனை ஓட்டைகள்! சாக்கு அரிதட்டுப்போல தொங்கியது. இங்கிருந்து பார்க்க கோயில் பொயின்ற் வடிவாத் தெரியும். ஒவ்வொருத்தராய் எட்டிப் பார்த்தபின் நான் ஏறிப் பார்த்தேன்.

'ரொய்ங் படாச்' தலைக்கு சாண் மேலாக வந்த டம்டம் ரவை மண்மூடையில் பட்டுத் தெறித்தது. ஆமை ஓட்டுக்குள் தலையை இழுத்தது போல உள்ளுக்கு இழுத்துக்கொண்டு இறங்கினேன். என்னை அறியாமலே கை தலைப்பகுதியை தொட்டுப்பார்த்தது. "பொட்டு வைச்சிருப்பான், தப்பிட்டியள்." இப்படி ஜீவன் கூறச் சிரித்துக் கொண்டேன்.

ஏதாவது பிரச்சினையா என்ற வோக்கி குரலுக்கு, இல்லை எனப் பதில் கூறிவிட்டு, அப்பால் நேர் வீதி வழியாக பின்னே பதுங்கி ஓடினோம். ஏறத்தாழ 50 ஆண்கள் நின்று மண்மூடை கட்டிக்கொண்டும், பதுங்குகுழிகளை அமைத்துக்கொண்டும் இருந்தார்கள்.

"ஆர் இவர்கள்?"

"இங்க வேலை செய்து தாறதுக்கு ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் 50 பேர் ஒவ்வொரு நாளும் வாறவையள். இவர்கள் முத்தையன்கட்டு ஆட்கள்" சுறுசுறுப்பாக வேலை செய்துகொண்டிருந்தார்கள். "மார்க்கண்டு சாக்கைப் பிடி" "இன்னொரு மூடையையும் வை. நான் தூக்குவன்." "இந்த அகலம் காணுமோ, இல்ல அகட்டவோ?" "இஞ்ச கொண்டா தம்பி மண்வெட்டியை", என்ற குரல்கள் உற்சாகமாக ஒலித்துக் கொண்டிருந்தன.

முகாமின் வேட்டுச் சத்தங்களையோ, ஷெல் குண்டுகளையோ


தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பொருட்படுத்தவில்லை. மதகில் இருந்த எனக்கு அருகில் பதுங்குகுழியை வெட்டி முடித்த வயதான மனிதர் வேட்டியை கையால் உதறி விட்டபடி வந்து அமர்ந்தார். என்னவோ அவருடன் கதைக்க வேண்டும் போல் உணர்வு.

"ஐயா முத்தையன்கட்டில என்ன செய்யிறியள்?"

"நான் ஒரு பென்சன் ரீச்சர் தம்பி. முள்ளிவாய்க்கால்லை கெட்மாஸ்ரராய் இருந்தனான். றிற்றையர் பண்ணின பிறகு அமைதியா இருக்கிறதுக்காக முத்தையன்கட்டு வந்திட்டன். நல்ல சுவாத்தியமான இடம். ஆஸ்பத்திரிக்கு பக்கத்திலதான் இருக்கிறன். ஐந்து வருடத்துக்கு முந்து வாங்கின வீடு. பிரச்சினையில்லை."

தண்ணிக்கானை எடுத்துக் கொடுக்க, இரு மிடறு குடித்த பின் "சந்தோசம்" என்று சொல்லித் தந்தார். என்னென்று கதையைத் தொடர்வதென எண்ணியபடி கேட்டேன்.

"ஐயாக்கு எத்தனை பிள்ளையள்?"

"எனக்கு இரண்டு பிள்ளையள். மூத்த பெடியன் மொறட்டுவ எஞ்சினியரிங் படிச்சவன். 3ம் வருடம் படிக்கேக்க லீவில இங்கை வந்திருக்கிறான் பிள்ளை. அவன்கள் மதவாச்சியில இறக்கி வெட்டிப்போட்டான்கள். எளியசாதியள். மற்றப் பெண்பிள்ளை யாழ்ப்பாணத்தில் பி.எஸ்.சி படிக்குது."

"அப்ப உங்களுக்கும் அநியாயம் செய்திருக்கிறான்கள்"

"அவன்கள் தமிழராய் பிறந்த யாருக்குத்தான் அநியாயம் செய்யவில்லை? அவன்கள் எங்களை அழிக்கப் பிறந்த சாதியள் தம்பி. பிறகு, இவன் இந்தியன் ஆமி வந்து வீட்டுக்கை கிடந்த சாமான் சக்கட்டுக்களை எரிச்சுச் சாம்பலாக்கிப் போட்டான். பாடையில போவான். இவன்கள் இருக்கும்வரை ஒருநாளும் நிம்மதியாய் இருக்கேலாது." அலுத்துக்கொண்டார் அவர்.

"அதுசரி, என்ன மாதிரி இந்த மாவீரர் தினம்? ஏதாவது வெளிக்கிட்டுக் கிளிக்கிட்டு ஏதாவது குழப்பப் பார்ப்பானோ?" என்று தொடர்ந்தார்.

"வெளிக்கிடப் பார்த்தாலும் விடமாட்டம்" என்று புன்னகைத்தேன்.

"நான் இப்ப கிட்டடியில கொழும்புக்குப் போகேல்ல. ஒரு 83, 84களில் போகேக்க பார்க்கோணும் அவங்கட திமிரை. தமிழன்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

என்று தெரிஞ்சாப்போலும் விளையாட்டுப் பொம்மைபோல பொம்பளைகளை, பிள்ளைகளை, வயது போனதுகளை பாராமல் இறக்கி நடப்பிப்பான், வெருட்டுவான், சேட்டையெல்லாம் விடுவான். சிலநேரம் காறிக்கூடத் துப்புவான்ராப்பா. பெல்லையடிச்சுக் காட்டுப்பக்கத்தில இறக்கி விட்டிடுவான். சிங்களவர்கள், சிங்களத்தியர் எல்லாம் சிரிப்பாங்கள். சீ, கிளிச கெட்ட வாழ்க்கையடா தம்பி அது. இப்ப விளங்கும் தமிழரை ஆரெண்டு!"

"ஐய்யா, அப்ப நான் போட்டு வரப்போறன்."

"அங்கால வந்தா வீட்டுப்பக்கம் வா தம்பி."

மண்வெட்டியைத் தூக்கியபடி செல்வது திரும்பிப் பார்த்த எனக்குத் தெரிந்தது. அந்நியனின் அழுக்குப் பாதங்கள் நசுக்காத உள்ளங்களே இல்லைப்போலும் என எண்ணியபடி நடந்தேன் தோழர்களுடன். மெல்லிய நிலவொளி படர ஆரம்பித்தது. நேரம் 08.15 ஆரம்பித்துவிட்டதை உணர்ந்தேன்.

காலை முகாமைச் சூழவுள்ள இலக்குகள் யாவும் சரியான முறையில் தெரிவுசெய்யப்பட்டமையால் மாங்குளத்திலிருந்து வேறு இடத்திற்கு பல மைல் தூரம் நடந்து செல்லத் தயாரானோம். எல்வ் வாகனம் காற்றைக் கிழித்தபடி பறந்தது.

"இதுதான்ராப்பா பழைய கொக்காவில் முகாம். இந்தச் சண்டை தொடங்கியவுடனே அடிச்சனாங்கள். கிட்டத்தட்ட நூறு ஆமி இறந்திருப்பான்கள். வீடியோக் கொப்பி பார்த்தனிதானே?" என்றேன்.

"அதில இடங்கள் கிளியராத் தெரியல்ல." சலாம் முகாம் கடக்கும் வரை திரும்பிப் பார்த்தான்.

"எத்தனை நாள் சண்டை நடந்தது?"

"இரண்டு நாளிலை அடிச்சாச்சு."

"உந்தக் காம்பில இருந்த ஆமி சண்டை தொடங்கின அன்று வந்த பஸ்சை மறிச்சு கொள்ளையடிச்சிட்டு, நல்ல அடியும் போட்டுத்தான் அனுப்பியவன். 84, 85களில் பேய் அட்டகாசம் மச்சான் இவன்கள். இதில இருந்த ரூபவாஹினி ரீவி ரவருக்கு பாதுகாப்பு என்றுதான் காம்ப் போட்டவங்கள். அந்தச் சந்திதான்... புத்துவெட்டுவான் சந்தி என்றால் பஸ், லொறிக்காறன்கள்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

எல்லாம் நடுங்குவான்கள். காட்டு மரத்தில எல்லாம் ஏறியிருப்பான்கள்.''

ஆம். அந்த மண் ஆக்கிரமிப்பாளரிடமிருந்து கைப்பற்றப்பட்டு சில நாட்கள்தான். அதனால்தானோ அவனது அழிவுச் சுவடுகள் இன்னும் ஆறவில்லை. இடிந்த எதிரியின் இருக்கைகள் இன்னும் சுடுகாடாய் புகைகின்றன. இன்று நாம் சுதந்திரமாய் உலாவலாம். யாரும் எம்மை ஏன் இந்த நேரத்தில் போகிறாய்? யார் நீ? என அதட்டவும் மாட்டார்கள். எம்மை, எம் சொத்தை அபகரிக்கவும் மாட்டார்கள். இதற்கு மேலாய், அங்கு வீசும் மாவீரர்களின் பெயர்களைத் தாங்கிய தென்றல் தென்பூட்டியவண்ணமே இருக்கும்.

''முந்தியடாப்பா முல்லைத்தீவிலிருந்து வெளிக்கிட்டா முல்லைத்தீவு, ஒட்டிசுட்டான், மாங்குளம், கொக்காவில், கிளிநொச்சி, ஆனையிறவு, நாவற்குளி என இறக்கி ஏத்தி சனங்களைப் பிச்சுத் தின்னுவான்கள். இப்ப கொஞ்சம் கொஞ்சமாய் கிளியர் பண்ணுறம்.'' என்று சலாமிடமும், இதயனிடமும் கூறிச் சிரித்தேன்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# 5

கிளிநொச்சிக்கு அப்பால் எல்வ் காற்றுப் போய் நின்று விடவே ஒரு லொறியில் புறப்பட்டோம். நெடும் பயணத்தின் பின் பெரிய மாந்தோப்பில் இறங்கிக்கொண்டோம். சிராஜ் அண்ணாவிற்கு வோக்கியில் தொடர்பைப் பெற அந்த வெளிப்புறத்திற்கு வருமாறு அழைத்தார். ரைக்ரர் ஒன்றில் பெட்டியைப் பூட்டியபடி மண் ஒழுங்கையால் விரைந்தோம். ஒழுங்கை மிக மோசமாக இருந்தது. பெரிய குழிகளும் மேடும் நீர்த் தேக்கமுமாய் குலுக்கி எடுத்தது. ஒழுங்கையின் குறுக்காக 40 அடி அகலத்தில் நீர், வாய்க்கால் போல, இல்லையில்லை நதிபோல ஓடிக்கொண்டிருந்தது. ரைபிள்களை நெஞ்சுக்குள் மறைத்துப் பிடிக்க, நீரையும் சேறையும் வாரி இறைத்தபடி ரைக்ரர் மறுகரை ஏறியது. சேறான ஒழுங்கையின் ஒரு புறமாக பரந்தவெளி. இடையிடையே பனைகளையும் கிழட்டுப் பூவரசு மரங்களையும் கூடலான தில்லை மரப் பற்றைகளையும் கொண்டதாய் பரந்து கிடந்தது. அதன் ஒரு முனையில் புள்ளிபுள்ளியாய் பலர் நின்றிருந்தார்கள். வோக்கியில் அறிவித்தபின் வேகமாய் அவ்விடத்தை நோக்கி எம் உழவு இயந்திரத்தை (ரைக்ரர்) செலுத்தினோம்.

“மச்சான் அந்த பூவரசுக்குள் கொண்டுபோய் விடு. வெளியான இடத்திலை விட்டா கெலி போற இடம்; கண்டா வீண்பிரச்சினை. கனக்க பொடியன்கள் நிற்கிறான்கள், கொழுவிவிடும்” என்றேன்.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அந்தஇடத்தில் எம்முடன் காட்டிலிருந்து வந்து உடனே இங்கு வந்துவிட்ட டேவிட் அண்ணா, டாவின், சேரன் இவர்களுடன் வேறு பலரும் நின்றார்கள்.

"உங்கற்றா எங்கட மாமாவை" ஓடிச்சென்று அணைத்துக் கொண்டேன். ஆம், எங்களுடன் ஒன்றாய் இருந்து யாழ்ப்பாணத்தில் விசேட பயிற்சிகளை பயின்ற போராளிகள்தான் அவர்கள். அவர்களுடன் கோட்டைச் சண்டையில் ஈடுபட்ட எங்களைப் பின்னர் முல்லைத்தீவு இராணுவமுகாம் தாக்குதலிற்கு கூட்டிச்சென்று தாக்குதலை முடித்து காட்டிலிருந்து நாங்கள் வருகின்றோம். இவர்கள் கோட்டைச் சண்டையை முடித்துவிட்டு வருகின்றார்கள்.

வர்மன், யெல்சின், றஞ்சன், விக்டர் எல்லோரும் வந்திருந்தாங்கள். மகிழ்ச்சிப்பெருக்கில் ஆரவாரித்து ஒருவரை யொருவர் தழுவிக்கொண்டோம். பிரிந்தவர் கூடினால் கேட்கவும் வேண்டுமா என்பதைப் போல்.

"என்ன மச்சான், நீலநிறத்தில கோல்சர் அடிச்சு ரைபிள் கட்டியிருக்கிறாய்?"

"கோட்டை சண்டை முடிய பானுஅண்ணா தந்தவர்." இது றஞ்சன்.

"கோல்சர் துணியில்லையென்றால் பச்சை கலரில துணி அனுப்பியிருப்பன்." றஞ்சனை சீண்டினேன்.

"நீங்களொன்றும் தரவேண்டாம்" முதுகில் குத்தினான் மெலிதாய் றஞ்சன். கொஞ்சம் உயர்ந்து சதை சேர்த்திருந்தான். கறுப்பாயும் இருந்தான். எல்லோருடைய தலையிலும் காகம் கூடுகட்டும் போல. "எங்களுக்கு நேரமில்லையப்பா" வர்மன் கூறினான்.

சிறுவயதில் கொழும்பில் இருந்து பின் வளர்ந்து வேலை செய்து. பிறகுதான் யாழ் பூமியை மிதித்தவன். கட்டையாகவும், மஞ்சள் தோலுமாய் கையை வீசியபடி நடப்பவன். தலைமயிர் வழமையாக அரை அங்குலத்தில் வெட்டுபவன். இன்று கூடையாய் வளர்த்திருந்தான்.

"யெல்சின் என்ன சோகத்தில?" அரைக்கண் தூக்கத்திலிருந்தவனைக் கிண்டினேன்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

"ஒன்றுமில்லை, நித்திரை தூக்கியடிக்குது." ஒரே நித்திரைச் சாமி. இவனும் வர்மனும் போட்டிக்கு நித்திரைகொள்வார்கள். காலை 7.30, 8.00, 8.30 பின்னர் ஒருவாளி நீருடன் ஜலக்கிரீடை செய்யப்படுவார்கள். இருவருக்கும் இது வாரத்தில் குறைந்தது இருமுறை. விக்டரைக் காட்டி ஐயர் என்னவாம் என்று வினவ, சிரித்தபடி அருகே வந்தான் விக்டர். கன்ன ஓரங்களில் பூஞ்சையான சுருள் மயிர்கள் தாடியைப் போல அடர்த்தியற்று வளர்ந்திருக்க, கண்களை கண்ணாடியால் மறைத்து, தலைமயிரால் நெற்றியை மறைத்து. கொஞ்சம் கொழுத்திருந்தான்.

"என்ன என்னை பற்றி ஏதோ கதைச்ச மாதிரி இருந்தது?"

"இல்லை இப்பவும் றோய் அண்ணரிட்ட அடிவாங்கிறவனோ என்று கேட்டனான்."

வயிற்றுள் மெலிதாய் குத்த, அம்மா என்றேன்.

"றோயரோட எப்படிப் போகுது?"

"பைம்பலாய் போகுது, இடைக்கிடை முதுகு நோகுது." இது விக்டர்.

"மச்சான் அவற்றை கதையைக் கேட்டியே! நான் போய் கிட்ட நிற்க யாரென்று கேட்டார். புதுசா வந்தனானென்று சொல்ல, சும்மா அங்கால போடாப்பா உனக்கு விசயம் விளங்காது. பிறகு மிஸ் கிஸ்செண்டா எங்களுக்குத்தான் பிரச்சினை. இதுகளைப் பற்றித் தெரியாமல் கிட்ட வரக்கூடாது என்று கழுத்தைப் பிடித்து தள்ளாதகுறையாய் கலைத்துப் போட்டான்" என்றான் இதயன் சிரித்தபடி.

"ஆர் மச்சான் ஆள்? புதுசாய் வந்தவனோ?" ஒல்லியான உடம்புடன் வயோதிபரைப் போல நின்ற போராளியைக் காட்டி றஞ்சனிடம் கேட்டேன்.

"ஓ, நீங்கள் போனப்பிறகெல்லே வந்தவன்கள். இவன்தான்ராப்பா சிறி. கிழட்டுச்சிறி என்று கூப்பிடுவம்."

"அந்தப் பனங்குற்றியில குந்தியிருக்கிற பரதேசி ஆர்? பார், பனைக்கும் ஆளுக்கும் கொஞ்சம்கூட வித்தியாசமில்லை!" கூறப்படுபவன் இன்னொருவனிற்கு கல்லால் எறிந்தபடி, பல்லைக் காட்டினான்.

"அவரோ? அவர்தான் எங்கட கராட்டி மாஸ்ரர், பேய்ப்


தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பைம்பல் காய்! எந்த நேரமும் முஸ்பாத்திதான். இப்ப கல்லெறி வாங்கியவன் அழகையா. இவற்றை சோடி."

அவனொரு பெரிய கல்லை எடுக்க வாத்தியார் பனைக்குப் பின்னால் ஒளித்தார். கிட்டக் கிட்ட வர மறைவிலிருந்து வெளிப்பட்டு அருகே போய் கட்டிப்பிடித்தார்.

"விடுங்கோ மாஸ்ரர், விடுங்கோ!"

"எல்லாம் அன்பிலைதான்." திரும்ப அவன் கூற செல்லமாய் கன்னத்தில் தட்டினார். மறுகையால் எம்மைப் பார்த்து சேட் கொலரை உயர்த்தி விட்டபடி, இருவரும் தோளில் கைபோட்டு நடந்தனர்.

"பிறகென்ன நல்ல செற்தான். பைம்பலாய் போகும்" என்றேன்.

ஏதோ ஞாபகம் வந்ததாய், "மச்சான் எங்கட நாற்பதாம் நம்பர் எங்கையடா?" என வினவினேன்.

"அங்கை பார், அந்த பூவரசுக்குக் கீழே குந்தியிருக்குது" வர்மன் காட்டினான்.

நாற்பதாம் நம்பர் ஏன் என்றால், ஒருநாள் நல்லெண்ணைக்குப் பதிலாக 40 ஆம் நம்பர் ஒயிலை முழுகுவதற்காக ஏராளமாகத் தப்பியபடி விறாந்தைக்கு வர, சிரித்தபடி இன்னொருவன் வர விசயம் தெரிந்து நாங்கள் அறுக்க, அன்றிலிருந்து நாற்பதாம் நம்பர் ஆனான். அவனது பெயர் சசிக்குமார் என்பதே. மேலும் பல அறிமுகமற்ற போராளிகள் வந்திருந்தார்கள்.

மதிய வெயில் வெளியில் எங்கும் சுட்டெரித்தபடி பரவிக்கிடந்தது. தூரத்தேயிருக்கும் இலக்குக் கம்பங்கள் வெயிலில் அலைஅலையாய் தெரிந்தன. பூவரசுகள் எல்லாம் மழை காலத்துடன் செழித்து நின்றன. இன்னொரு புறம் போராளிகள் ஒவ்வொரு அணியாக பீரங்கிகளைப் பரீட்சிக்க ஆரம்பித்தனர். நாம் 'வோக்கி'யில் உடனுக்குடன் தகவலை அனுப்பினோம்.

"மச்சான் இது வெடிக்கிற ஷெல்லடா, கவனம்" என்றேன்.

"இது உள்ளுக்குள்ள போனா எப்படி இருக்கும்?" கண்ணைச் சிமிட்டினான் றஞ்சன்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தொடர்ந்து ஒவ்வொன்றாய் பரீட்சித்துப் பார்க்க பிற்பகல் 5.30 ஆனது. "கெதியா அதிலை இரண்டு பொயின்ற் அடியுங்கோ, டச் எடுப்பம்." சிராஜ் அண்ணா ஊக்கப்படுத்த, ஆறுமணிக்கு 125 மண்முடைகளுடன் இரு அரண்கள் அமைக்கப்பட்டன.

ஒருபுறமாக வீடியோ எடுக்க சிராஜ் அண்ணா கத்தினார். "அவன் ஆற்றாப்பா சறத்தோட அதிலை நிற்கிறது. இறங்கடா கீழே" என்று எரிந்து விழுந்தார். சொன்னதுதான் தாமதம், "டேய் மாடா இறங்கடா கீழே" என்று, அவனை இழுக்காத குறையாக இழுத்து இறக்கினான் வர்மன். அவன் பெருங்குரல் எடுத்து அவனைத் திட்ட சிராஜ் அண்ணா சிரித்தார். "ஆர் வரதனோ? சொல்வழி கேளான்" என்றார். வரதன் எடுத்த கல்லைப் போட்டுவிட்டு, நாக்கைக் கடித்தபடி, சாரத்தை ஒரு கையால் பிடித்தவண்ணம் வெளியே வந்தான். புன்னகை பூத்தார் மாஸ்ரர். கரகோசம் எழுந்து அடங்க மீண்டும் வீடியோ படமாக்கப்பட்டது. அன்றுதான் முதல்முதலாக ஒரு அரிய நண்பனை, புன்னகை மன்னனைப் பெற்றுக்கொண்டேன். அவர் அறிமுகத்துடன் சிநேகிதமானார். வாழ்வில் என்றும் மறக்கமுடியாது.

இரண்டு போலிக் காவலரண்களை நோக்கி எமது இலக்குகள் சரி செய்யப்பட்டன. பின் அவை குறி தப்பாமல் தாக்கிச் சிதறடிக்கப்பட்டன. இருட்டிய வேளையில் பெரும் மின்னல் கீற்றுப்போல் பளீச் என்று மின்னி ம்... ம்... .... ... என முழங்கியது. வீசப்பட்ட மண் எச்சங்கள் பல நூறு யார்களுக்கு அப்பாலும் இருந்து எடுக்கப்பட்டன.

"பயங்கரச் சாமான்தான்! பார் கிண்டியிருக்கிற கிடங்கை" றஞ்சனுக்குக் கூறினார்.

"இது மாதிரித்தான்ரா கோட்டையிலும். உந்த அடியிலதானே ஓடினவன். இருந்தாப்போல அடிப்பம். செய்யிற வேலையளை அப்படியே போட்டுட்டு ஓடிடுவான்கள். அடிச்சாக்காணும், அம்மே.... அம்மே என்று பெரிசாய் சத்தம் போடுவான். பிறகு எரிசெல்களும் அடிக்க கெலிச்சுப்போனான். கடைசியாய்ப் பார்க்கேக்க அவங்கள் ஒவ்வொருதரும் வெளியில வெளிக்கிடாமல், சின்னச் சின்ன குகைகளுக்குள்ள இருந்து, அதுக்குள்ளதான் கெல்மற்றில சமைச்சுச் சாப்பிடுவான்கள். உள்ளுக்குள்ள எல்லாம் ஒரே செல் பான்தான். ஞாயமான சேதம்." றஞ்சனும் வர்மனும் மாறி மாறிக் கூறினார்கள்.


தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

"அப்ப கோட்டையெல்லாம் பார்த்தனியள்?"

"ஒரு ரண்டு மூன்றுதரம் பார்த்திட்டம்."

"அப்ப நாங்கள் தான் இன்னும் பார்க்கேல்லே. இந்தச் சண்டையில தப்பினா கட்டாயம் அங்கால வருவன்" என்றேன். நன்றாக இருட்டிவிட்டது. எமது வாகனத்தில் இரண்டு சேற்றினுள் சிக்கிவிட்டதனால் நாங்கள் சிலர் அந்த வெளியில் தங்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இரவு 8.30 அளவில் சாப்பாடு வந்தது. நான், றஞ்சன், வர்மன், கராட்டி மாஸ்ரர், அழகையா இத்தனை பேருமாக பார்சல்களை விரித்து கறிப்பையை உடைத்து பகிர்ந்து தின்றோம். "டேய்! உனக்கு கொழுப்பு, வெறும் தண்ணியில விட்டுச் சாப்பிடு."

கராட்டி மாஸ்ரர் அழகையாவுக்கு வெறும் குழம்பை ஊற்ற, அவன் சிணுங்க, "சரி இந்தா" என அரைவாசியை விட்டபின்னர் தான் எடுத்துக்கொள்கிறார். "நல்ல சாப்பாடு சாப்பிட்டு கனநாள். உடம்பெல்லாம் மெலிஞ்சுபோச்சு." மாஸ்ரர் உடம்பைப் பார்த்து நிற்க, அழகையா சிறிய வாக்குக்கண்ணால் இழுத்துக்காட்டி, அசட்டுச் சிரிப்பொன்று சிரித்தான்.

"வாத்தியார், அஞ்சுபேர் இருக்கிறம் படுக்கிறதுக்கு; இரண்டு சாக்குத்தான் கிடக்குது. என்னமாதிரி?" இதிலும் சிறிது நேரம் உனக்கு எனக்கு என்ற பொய்ச்சண்டை. இதன்பின் சாக்கின்மேல் தலையணையை மறந்து, அடுக்கிய கட்டைகளாக வரிசையாகக் கிடந்தோம். நேரம் எவ்வளவு கழிந்ததோ தெரியாது. நிமிர்ந்து பார்க்கையிலே மேலே வானம் விரிந்து கிடந்தது. சில விண்மீன்கள் அங்குமிங்குமாய் சிமிட்டியபடி இருந்தன. இடையிடையே இராப்பறவைகள் பறந்துகொண்டிருந்தன. பனிப்புகார். குளிர்காற்று உடலைச் சில்லிட வைத்தது. மடித்திருந்த கை மடிப்புகளை எடுத்துவிட்டுப் பூட்டிக்கொண்டு படுத்தேன்.

"என்ன மச்சான் கால்கை எல்லாம் விறைக்குது. ஊ...ஊ..." என்றார் வாத்தியார்.

"ஓம் மாஸ்ரர், சரியாய் குளிருது. இப்ப என்ன செய்யலாம்?" என்று இடையில் புகுந்து அழகு கேட்டான்.

"என்ன, அப்பனுக்கு குளிருதோ? ஒன்று செய்யன். அந்த சவலால மண்ணைத் தோண்டு; நான் உன்ர மூஞ்சியை மட்டும் வெளியில விட்டு தாட்டுவிடுறன்."

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இப்படிக் கஷ்டங்களையெல்லாம் கேலியாக மாஸ்ரர் மாற்ற, அடக்கமுடியாமல் நான் சிரித்துவிட, "போங்கோ மாஸ்ரர்" என்று திரும்பிப் படுத்தான் அழகு.

"இயக்கமென்றால் கஸ்ரப்படோணும், தெரியாதோ? குளிரில கிடக்கோணும், தண்ணிக்கை நிற்கோணும், ரண்டு மூன்று நாளைக்கு சாப்பாடு கிடையாது என்று தெரியாதே? மெத்தையில கம்பளி போர்த்துப் படுத்து, முட்டைக் கோப்பியை பல்லுத்தீட்டாமல் குடிக்கலாம் என்றோ நினைச்சனி?" என்று மேலும் கிண்டினார். அவன் அசையாமல் கிடந்தான்.

"இந்த தில்லைச் செடியின்ர பால் பொல்லாத சாமானடாப்பா. உடம்பில பட்டா அப்பிடியே அவிஞ்சுபோடும்" என்று வாத்தியார் கூற, உம் என்று கண் மூடினேன். அதிகாலைப் பனிப்புகார் உறைந்துபோய் எம்மேல் படிந்து கிடந்தது. குறித்த தூரத்திற்கப்பால் ஆளையாள் அடையாளங் காணமுடியாத புகார். உடலைச் சிலிர்த்துக்கொண்ட எழுந்தோம்.

இளம் கதிர்கள் எம் உடல்களைக் குத்தி விறைப்பை விரட்ட ஆரம்பித்தன. புகாரும் மெதுவாகப் படிய ஆரம்பித்தது.

"பற்பொடிகிற்பொடி ஒன்றுமில்லை. உவங்களை எழுப்பிக் கொண்டு வாங்கோ. அந்த ஆற்றுப்பக்கம் போய் அலுவலைக் கவனிப்பம்" என்றார் மாஸ்ரர். கடமைகளை முடித்திட, அதே ஆற்றுநீரில் தயாரான பிளேன்ரீ உடலைச் சூடாக்கியது. 10.30 மணியளவில் எமது பரீட்சார்த்த வேலைகளை முடித்துவிட்டு, பரந்தவெளியை விட்டு கும்பலாய் வெளியேற ஆரம்பித்தோம். றஞ்சனும், வர்மனும், இதயனும் அடக்கமாய் அழகையாவுடன் சேர்த்து நாம் ஏழுபேராக புதிய ஒரு திட்டமிடலை நடாத்தத் தொடங்கினோம்.

"நீ போய் மாஸ்ரரிட்டை ரைபிளை வாங்கு", அழகை ஏவினோம்.

"மாஸ்ரர் ரைபிளைத் தாங்கோவன், வைச்சிருக்கிறன்"

வாத்தியார் அவனை சந்தேகமாய்ப் பார்த்தார். சுடக்கிடப் போறானோ என்று எண்ணினார் போலும்!

உங்களுக்கு கைமுட்டு வலிக்குதென்றியள், தாங்கோவன் என்ற கிளிப்பிள்ளை பாடத்தை இவன் ஒப்புவிக்க, சிஷ்யனுக்கு என்னில இவ்வளவு கரிசனையோ என்பதைப் போன்ற வியப்புடன் பார்த்தபடி,



தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

"உன்ர ஆசையை ஏன் கெடுப்பான். சும்மா ஆசையென்றாலும் பரவாயில்லை. கடைசியாசையெல்லோ! போகேக்க பெட்டியிலதானே போறது" என்று கூறி ரைபிளை ஒப்படைத்த பின், "அழகின்ர பொடியை நான்தான் பண்ணாகத்துக்குக் கொண்டுபோவன். பெரிய காரில ஏறி எனவுன்ஸ் பண்ணுவன்; வாயினுள் சோக மியூசிக்கை சிறிது இசைத்தபின், பண்ணாகத்தைச் சேர்ந்த வீரவேங்கை அழகையா, மாங்குளம் முகாம் தகர்ப்பில் எதிரியின் எறிகணை வீச்சுக்கு இலக்காகி வீரமரணமடைந்தார். இவர்...." என்று ஏதோவெல்லாம் கூற அழகு மாஸ்ரரைக் கட்டிப்பிடிக்க முடிவடைந்தது.

"மாஸ்ரர் வாங்கோ பின் பெட்டியிலை இருப்போம்." எனக் கூறிய நான் கண்ணடிக்க எல்லோரும் ஏறிக்கொள்ள, பெட்டியின் வெளி விளிம்பில் நான், அடுத்து வாத்தியார், அப்பால் றஞ்சன், மாஸ்ரருக்குப் பின்னால அழகையாவை இருத்தியிருந்தோம்.

"மாஸ்ரர், என்ன உடம்பெல்லாம் சுடுகிறமாதிரி இருக்குது?"

"ராத்திரி பனிக்கை படுத்தது ஒத்துக்கொள்ளல. ராத்திரி பெரிய ஆள்மாதிரி எனக்குச் சொல்லிப்போட்டு இப்ப தெரியுதோ பனியைப் பற்றி? ஆர், அழகோ, நீ சரியான கெட்டிக்காரன்! பனி கூடாதென்று சொன்னதுக்கு கை தரவேணும். ஒரு கதை சொல்லுறன் கேளன்."

"ஆரோ ஒரு ராசா வேட்டைக்கு போறதுக்கு முதல் கேட்டானாம் மந்திரியிட்ட, இன்றைக்கு மழை வருமோ என்று, 'சீ இன்றைக்கு வராது பயப்பிடாமல் போகலாம்' என்று சொல்ல அவற்றை பேச்சைக் கேட்டு ராசா வேட்டைக்குப் பரிவாரத்தோட போனாராம். அப்ப வாற வழியில ஒருத்தன் ஒரு கழுதையில வந்து ராசாவைக் கும்பிட்டு, 'ராசா ராசா இன்றைக்கு வேட்டைக்கு போறது அவ்வளவு நல்லதல்ல, மழை வரும்போல கிடக்கு' என்று சொல்ல, ராசா 'போடா பேயா' என்றுவிட்டுப் போனாராம்."

அழகையாவின் தலையை ஒருபுறம் தள்ளிவிட்டு அட நீயே, நான் கழுதைக்காரன் என்று நினைச்சன் என்று கூற இவன் அவருக்குத் தெரியாமல் பொறு பொறு என்று தலையாட்டினான்.

பின்னர், வேட்டைக்குப் போனா ஒரேமழை! நல்லா நனைஞ்சு தோய்ஞ்சு வந்தாராம். ஈர உடுப்பும் மாற்றாமல் உடனே அந்த கழுதைக்காரனைக் கூட்டிவா என்று அனுப்பி அவனை

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

விசாரிச்சாராம். ''எனக்குத் தெரியாதையா, கழுதைதான் அடையாளம் காட்டிச்சு'' என்று சொல்ல, மந்திரியைக் கலைச்சுப்போட்டு, ராசா கழுதையை மந்திரி ஆக்...."

இவ்வேளை 'பொத்' என வாத்தியார் சறுக்கி விழுந்து வீதியின் நீர்ப்பரப்பில் ஒருகணம் தடுமாறி கையை ஊன்றி ஓடிவரத் தொடங்கினார். தலையிலிருந்து நீர் சிந்திப் பறந்தது. நீருக்குள் வேகமாக ஓடிவரமுடியாமல் மீண்டும் மீண்டும் மூன்று தடவை விழுந்து எழும்பினார். ரைக்ரரை கொஞ்சம் வேண்டுமென்று நாங்களும் தள்ளி நிற்பாட்டினோம். இதற்குள் அழகன் இறங்கி முன்நின்ற ரைக்ரரில் ஏற அது பறந்தது.

"என்ன மாஸ்ரர்? தவறி விழுந்தியளே? ஏதாவது காயமே? என்று கேலியாக விசாரிக்க,

''உந்த மோட்டு... தள்ளி விழுத்திப்போட்டான். நீங்களும் சேர்ந்துதான்'' என சந்தேகமாக அவர் பார்க்க, 'சீச்சீ உங்களுக்கு செய்வமே, நீங்களும் எங்கட எஸ்.ரி.எவ் தானே,' என்றேன். நொண்டிய மாஸ்ரரை கைகொடுத்து வந்து ஏற்றினேன். எஸ்.ரி.எவ் என்பது விசேட அதிரடிப்படை. அதில் ஏழுபேர் இருந்தோம். அதில் இந்தச் செயலுக்குத் திட்டமிட்ட அனைவரும் எஸ்.ரி.எவ் அல்ல. அதில் நானும், வர்மனும், ரஞ்சனும் மட்டுமே.

எமது நடவடிக்கை மாஸ்ரருக்கு செய்தது போன்ற துணிகரத் தாக்குதல்களில் இருவரைக் கொழுவிவிடல், புதிதாக பட்டம் சூட்டுதல், இவை போன்ற அநேகமானவை. இத்தனை காலமும் பிரிந்து செயற்படாமல் இருந்த எம்முடைய இணைப்பின் முதல் தாக்குதல் இதுவாகும். இதில் சிலபேரை கருவியாகப் பயன்படுத்துவோம். பின்னர் அவர்கள் மோதுப்பட நாங்கள் விலகுவோம்; அதுதான் எமது இராஜதந்திரமும் அடிப்படைச் செயல்வடிவமுமாகும்.

மாலை 6.30 மணியளவில் எமது அணிகள் பயிற்சியை முடித்துக்கொண்டு மாங்குளம் பயணமாகின. ஒரு ரைக்ரரில் அதே ஏழுபேர் ஏறியிருந்தோம். அழகுக்கு பதில் இதயன். அவன் வேறு கோஷ்டியுடன் சேர்ந்ததால் எம்முடன் இணையாது இப்போதுதான் வந்திருந்தான். இம்முறை வாத்தியார்அவதானமாக இருந்தார்.

'ஓடுற ரைக்ரரில இருந்து தள்ளிப்போட்டு பேந்து கை கால் முறிய, முசுப்பாத்தி என்றவங்கள்.'



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

'போடுற உடுப்பிலையும் அழகையாவும் வரதனுமாய் சேர்ந்து மட்டத்தேளை, எறும்பை விட்டுவிடுவான்களோ?'

அவர்கள் இருவரையும் தன் கதையில் வர்மன் இழுத்தான்.

'பொறு பொறு இரண்டுபேருக்கும் நல்லாய் குடுக்கிறன்.'

வாகனம் விரைந்தது.

இரவின் ஆரம்பத்தில் இன்னும் நிலா வரவில்லை. வெறும் வெள்ளிகள் மட்டும் கூட்டம் கூட்டமாய், தொலைந்த நிலாவை சிமிட்டிச் சிமிட்டித் தேடிக்கொண்டிருந்தன. மேகவேலிகள் இடையிடையே குறுக்கறுத்துச் சென்றன.

சிதைந்துபோய்க் கிடந்த பரந்தன் கட்டடங்களும் மகாவித்தியாலயமும் இருட்டில் லேசாகத் தெரிந்தன. எவ்வளவு சந்தோசமாக மக்கள் வாழ்க்கை நடாத்திய இடம்? இன்று அங்கொன்றும் இங்கொன்றுமாய் அழுதுவடிக்கும் குப்பி விளக்குகள் குடிசைகளில மாத்திரமிருக்க, முன்பு விதம் விதமாய் நிறபல்புகள் பளிச்சிட்ட நகரம் இன்று ஊமையாக, சோகமே உருவெடுத்து குந்தியிருந்தது. ஏனிந்த அவலம்? தமிழரின் தாயகமென்பதால்தான் இப்படியோ? புதியதோர் விதி இனிதாய் சமைத்திடுவோம்.

"பார்த்தீங்களோடா ரவுணும், பள்ளிக்கூடமும் கிடக்கிற கிடையை? இதெல்லாம் அவனுக்கு என்ன செய்ததுகள்? சும்மா எங்கட இடத்தை பாழடிக்க வேண்டுமென்று அவன் செய்கிற வேலை." மாஸ்ரர் கறுவியதை இப்போதுதான் கண்டேன். அவரின் குமுறுகின்ற எரிமலை உள்ளத்தை இப்போதுதான் உணர்ந்தேன். கண்களில் ஒரு ஒளி பிரகாசமாக சுடர்விட்டது. உண்மையில் சந்தோசமாக சிரித்துப் பழகும் ஒவ்வொரு போராளியின் மனமும் பூமிக்குள் எரிமலைக் குழம்பு கொதிப்பது போல் உள்ளேயிருக்க, புறத்தோற்றத்தில் அவர்களின் சந்தோசங்கள் மிதக்கின்றன. எரிமலை கீழிருக்க குளிர்ந்து ஓடும் ஆறுபோல்தான் அவர்களது சந்தோசச் சிரிப்பும் அன்பான வாழ்க்கையும்! இது ஒவ்வொரு போராளி விடயத்திலும் உண்மை.

அந்நியனோடு சமராடுகையில் தேசப்பற்று அக்கினிக்குழம்பாய் பாயும். எதிரிகூட புலிகளை வியப்பான். ஒருமுறை, இந்திய இராணுவ தளபதி ஒருவர் கூறுகையில், "புலிகளின் ஆயுத ஆட்பலத்தை சரியாக கணித்திருந்த நாம் அவர்களின்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஆன்மபலத்தை (மனோபலம்) சரிவரக் கவனிக்கத் தவறியதால், இந்த யுத்தத்தில் வெல்ல முடியாது திணறுகிறோம்" என்றார். இதேபோன்றுதான் இன்று உலகமே புலிகளைக் கணித்திருக்கின்றது.

எமது பயணம் நீண்டதாய், மிக நீண்டதாய் குடிசைகளை, வயல்களை, வாய்க்கால்களை, காடுகளை கிராமங்களைத் தாண்டி நீண்டு சென்றது.

"மச்சான் கிளிநொச்சி பழைய காம்படியில கொஞ்சம் சிலோவாப் போ. பார்த்துக்கொண்டு போவம்" சலாமிற்கு குரல் கொடுத்தேன். "இதுதான் பழைய காம்ப். இப்ப இரண்டு மூன்று மாதத்துக்குள்தான் ஓடினவன். உந்த பெரியமாடியில இங்கால இருக்கிறதுதான் பழைய பொலிஸ் ஸ்ரேசன். உதுக்குள்ள எல்லாம் ஆமி இருந்தவன். பின்னுக்கு ஒரு சின்ன குளக்கட்டு இருக்கு. அதுக்கு இங்கால அவன்தான் இருந்தவன்."

"இப்படி இருந்தவன் ஒன்றையும் உடைக்கேலையே?" இது வாத்தியாரின் குரல்.

"உங்கால வாற கட்டிடங்களை பார்த்தாத் தெரியும். எல்லாக் கடைகளையும் உடைச்சு எரிச்சு உள்ளதெல்லாத்தையும் களவெடுத்தும் போட்டான்கள்."

அந்நிய ஆக்கிரமிப்பில் சிக்கிச் சிதைந்த கட்டடங்கள் கருகிக் கறுப்பாகி, அரைகுறையாய் போட் பலகையுடன் நின்றன.

நகரின் கடைகளெல்லாம் கடந்து கோயிலைக் கடந்துவர "அந்தா அங்க தெரியிறது ஆஸ்பத்திரி. இங்கால திரும்பிப் பாருங்கோ."

ஒரு பெரிய கட்டடம் குகைமாதிரி வெள்ளையாய் உடைந்துபோயிருந்தது. தொட்டந்தொட்டமாய் பல கட்டடங்களும்.....

"இதுதான் மாஸ்ரர் நெல்சந்தைப்படுத்துற ஸ்ரோர். இதுக்கதான் எங்கட துரோகிகள் இருந்தவன்கள். இதுக்க இருந்து செய்த அநியாயங்கள் சொன்னா கேட்கேலாது. ரெயினிங் என்று சொல்லி ஊர்ப்பொடியள் எல்லாத்தையும் இங்கதான் கொண்டுவந்து வைச்சிருந்தவங்கள்.

இதுக்குள்ள பிடிபட்டிருந்த எனக்குத் தெரிந்த பெடியள்


தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

சொன்னவங்கள், தங்களுக்கு முன்னாலேயே எத்தனையோ பொடியள் செத்திருப்பாங்களாம். அநேகமான பொடியள் நிலத்தில துவண்டும், இழுபட்டும்தான் திரிவான்களாம். எத்தனையோ பொம்பளையள் பெரிசா குளறுவது கேட்குமாம். பின் தரதரவென்று இழுத்துக்கொண்டு போய் ரெலிக்கா வானில போட்டு காட்டில எரிப்பான்களாம். ஒரு பெடியனை முள்ளுக்கம்பியால கட்டிப்போட்டு கழுத்தைச் சுற்றி ரயரைக் கொழுவி எரித்தவன்களாம்." ஆத்திரத்துடன் கொட்டினேன்.

"ஒரு நாள்......"

"சொல்லாதையடா, என்னால கேட்கேலாது."

இவ்விதம் ஒருமுறை என்னை உலுப்பிவிட்ட அந்தச் சிலுப்பிய கரத்தின் நடுக்கத்திலிருந்து, அந்த உள்ளத்தின் கோபத்தையும் உறுதியையும் உணர்ந்துகொண்டேன்.

"மச்சான், என்ர நெருக்கமான நண்பர் இரண்டுபேர் இப்படித்தான்ரா காணாமல் போனவங்கள். ஒரு பிடி சாம்பல் கூட கிடைக்கேல்லையடா. துவக்கில்லாதவனிடம் வீரம் காட்டுற பேடிகளடா"

வாத்தியாரின் இருதுளி சூடான கண்ணீர் என் கரத்தில் சிதறியது. வானை அண்ணாந்து பார்த்தேன். சந்திரன் ஏறத்தொடங்கினான். யானை ஒன்று பிளிறிய புறத்தை வெறித்துப் பார்த்தபடி வாத்தி இருந்தான். முழங்காலில் ஊன்றியபடி ஒற்றைக் கரத்தில் இறுகப்பற்றியிருந்த ஏ.கே.குழல், வாகன அசைவிற்கு ஆடுவது தெரிந்தது (இது நாம் வாழ்வில் மிக உணர்ச்சிவசப்பட்ட தினம்).

மாங்குளத்தில் ஏனைய அணிகள் தங்கிவிட 3 அணிகள் மாத்திரம் மாங்குளமுகாமின் மறுபுறம் வரவேண்டிய தேவையிருந்ததால் சுமார் 40 மீற்றர் தூரத்தினால் செல்ல வேண்டிய இடத்திற்காய் ஏறத்தாழ 40 மைல் தூரம் பயணமானோம். இரவு ஒரு மணியளவில் ஒட்டுசுட்டான் சந்தியில் ஒரு தேநீர்க்கடை ஐயாவை எழுப்பி, தேநீர் வைத்துப் பருகினோம். உண்மையில் எமது போராளிகள் ஒவ்வொருவரும் இரு குவளை தேநீரை அருந்தினர். பசி ஒருபுறமாகவும், பணி மிக மும்மரமாகவும் வாட்டி எடுத்தன.

தேநீர் அருந்திய பின் பயணம் கனகராசன் குளத்தை

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

நோக்கியதாக அமைய, நாம் சகலரும் நித்திரை தூங்க ஆரம்பித்தோம். ஒவ்வொருவற்கும் ஒவ்வொருவர் அணையாக தோள்களைச் சாய்த்து தூங்க ஆரம்பித்தோம். இடையிடையே மூச்சுவிடாதபடி ரைக்ரர் குலுக்கவும் திடுக்கிட்டு சலாமைத் திட்ட, அவன் விசமமாய் சிரித்து ஓட்டினான். இடையிடையே நித்திரை தூங்கினாலும் தொடர்ந்து 5 நிமிடம் கூட ஒருவரும் நித்திரை கொள்ளவில்லை. இருபுறமும் அடர்ந்த காடுகள் எமக்கு எதிராக ஓட்டம் காட்டின. நிலவு இப்போ நன்றாக மேலெழுந்துவிட்டது. சடுதியான நிறுத்தத்துடன் திடுக்குற்று விழித்தோம்.

"மச்சான் டேய்! உங்கற்றா, எந்தப் பெரிய பாம்பென்று பாருங்கோ."

எங்க? தடக்கியபடி முன்னே பார்த்தோம். ரைக்ரரின் கெட்லைற் ஒளி வெளிச்சத்தைக் கக்க, மண்ணிற வர்ணத்தில் பெட்டி பெட்டியாய் அமைத்து மினுக்கத்தைக் காட்டியது. அந்த 6, 6½ அங்குல அகல உடற்பாகம்.

"உதே மலைப்பாம்பு?"

வாத்தியார் நித்திரை முறிக்க, "இங்க எங்க கிடக்கு மலை? ஒருவேளை கற்றன் பக்கம் இருந்து வந்ததோ?" வேண்டுமென மாஸ்ரரைச் சீண்டினேன். மாஸ்ரரின் சொந்த இடம் மலைநாடு. கற்றன் என்பார். என்னைப் பொறுத்தவரை எங்கும் உள்ள ஊர்களெல்லாம் மலை என்ற எண்ணம் உண்டு. மாஸ்ரர் என்னைப் பார்த்து நமுட்டுச் சிரிப்புச் சிரித்து, "போடா விசரா" என கையைக் காட்டியபடி நகர "உதுதான்ரா வெங்கிணாந்தி. மச்சான், நீ ரைக்ரரை தலைப்பக்கத்துக்குக் கிட்டவா ஏத்து பார்ப்பம்" என்றேன். ரைக்ரரை ரிவேஸ் செய்து, இடதுபுறமாக மெலிந்த உடல் தெரிய அதைத் தலைப்புறமென ஊகித்து, முன்சில்லைப் போகவிட்டு பின்சில்லை ஏற்றி நசியவிட்டான். பாம்பு தலையைத் தூக்கினால் பாய்வதற்கு ஆயத்தமாக நாம் எதிர்ப்புற ஓரத்தில் நின்றுகொண்டோம். வாற்புறமாகத் துடிப்பது தெரிய உற்சாகமானோம்.

"மச்சான் விடாத கான்பிறேக்க, அந்த இடத்தில போடு என்ன செய்யிறார் என்று பார்ப்பம்."

"உது சாகுமோடா?" மாஸ்ரர் கேட்டார்.

"ஏன் சாகாது? ரைக்ரர் பின்சில்லு ஏறினா தப்புமே! அப்ப


தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

கட்டியிழுத்துக்கொண்டு போவம்!"

உற்சாகமாய்க் கூறி முடிப்பதற்குள் கிட்டத்தட்ட எல்லோரும் வாய்விட்டு மனம் விட்டு ஒருங்குசேர, "ஆ..... ஐயோ!" என்றோம். ஏனென்றால் அந்த வேகத்தில் 20 அடி நீள வாற்புறத்தால் பெட்டியில் உறைப்பாக ஒரு அடிபோட்டது! கொஞ்சம் எங்கள் மேல் விழுந்திருப்பின் மூவரது காலும் உடைந்து போயிருக்கும். அடுத்தகணம் பாய்ச்சலாக மறுபுறம் வந்தோம்.

"என்ன மச்சான், இந்த அடியடிக்குது. கெட்ட சாமான்போல"

சடார் சடார் எனத் தொடர்ந்து போட, "இண்டைக்கு பெட்டிப்பலகை சுக்குநூறுதான்" என்றேன்.

மாஸ்ரருக்கு கீழே நிற்கவும் பயம், மேலே நிற்கவும் பயம்!

"போடா விசரா!" அவர் உண்மையாகச் சினந்தார்.

வாய்ப்புறமாக சரசரக்க பெட்டியின் ஓரத்தில் நின்று எட்டிப்பார்க்க, உடலை வளைத்து மெதுவாக உயர்த்தி ரைக்ரரின் முன்புறமாக வளைந்து வந்தது. வாலால் பெட்டிக்கு அடிக்கும்வரை சிரித்துக்கொண்டிருந்த சாரதி சலாம் இப்போது, சீற்றுக்கு மேல் ஏறி நின்றான். அடுத்து எதிர்க்கரை மட்காட்டில் ஏறும் எண்ணம் போல் ஒருகாலை மட்காட்டில் ஊன்றி நின்றான். அகன்ற கழுத்தைத் திருப்பி வாய்க்குள் இருந்த இரையை மெதுவாகக் கக்கியது. ஒரு பஞ்சுபோன்ற முயல் இரத்தக் களரியில் முகம் எது உடல் எதுவென தெரியாது சிதைந்து கிடந்தது.

"மச்சான் இரையைக் கக்கிட்டுது. இனி கலைச்சு கலைச்சு கடிக்கப் போகுது" என்று பயம்காட்டி தோளைப் பிடித்து தள்ளுவதாக உலுப்ப, ரஞ்சன் "ஐயோ" என்றான். சிரித்தபடி கவனமாய் நின்றோம். வாயை அகலத்திறந்து முன் சில்லின் றிம்பகுதி வெட்டுக்குள் கொடுத்து ரயரைக் கௌவியது. அப்போதுதான் பார்த்தோம். சிறு முயற்குட்டிகள் மூன்று, லைற் வெளிச்சத்தில் மும்முரமாக எதையோ தேடின. மணந்து மணந்து பிஞ்சுக்கால்களால் விரைவாகத் தேடின. ஐயோ! பார்க்க முடியவில்லை! இந்தக் கொடியவனால் கொல்லப்பட்ட பாசமிகு அம்மாவைத் தேடுகின்றன. அது பாலுக்காகவும் இருக்கும், பாசமாகவும் இருக்கும்.

முகத்தை வேறுபக்கம் திருப்பிக்கொள்ள, கொடியவனின் வால்

தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive

ஒருமுறை உயர்ந்து தாழ, வாய் அகலமாய் விறைக்கத் தொடங்கியது. முயற்குட்டிகள் பாவம். தாயைத் தேடுதுகள். பாம்பைக் கட்டி இழுக்கும் உற்சாகம் இல்லாது சலிப்புடன் வாகனத்தை இயக்கி மறைந்தோம். போராளிகள் ஈரமான உள்ளம் படைத்தோர்கள். அவர்கள் தங்களை விடப் பிறரது இழப்புக்களை, அற்ப பிராணியின் உயிர்ப் பிரிவையும் தாங்க மாட்டாதவர்கள். தம்மைத் தாரைவார்ப்போர்க்கு இப்படி ஒரு மனம்!

எந்தச் சூழலிலும் ஒரு வாழ்க்கைப் போராட்டம் இடம்பெறத்தான் செய்கின்றது. இழப்புகள் எங்கோ நடக்கத்தான் செய்கின்றன. அன்று பசுவின் கன்றை முதலை பிடிக்கின்றது. அழுங்கு ஒன்று மயிலைக் கொல்கின்றது. பாம்பை மயில் கிழிக்கின்றது. ஆரைக் கண்டாலும் எச்சரிக்கும் ஆட்காட்டியின் முட்டையையும் வயல்களில் ஏதோ திருடுகிறது. முயலைப் பாம்பு பிடிக்க குழந்தைகள் தேடுகின்றன. இதுதான் உணவுக்கான உயிரின வாழ்வுப் போராட்டம் போலும்!

மனிதன் வேறுபட்டவன், அவற்றைவிட மேலானவன் எனக் காட்ட வேண்டாமா? அவன் உணவுக்காக தன் மனித இனத்தவனைக் கொல்லவில்லை. ஆனால் ஆக்கிரமிப்பிற்காகக் கொல்கிறான். அடக்கி அடிமையாய் ஆள்கின்றான். அவன் கொடூரமானவன் அப்படியானவனை அழிப்பது வெங்கணாந்தியை, முதலையைக் கொல்வதைவிட உத்தமமான செயல். அவனை அழித்து அபயம் அளிப்பவனே ஆத்ம ஞானி.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# 6

காலை 5.10 மணியளவில் பனிப்புகார் மண்டியிருக்க அவசர அவசரமாய் ஓங்கி வளர்ந்திருக்கும் பற்றைக் காட்டிடையே ரைக்ரரை உள் நுழைத்து வீதியால் செல்லும் எவருக்கும் தெரியாதவண்ணம் நன்றாக மறைத்தபின், முகத்தை கழுவுவதற்காய் குடிசை தேடி நடக்கத் தொடங்கினோம். இருள் அகன்றது. பனிப்புகார் மூட்டமாக இறுகி நின்றது. வீதியின் இடதுபுறமாக சற்று உள்ளே ஒரு சிறிய வீடு தென்பட்டது. "வெளியில நின்று கூப்பிட்டுப் பிரயோசனமில்லை உள்ளுக்குப் போவம்" என்று ரஞ்சன் கூற, உள்ளே நடக்க ஆரம்பித்தோம்.

பாதையின் இரண்டு மருங்கிலும் செவ்வரத்தைச் செடிகள் சிவப்பும் மஞ்சளுமாக பூத்திருந்தன. சிறிது நேரத்திற்கு முன்னர் தான் அவை முகை அவிழ்ந்திருக்கவேண்டும். ஈரமான சுருக்கம் நீங்காத இதழ்களுடன் நின்றன. மூலையில் பெரிய வேம்பு மரமும் படர்ந்து நிழலை ஏராளமாகக் கொடுத்தது. வேம்பின் அடியில் சின்னஞ்சிறிய கோயில் ஒன்று.

"அம்மா! அம்மா! ஒருக்கா கிணற்றடியில முகம் கழுவலாமே?"

"அதுக்கென்ன, வாருங்கோ இதாலை."

வீட்டின் நாயகன் வழிகாட்ட பின் தொடர்ந்தோம்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

"இந்தாங்கோ பற்பொடி. கழுவுங்கோ" என்றார்.

கிணற்றுக்கு அருகாகத் தோட்டம், பச்சைப் பசேலென பரந்து கிடந்தது. மரக்கறிப் பயிர்களுடன் செழித்திருந்தது. கத்தரிகள் காய்களை சுமக்க முடியாமல் பனி ஈரத்தில் தடுமாறின.

"இவற்றிற்கு என்னவென்று தண்ணி ஊத்திறனீங்கள். மண்எண்ணை சரியான விலையே?"

"மண்எண்ணை ஆருக்குத் தேவை? உதிலை கிடக்கிற பட்டையால இறைச்சுத் தள்ளலாம். மகன் துலாமிதிப்பான். நான் ஒரு இரண்டு மணித்தியாலத்தில் இறைச்சுப்போடுவன்."

அருகில் நின்ற அந்த மகன் இப்போதுதான் ஒன்பது வயதை அடைந்திருப்பான் போலத் தோன்றினான். யாழ்ப்பாணத்துப் பக்கத்தில இப்படியே? இந்த நேரம் எழும்பியிராதுகள். இல்லாட்டி ரியூசனுக்குப் போயிருக்குங்கள். மனதுக்குள் எண்ணிக் கொண்டேன்.

இன்று அந்நிய உணவுக் கப்பல்களையும் லொறிகளையும் எதிர்பார்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. இத்தகைய காரணிகளால் காலனித்துவ காலத்திலிருந்து படிமுறையாக சிதைக்கப்பட எமது சொந்த சுய பொருளாதாரம் மீண்டும் என்று முளைவிடுமோ, என்று எம்மக்கள் உணரத் தலைப்படுகின்றார்களோ, அன்றுதான் நாம் எம்மைச் சீர்படுத்தி அந்நிய தேவையை செயலிழக்கச் செய்யலாம்.

"தம்பியவை வாருங்கோ, தேத்தண்ணி குடிச்சிட்டுப் போகலாம்."

"இல்லை அங்க குடிக்கிறம்."

"பரவாயில்லை, வாருங்கோ"

ரம்ளர் நாகரிகமில்லாது மூக்குப்பேணிகளில் வார்த்து தாயார் தந்த பசும்பால் தேனீரை மணக்க மணக்க குடித்தோம். உற்சாகம் மீண்டும் குடிகொண்டது.

"அப்ப, போட்டுவாறம்"

வரிசையாய் ரோட்டுக்கு விரைந்தோம். சிறிது தூரம் நடந்து ஒரு மதகில் அமர்ந்தோம். பழைய பழக்கம் தொத்திட்டுதப்பா. என்ன செய்யிறது? எனக் கையைக் காட்டியபடி மாஸ்ரர்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அருகில் அமர்ந்தார். குரங்கொன்று முன் வீரையில் இருந்து பார்த்துக்கொண்டிருக்க, "உங்க பார் எங்கட பாட்டனை" என்று கல்லை வீச அது பாய்ந்து போனது.

ராத்திரி துப்பரவாய் நித்திரையில்லை. எங்கையாவது கட்டையில் சாயவேணும். மக்கன்றோ அண்ணா கொண்டுவந்த பாணையும், வாழைக்குலையும் தின்று முடித்தபடி ஆலோசித்தோம். "மத்தியானம் எங்கையடாப்பா இருப்பியள்?" மக்கன்றோ அண்ணன் கேட்டார்.

"தின்றுபோட்டு விடிய விட்டத்துக்குப் பக்கத்தில நித்திரை கொள்ளுவோம். வேறொரு இடமும் போகமாட்டோம்."

"நான் போறன். உதுக்க பிஸ்கற்றும் கோல்மன்சும் இருக்கு."

"சரியண்ணை போய்ட்டுவாங்கோ"

தலை மறைந்தவுடன் உரப்பையில் பாய்ந்தார்கள்.

"விடுங்கடாப்பா, நான் எடுத்துத் தாறன்."

மாஸ்ரர் பிஸ்கேற்றை எடுத்துக் கொடுத்தார்.

அட்டகாசமான காற்று. நல்லா நித்திரை வரும். தடியால் கஞ்சல்களை ஒதுக்கி சாக்கை விரித்துச் சாய்ந்தோம். மாலை சிறிய நடையொன்றைப் போட்டு, வயல்களைக் கடந்து பெரிய மாந்தோட்டமும், ஏதோ அரச கட்டடமும் குறுக்கிடக் கேட்பாரின்றி இறங்கி விலாட்டு, சேலம் மாங்காய்களைப் பறித்து நீர்ப்பாய்ச்சும் வாய்க்காலில் அமர்ந்து சப்பத் தொடங்கினோம். முன் வயலுக்குள் இரண்டு மயில்கள் தோகைவிரித்து ஆடவில்லை. சுருங்கியபடி ஓடின. எங்களில் ஒன்று எழும்பி நின்று பெரிதாகக் கத்தியதன் விளைவுதான்.

இரவு புறப்பட்டு முகாமிற்கு அருகாக மன்னங்குளப்புறத்தில் இரகசியமாகத் தரித்தோம். இனிமேற்தான் நாம் சரிவர இரகசியம் பேணும் அவசியம் ஏற்பட்டது. மக்கள் எவரும் பார்ப்பின் விளைவுகள் பாரதூரமாக அமைவதுடன், எமது திட்டங்கள் சிதைவடைவதற்கும், எதிரியின் தயாராக்கத்துக்கும் அடிகோலாக அமையலாம். இதனால் வரும் கட்டுக்காவலை பரந்து பலமாக்கினோம். மறுதினம் முற்றாக அவ்விடத்தில் தரித்த பின்னர், அடுத்தநாள் முகாம்நோக்கி நாம் மட்டும் சென்றோம். ஏனெனில், பல ஆயத்த வேலைகள் செய்யவேண்டி இருந்தமையாகும். 16ம்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

திகதி காலை 9.45 மணியளவில் முகாமில் எமது காவலரண்களை அடைந்தோம். வர்மன் முகாமின் மறுபுற இலக்கிற்கு உடையவனாகையால், அப்பால் அனுப்பி வைத்தோம். மாஸ்ரர் வாருங்கோ, இந்த வீட்டிற்குள் இருப்போம். முதல் வருகையின் போது நான் கண்ட அந்த ஒருபுறச் சுவரிடிந்த வீட்டினுள் குடிபுகுந்தோம். ''மாஸ்ரர், பொடியனை வளைச்சு காட்ட வேண்டியது உங்கட வேலை. நாங்கள் சொன்னா வடிவா செய்யமாட்டான்கள்.''

''நீ சும்மா ஏத்தாதை''

''சத்தியமாய்ச் சொல்லுறன்'' எனத் தலையில் அறையப்போக மறித்து, ''சரி சரி உண்மைதான். அங்கால போ. நான் செய்விக்கிறன். உன்ரை மூஞ்சியைக் கண்டாலே செய்ய மாட்டான்கள்.''

''சரி சரி, நான் பொயின்ருக்கு போறன்.''

கடப்பைத் தாண்டி அப்பாலே குதித்தேன். காவலரண் போராளிகளுடன் சிறிது நேரம் உரையாடிய பின் மீண்டும் குடிசைக்குத் திரும்பினேன். பளிச்சென்று குடிசை, முற்றம் எல்லாம் காட்டி, மாஸ்ரரும் அழகையாவும் நீளக் காற்சட்டைகளை மடித்துவிட்டு நீர் தெளித்த வண்ணம் நின்றார்கள்.

''அழகு எப்ப மச்சான் வந்தனி?''

''மாப்பிளை இப்பதான் வந்தார். கோதாரி விழுவான் ரைக்ரரை மாறி ஏறி அங்காலப் பக்கம் வந்து இறங்கினானாம்.''

வாத்தியார் பெரிதாய் சிரித்து, ''ஏன்ரா என்னைத் தண்ணிக்குள் விழுத்தினனி?'' என்றார்.

எனக்கு விசயம் விளங்கிவிட்டது. இப்போ போனால் என்னை இருவரும் சண்டை பிடிப்பது போல் குளிப்பாட்டுவார்கள் என்று தெரிந்து முடிந்தவுடன், ''ஏன்ராப்பா உள்ளுக்க வாவன். நாங்கள் உனக்கு ஏதும் செய்வமே?''

''நீங்கள் பொல்லாத எஸ்.ரி.எவ் ஆட்கள். பிறகு எங்கள தண்ணியில தாட்டு எடுப்பியள்!''

அவரின் குரல் கேலியாக இருந்ததைக் கவனிக்காமல் அப்பிடி வாங்கோ வழிக்கு என்று நினைத்தபடி வீட்டுக்குள் நுழைந்து திண்ணையில் அமர்ந்தேன். ''அழகு உள்ளே போய் அந்த


தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

பிஸ்க்கட் பெட்டியை...." மாஸ்ரர் சொல்லி வாய் மூடுவதற்குள் அழகை முந்திக்கொண்டு பாய்ந்துபோய் கதவைத் திறக்க, கதவின் உச்சியில் கட்டப்பட்டிருந்த ஒரு வாளி நீரும் என்னை உச்சியிலிருந்து உள்ளங்கால்வரை தோய்த்தெடுத்தது. "ஆகாகா.....!" மாஸ்ரரும் அழகுவும் பெரிதாய் சிரித்து, பார்த்தியா எப்பிடி எங்கட ரெயினிங் என்று கூற, சிரித்தபடி தோற்றுப்போய் கிணற்றடிக்குச் சென்றேன். பின்னால் கூக்காட்டு கேட்டது.

''கண்ணன் எப்படிச் செத்தவர்?'' சாக்குப்படுக்கையில் இருந்தபடி மாஸ்ரர் இப்படிக் கேட்டார்.

"சனியன் பிடிச்சவன். நித்திரை தூங்கி தூங்கி வந்தவன். நான் தட்ட தட்ட என்னைப் பேசிப்போட்டு 'நானென்ன குழந்தைப் பிள்ளையே, நித்திரை தூங்கி விழுவதுக்கு! சும்மா தட்டாமல் இரன் பார்ப்பம்' என்றான். கொஞ்ச நேரத்தில ஒருக்கா ரைக்ரர் சங்கத்தானை ரெயில்வே ஸ்ரேசனடியில் கட்டையில ஏறி விழுந்தமாதிரியிருக்க என்னென்று பார்த்தேன். கண்ணனைக் காணவில்லை. பிறகு நிற்பாட்டி ஓடிப்போய் பார்த்தா நெஞ்சில ஏறிட்டுது. மச்சான், ஆள் உடனை சரி."

அந்தப் போராளியை நினைத்து பெருமூச்சொன்றை உதிர்த்தபடி தூக்கத்திற்கு (துக்கத்திற்கு) போனேன். நல்ல ஆமறி வேலை செய்யக்கூடியவன் கண்ணன். கடை முதலாளி ஒருவருக்கு மகனாயிருந்து எம்முடன் இணைந்த போராளி.....

சிரிப்பும் சந்தோசமும் வேலையுமாக 22ம் திகதியும் வந்தடைந்தது. அன்றைய தினம் அவ்வளவாகப் பனி கொட்டவில்லை. அதிகாலையிலேயே சூரியன் வீதிக்கு வந்தான். புள்ளினங்கள் அதிகமாக மரம்விட்டு மரம் தாவிக் கீதம் இசைத்தன. பட்டமர உச்சிகளில் இருக்கும் மயில்கள் வயல்வெளிகளில் கும்பல் கும்பலாய் இறங்கிவந்து ஆடின. சந்தோசமாய் தானியங்களைப் பொறுக்கின. கிளிகள் கூட்டம் கூட்டமாய் காடாய் அடர்ந்து கிடந்த கொவ்வைக் கொடிகளைப் பற்றி பழங்களை நறுக்கத் தொடங்கின. குரங்குகள் இன்று வழமைக்கு மாறாய் அமைதியாக வீரை மரங்களில் அமர்ந்து விழிவெட்டாது போராளிகளைப் பார்த்தன. இடையிடையே கண்களைத் துடைத்துக் கொண்டன.

தென்றல் இலேசாக வீசி போராளிகளை தழுவித் தழுவிச் சென்றன. பிரிய மனமில்லாது அவை காவலரண்களின் சுவர்களில் தலையை மோதிக்கொண்டன. வேகமாய் வந்த முகிற்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கூட்டம் கண்ணைக் கசக்கி இரு துளிநீரை சிந்தியபடி விம்மிப் போனது. ஆம், அந்த இனிமையான காலை விடியல் போராளிகளிடம் இறுதியாக விடைபெற்றுப் போனது. பறவைகள் சோகமாய் பாடிப்பிரிந்தன. எங்கோ தொலைவில் சேவல் ஒன்று கூவிக் கேட்டது. அந்த இனிமையான விடியலில் நாம் ஒன்றாய் அமர்ந்து தேநீர் அருந்தியபின் அவசர வேலைகளையும் தயார்ப்படுத்தலையும் ஆரம்பித்தோம்.

அருகில் வந்த வாத்தியார் என்னை ஏற இறங்கப் பார்த்தார்.

"என்ன மாஸ்ரர் அப்படிப் பார்க்கிறியள்?"

"இன்றைக்கு உன்னை வடிவாப் பார்த்திட்டு விடுறதுக்குத்தான்."

அடப்பாவிப்பயலே, என்று துரத்தினேன். மதிய உணவை பாலைமரத்தின் நிழலில் ஒன்றாய் பரப்பியிருந்து உண்டோம். வழமையாக மாரிகாலத்தில் சுட்டெரிக்கும் சூரியன் சாந்தமான மஞ்சள் கதிர்களை பாய்ச்சி குளிரவித்தான். வெக்கையால் சோரும் பூவரசு மரங்கள் நிமிர்ந்து நின்றன. பூவரசம் பூக்களை உதிர்த்தபடி, இதமான தென்றல் போராளிகளை சூழ்ந்து நின்றது. ஓலைக் குடிசை இதமாகக் குளிர்ந்தது. காகங்கள் அருவருப்பாக கதறாமல் உசாராகி இனசனத்தைக் கூப்பிட்டது.

காகம் பறந்து பறந்து கத்தினால் கடிதம் வரும். நடந்து கத்தினால் ஆட்கள் வருவினம். மாஸ்ரர் சொல்ல, "இருந்து கத்தினா?" என்றேன். "செல்தான் வரும், உன்ர தலையை எடுக்க" என்றார் வாத்தியார். அவசரமான கலந்துரையாடலுக்குச் சென்றோம்.

ஏராளமான போராளிகள் வரிசை வரிசையாக அமர்ந்து இருந்தார்கள். அவர்களின் கரங்கள் உறுதியாக நிமிர்ந்து நிற்கும் விதம் விதமான ஆயுதங்களைப் பற்றியிருந்தன. முகத்தில் என்றுமில்லாத ஒருவித ஒளியும் சந்தோசப் புன்சிரிப்பும், உறுதியும், உத்வேகமும் நிரம்பி வழிந்தது. வாழ்க்கையில் பெறுதற்கரிய பேறு ஒன்றை ஆட்கொண்டுவிட்டதாக திளைத்திருந்தனர்.

ஒரு புறமாக பெண்போராளிகள் அணிவகுத்து இருந்தனர். ஒரு பெண்ணடிமைச் சமுதாயத்தினின்று கொழுந்துவிடும் தீச்சுடர்கள் இவர்கள்! தேசிய விடுதலைப் போராட்டத்தில் குதித்து, கைகளில் வலிய ஆயுதம் தரித்து, எதிரிமுகாம் தேடி


தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தாக்கப் புறப்பட்ட வரலாற்றுப் படிகள். தன்னம்பிக்கை, சிறந்த கொள்கைத்தெளிவு, வீரம் கொண்ட இவர்கள் களம் காணப் புறப்பட்டு கைகளில் கனமேந்தியிருக்கின்றார்கள். பெயர் குறிப்பிடமுடியாத தளபதி ஒருவர் மாங்குள முகாம் மீதான தாக்குதல் பற்றி ஒரு சிறு கருத்துரையைக் கூறினார்.

1972 ஆம் ஆண்டுப் பகுதியில் ஜே.வி.பி. அடக்கப்படலுக்கு நிறுவப்பட்டு பின், 1978 இல் மீள நிறுவப்பட்டு எமது நகர்விற்கு பெரும் முட்டுக்கட்டையாகவும் மக்களின் இயல்பு வாழ்வைக் குலைக்கும் கொலைகாரனாகவும் ஈழவளத்தைச் சிதைக்கும் ஒரு கொடூரமான முகாம் இது. ஏற்கெனவே ஒருமுறை தாக்குதலை நாம் நடாத்தி பூரண வெற்றியைப் பெறமுடியவில்லை. அந்தத் தாக்குதலின் குறைநிறைகள் இந்தத் தாக்குதலில் பூரணப் படுத்தவேண்டும். மேலும் பல இரகசிய விடயங்களுடன் கலந்துரையாடலை முடிக்க, அவர்களது பகுதிகளை நோக்கிச் செல்லத் தொடங்கினோம். நேரம் 4.30 என்பதைக் காட்டிநின்றது. எமது நிலைகளை பூரணமாகத் தயார்ப்படுத்துவதில் ஈடுபட்டிருந்தோம். பேச்சுக்களை வெகுவாகக் குறைத்து தயாரானோம். பிற்பகல் 5.00 மணியளவில் இரு வை.12 விமானங்கள் தெற்கிலிருந்து பறந்து வந்தன. சூரிய ஒளியை வெட்டியபடி குழந்தை முகில்களைப் பிளந்துகொண்டு வானவெளியில் ஊர்ந்து வந்தன.

''என்ன மச்சான் சகடை வருகுது. அலேட்டாயிருக் கிறானோ?'' கவலையாக மாஸ்ரர் கேட்டார். கைகளில் துப்பாக்கி உறுதியாய் இருந்தது.

"பொறுங்கோ பார்ப்பம். சிலநேரம் சாப்பாட்டை கீப்பாட்ட போடவருவான்கள்." அவரை சமாதானப்படுத்தினேன்.

வந்த இரு சகடைகளும் ஒன்றையொன்று பிரிந்து பெரிதாய் வட்டமிடத்தொடங்கின.

"மாஸ்ரர், நீங்கள் செல்லுகளை பொடியன்களைக் கூப்பிட்டு தூக்கி பங்கருக்குள் கெதியா வையுங்கோ. நான் பார்த்துக் கொள்ளுறன்." அவர் விரைந்து போவது தெரிந்தது. அருகில் இதயன் வோக்கியுடன் டாவின் அப்பால் மாஸ்ரரிடம் செல்வதும் றஞ்சன் மரத்தடியில் குந்தியிருப்பதும் தெரிந்தது.

"என்னடாப்பா ஏதாவது போடுறானோ?" றஞ்சன் கேட்க "பொறு பொறு. ஆ! அந்தா, போட்டுட்டான்! சாமான் போல

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கிடக்கு! ஆடுது!"

மூவரும் பார்க்க ஸ்.... ஸ்.... என ஆடியாடி வந்து முகாமிற்கு தொலைவில் ஏறத்தாழ மகாவித்தியாலயத்தடியில் விழுந்திருக்க வேண்டும். "பொத்" எனக் கேட்டது.

"சாமான்தான் போட்டிருக்கிறான், பிழைச்சுப் போட்டுது."

ஓரமான மரத்தடியில் மாஸ்ரர் சொல்லியபடி நின்றிருந்தார். அடுத்த சகடை வேகமாக உட்புறம் வெட்டி சின்ன வட்டமிட்டு வீசியது. "மச்சான் உது குண்டுதான் பார். சற்றில்கொக் மாதிரி வருகுது, கவனம். எல்லாரும் கவரில இருங்கோ" இதயன் கூற, குண்டு எம்மை விலகுவது தெரிந்து நிமிர்ந்தோம்.

கும்.... கும்.... படபடபட.....! குண்டு வெடித்தவுடன், முகாமிலிருந்து ஆமறியாக வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

"என்னடாப்பா அலேட்டாயிற்றானோ?" திகைக்கையில் அங்கு நின்ற மரத்தில் உம் என ஒரு ரவை மோதிவெடித்தது. வோக்கியை இயக்க "என்னடாப்பா பிரச்சினையே?" என தளபதி கேட்க "இல்லையண்ணை" என, இன்னுமோர் குரல் கேட்டது. அது திலீப் அண்ணாவாக இருக்கவேண்டும். மற்றைய சகடை நான்கு பார்சல்களை சுற்றிச் சுற்றி வீசியது. ஒன்று எமக்கு பின்புறமாக விழுந்தது. குண்டு போட்ட சகடை சென்ற முறை உருட்டிய இடத்திற்கு எதிர்ப்புறமாக எமக்கு முன்னால் வீச, "மச்சான் போட்டுட்டான், இந்த முறை எங்கடபக்கம்தான் எல்லாம், கவறுக்குப் போங்கோ" என நான் குரல்கொடுக்க எல்லோரும் கவறெடுத்தனர். ஸ்.... ஸ்.... என பெரும்சத்தமாக இறங்க, நன்றாகப் பதுங்கிக்கொள்ள கும்.... கும் என பயங்கரமாக அதிர்ந்தது. மண் சரிந்து விழுந்தது. நல்லவேளை இவ் பங்கர்கள் மூடு பதுங்கமைப்பு அற்றவை.

யாவரும் மண்ணைத் தட்டி வெளியே வந்தோம். நாம் வாழ்ந்து வந்த சிறுகுடில் இருந்த இடத்தைவிட்டு மறைந்திருந்தது. அருகில் ஒரு பெரிதான பள்ளம் மாத்திரம் இருந்தது. விமானங்கள் தூரச் சென்று மறைந்தன. பாக் எல்லாம் இடம் மாற்றினதால தப்பிட்டுதுகள். மாஸ்ரரின்ற வீடு புக்கை, என்றேன். ஈக் ஈக் என ஏதுவோ ஈனமான குரல் எழுப்புவது தெரிந்தது. என்ன சத்தம்?

எல்லோரும் சத்தத்தை நாடிச் செல்ல நான்கு நாட்களாக எம்மிடம் சோறு வாங்கி உண்டு கொஞ்சம் சதைப்பிடித்த



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

நாய்க்குட்டி பின்தொண்டையில் பெரிய காயத்துடன் ஒரு காலை எங்கோ தொலைத்து விட்டுக் கிடந்தது.

"மாஸ்ரர் நாயைப் பாருங்கோ" என அழகு கூற வாத்தியார் திட்டிவிட்டு "அது படுகிற பாட்டுக்கு நீ சொந்தம் கொண்டாட வெளிக்கிட்டிட்டாய். போடா, வேலையைப் பார்த்துக் கொண்டு!" என்றார். ஈ..... ஈ என அது மெதுவாக முனங்கி பரிதாபகரமாகப் பார்த்தது.

"சரி சரி, வாங்கோ, செல் எல்லாத்தையும் மேல் எடுங்கோ.."

நேரம் 6.05 காட்டியது. மேற்கு வானில் சூரியன் மெதுவாக சிவப்பாகத் தொடங்கினான். வானம் முகில்கள் எல்லாமே சிவப்புத் திட்டுகளாகப் படிந்துகிடந்தன. பாயப் போகும் குருதியாறை நினைத்து துக்கித்தனபோலும். பறவைகள் இரை தேடி முடிந்து கூடுகளை நாடி வேகமாகத் திரும்பின. பட பட என்ற சிறகடிப்பில் ஏக்கம் விழுதுவிட்டது. மிருகங்கள் சோகமாக அழுதன. அவற்றிடையே இந்த நாயின் ஓலம் மெதுவாய்ப் படர்ந்து பரவி இதய அணுக்களில் ஊடுருவி சக்தியின்றித் தேய்ந்து தேய்ந்து போயிற்று. ஈழத்தில் வாழ்தலுக்காக எதிரியளித்த தண்டனை போலும்.

திசை தப்பிய கொக்கு ஒன்று வேகமாகக் கடந்து போயிற்று. அது சாமியார் குளத்துக்கு சென்றிருக்க வேண்டும் என எண்ணிக்கொண்டேன். வெளவால்கள் சாரிசாரியாக உயரப் பறந்து போயின. மனம் திடுக்குற்றது. வயல் வெளியிலிருந்து கிளம்பிய இரு ஆட்காட்டிகள் சோகமாக சுற்றிச் சுற்றி கத்தியபின் எம்மைக் கடந்து முகாமைக் கடந்து எங்கோ தூரத்துக்குப் போயின. இணையைத் தேடுகிறது போலும் என எண்ணிக் கொண்டேன். சூரியன் முழுவதாக மரங்களிடையே மறைந்து பூமிக்குள் தாண்டுவிட்டது. மேகங்கள் வேகமாக ஓடின.

நேரம் 6.53.

"மச்சான் எல்லாம் செற்றப் பண்ணியாச்சோ? சரி இங்கால வந்து இருங்கோ. ரவுண்ஸ், ஆர். பி. ஜி செல்கள் எல்லாம் வரும். முன்னால நிற்கிறான். ஒரு கவரும் இல்லை; கவனம்."

பீரங்கி வாய் பொலிஸ் நிலையத்தைக் குறிபார்த்து நிமிர்கின்றது, ஏராளமான மரக் கொப்புகளுடன்.

நேரம் 6.56

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

"ஆரெடா அவன் வாறவன்...." எழுத முடியாத ஏச்சாகத் திட்ட, "நான்ராப்பா மாஸ்ரர்" என்று குரல் கொடுத்து, குறடு ஒன்றை வாங்கியபின் ஓடியது. நேரம் 6.58.

"றஞ்சன், எல்லாம் சரியே?" புறங்கையால் முகத்தை அழுத்தித் துடைத்துவிட்டேன். விசுவாசம் அருகில் நின்றான். வோக்கி இயக்கப்பட்டு சிவப்புநிறம் ஒளிர்ந்தது.

7.00

"குடு மச்சான்" தளபதி உத்தரவு பிறக்க கும் கும் என பல உந்து சப்தங்கள் எழ, இராணுவத் துப்பாக்கி இயங்குமுன் கும்ம்....என பல சத்தத்துடன் முகாம் அதிரத்தொடங்கியது. முகாம் அல்ல. பூமியே!

முகாமிலிருந்து பலத்த சத்தம், உயிரை இழக்க முன்னான எதிரியின் அபயக்குரல்! அவர்களின் ரவைகள் கண்மூடித்தனமாக பாய ஆரம்பித்தன. மிக அருகாக நின்ற எமக்கு கடும் எதிர்ப்புக் கிடைத்தது. மரங்களிலும் கொப்புகளிலும் பட்டுப்பட்டு ரவைகள் வெடித்தன. சக்திவாய்ந்த ஆமட்டியஸ் ரக ரவைகள், ஏ.கே, எல். எம். ஜி களும், 303 எல். எம். ஜி களும் முழக்கமிட்டன. கால்களுக்கு இடையாக ரவைகள் வேகமாகப் போயின. ஆயினும் ஜீவமரணப் போராட்டத்தில் மிகத்துரிதமாக அடுத்தடுத்த பாரிய குண்டுகளை அனுப்ப எதிரி திசை தப்பித் தாக்கினான். மரங்களின் மேலாக ஆகாயத்தை நோக்கியெல்லாம் வேட்டுக்கள் தீர்ந்தன.

"அந்தா, அந்தா! கடைப் பொயின்ரில 30 வைச்சு அடிக்கிறான் போல கிடக்கு!"

கடையிலிருந்து ரவைத்தொடர்கள் வேறு திக்கால் பாய்வது தெரிந்தது. தொடர்த் தாக்குதலினால் கடை எரிய ஆரம்பிக்க அங்கிருந்து ரவைகளும், செல்களும் கிரனைட்டுகளும் எரிந்து வெடிப்பது இடையே கேட்டது.

ஒவ்வொர் விநாடியும் வோக்கியில் தாக்குதல் இடங்களும் முறைகளும் அறிவிக்கப்பட அதற்கு ஏற்றதுபோல் தொடர்ந்து தாக்கினோம். படிப்படியாக எமது தரப்பில் போராளிகள் காயமடைந்து குறைய ஆரம்பித்தார்கள்.

ரவைகள் அவர்களது உடலை கிழித்திருந்தது.

அவர்களை அனுப்பியபின் எஞ்சிய சிலரும் சரியான

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

முறையில் தாக்கினோம். பட..... பட..... பட..... மேலிருந்து திடீரென ரவைகள் தரைக்குப் பாய்ந்து மரக்கொப்புகளில் பட்டு வெடிப்பதின் பின்னர்தான் இரண்டு கெலியையும் கண்டோம். எமது இலக்கை அறிந்து அடிக்க ஆரம்பித்தான். இடையிடையே 5 அங்குல செல்களை வீசியபடி துப்பாக்கிப் பிரயோகம் செய்ய, எம்மை நோக்கிய எதிரியும் ஆர். பி. ஜீ. எறிகணைகளையும், செல்களையும், ஏராளமான துப்பாக்கிகளையும் இயக்க, இனித்திருப்பிக் கொடுத்தால்தான் அடங்குவான்கள் என முடிவெடுத்து கொலை வலையத்தையும் பாராது துரிதமாக இயங்கி மூன்று கோணத்தில் ஒரே நேரத்தில் ஒரு இலக்கிற்குத்தாக்க அந்த இலக்கு பொலிஸ்நிலைய பின்புறம் இடிந்து இறங்கியது.

இந்தவகையான முறையை நாம் கையாளாது விட்டிருப்பின் மாபெரும் இழப்புக்களைச் சந்தித்திருப்போம். பொம் பொம் என இரண்டு பயங்கரச் சத்தம்! காது செவிப்பறை கிழிந்துவிட்டதாக எண்ணினேன். சிலநிமிடம் கிண் என்று இசைக்க காலின் ஓரத்தால் குருதி இலேசாகச் சிந்தியது. அழுத்திப் பார்த்தேன். ஓரளவு சிறிய காயம்தான். சத்தத்தின் காரணத்தைப் பின்னரே உணர்ந்தேன். சியாமாசிட்டி பொம்பர்களில் ஒன்றின் வேலை அது.

துரிதமாக நாம் தாக்குதலை தொடுத்தபடி இருக்கையில் மறுபடியும் பொம்பர் சாய்ந்தது. கும் கும் என எமது 50 கலிபர்கள் குறிபார்த்து முழங்க வந்தவேகத்தில் உள்ளே திருப்பிய வண்ணம் மேல் உயர்ந்தது. கும் .... கும் என பெரிய சத்தமும் பலர் முனகுவது போன்ற ஒலியும் எமது நிலைக்கு அருகாக 75 மீற்றர் தொலைவில் கேட்டது. சேரன்ர பொயின்ரிலதான் ஏதோ பிரச்சனை. மற்றவர்களைத் தொடர்ந்து தாக்கும்படி பணித்து அங்கு ஓடிச்சென்றேன். அங்கு குருதி வெள்ளத்தில் நான்கு இளம்போராளிகள் மிதந்தார்கள். அடுத்த பொயின்ரிலிருந்து மாஸ்ரரும் வர,

"கெதியா பொடியள இங்கால எடுங்கோ. அதே ரேஞ்சில திருப்பவும் அடிப்பான்."

தனியனாக இருவர் இருவராக தோள்களில் சுமந்தபடி விரைவாக பின் நகர்ந்தோம். சொற்பத்தில் மீண்டும் கும்... கும் அதிர்ந்தது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

"என்ன மாஸ்ரர், ஏதாவது பிரச்சனையே?"

"இல்லையில்லை! கையிலை உரஞ்சிப் போட்டுது. கெதியா நட."

வோக்கியில் அறிவித்து நால்வரையும் மருத்துவ அணியிடம் ஒப்படைத்தோம். இளம் மருத்துவப் போராளிகள் வேகமாக முதலுதவிகள் செய்ய ஒரு போராளி வயிற்றில் காயமடைந்தவன், எனது கையில் சாய்ந்தபடி உயிர்விட்டான். அந்தமுகம் தெரியாத சகோதரன், விடியலைத் தேடி வீறுகொண்ட வேங்கை, என் கரங்களில் களப்பலியாகிவிட்டான். எனது கரங்களை இறுக்கி மிக இறுக்கி மனஉறுதி அனைத்தையும் தன்கரத்திற் கொணர்ந்து ஆக்கிரமிப்பாளனை நெருப்பாய் இறுக்கிப் பிடிப்பதுபோல மெதுவாக மிக மெதுவாக அவனது குரல், "டேய் பூருங்கோடா, கொல்லுங்கோடா, முழு ஆம்சும் எடுக்கவேணும்!" என ஒலித்தபடி அந்த தென்றலில் பரவி என்னையும் மனதையும் ஊடுருவிக்கடந்து அப்பால் மெதுவாக காற்றோடு கலந்தது.

கரங்கள் மெதுவாகத் தளர்ந்தன. பெரிய வெள்ளி ஒன்று கீறுபோட்டு கீழ்நோக்கி விழுந்தது. அந்நிய கூக்குரல்களிடையே 'டேய் பூருங்கோடா' .... மெதுவாக காதுகளில் இரைமீண்டது தாமதிக்க நேரமின்றி வேகமாக களத்திற்குச் சென்றோம். செல்லும் வழியில் செல்களும், எரிகுண்டுகளும் விழுந்து காடுகள் பற்றைகள் எரிந்து கொண்டிருந்தன. அதே வெளிச்சத்தில் மீண்டும் மீண்டும் செல்களும் பொம்பர்களும். விரைவாக இருவரும் பிரிந்து அவரவர் இலக்குகளிற்கு சென்றோம். இரவு நேரம் 10.15 ஆனது.

சுருக்கமாக அவர்களுக்கு நடந்ததைக் கூறிவிட்டு பீரங்கியைத் தயார்ப்படுத்திய பின் இராணுவம் செல் ஏவும் இலக்கைக் கண்காணித்தேன். பும், பும்! இரு செல்கள் எம்மைக் கடந்து போய் வீழ்ந்து முழங்கின. 'இங்கை விடு!' சரியானமுறையில் இலக்கை குறிபார்த்தபின் தளபதியின் கட்டளைகளுடன் குறிபார்த்துச் சுட அதிர்ந்தது.

"மச்சான் தப்பிவிட்டது. அவன் பங்கருக்குள்ளால வாறதுக்கிடையில் அடுத்தது குடுப்பம்!" தயாரிப்புக்களுடன் குறி தப்பாமல் எதிரியின் மோட்டாரை தாக்க நெல் சந்தைப்படுத்தும் சபையின் ஒரு கட்டடம் ஓடுகள் சிதறிப்பறந்து வீழ்வது தெரிந்தது. இடையிடையே வெளிச்சக் குண்டுகளையும் ஏவி இலக்குகளை இனம்கண்டு கொண்டோம்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அடுத்த ஆர்.பி.ஜி செல் மரத்தில் அதிர டாவின் தொடைப்புறமாக குருதி கொட்ட ஆரம்பித்தது.

ஜீன்சின் சைற் பைக்குள்ளிருந்த "பீல்ட் கொம்பிரஸ்" பஞ்சை வைத்து அழுத்திக் கட்டினேன். அப்பிடியும் கேளாது இரத்தம் சிறிது சிறிதாய்க் கசிந்தது.

"பிரச்சினையில்லை. மச்சான், அடுத்ததை செற்றப் பண்ணுவம்" என்றான்.

"உனக்கென்ன விசரே. பீசும் உள்ளுக்க கிடக்கு. இரத்தம் பாயிற பாய்ச்சலுக்கு நிற்கப்போறியோ?" என கோபப்படவும் விடாப்பிடியாக நின்றான்.

அந்நிய போர் வெறியர்கள் கூலிக்கு மாரடிப்பவர்கள். சண்டையின் போது மிரட்டலுக்கு அஞ்சி களத்தில் எங்காவது பதுங்கி நின்று கண்டபடி துப்பாக்கி சண்டை செய்வார்கள். சிறு காயம் ஏற்பட்டால் உடனடியாக காரணம் காட்டி பின்வாங்கி விடுவார்கள். எமது போராளிகள் வேறுபட்டவர்கள். உடலையும், உயிரையும் பணயம் வைத்துப் போர்க்களத்தில் சமராடுபவர்கள். உடலையும், உயிரையும் விட சுதந்திரப் பூமியை மேலானதாக நேசிக்கும் இலட்சியவாதிகள். களத்தில் புயலாகப் பாயும் இவர்கள் ஒருபோதும் புறமுதுகு இடுவதில்லை. களப்புண் ஏற்படினும் களத்தைவிட்டுப் போகமாட்டார்கள். அவர்கள் போவதெனின் உயிரற்றோராகவோ அல்லது உடலில் இயக்கமற்ற தன்மையைப் பெறும் போதோதான் பிறரால் களத்தைவிட்டு அகற்றப்படு கின்றார்கள். இது எம் போராளிகளுக்குரிய தனித்துவ இயல்பாகும். இதுவே தம்மை அழிக்க முடியாதென இறுமாந்திருக்கும் ஆக்கிரமிப்பாளர்களையும் வெற்றிகொள்ள வழிவகுக்கிறது.

தொடர்ந்து எதிரிமீது இடைவிடாத தாக்குதலை மேற்கொண்டோம். முகாமின் தொலைத்தொடர்பிற்கும் ஆகாய ஊர்திகளிற்கும் தொடர்புகள் சரிவர இல்லாதபடியால் ஒருமுறை கெலி ஒன்று முகாமினுள்ளும் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டது. தொடர்ச்சியாக ஒரே இடத்தில் நகர்வைக் காட்டாமல் நாம் இருந்தமையால் முகாமினின்றும் வான்வெளியினின்றும் கடும் எதிர்ப்புக்களை அடைய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. தொடர் இயந்திரத் துப்பாக்கி வேட்டுக்களும், ஆர்.பி.ஜி ஏறிகணைகள், செல்களும் விதைக்கப்பட ஆரம்பித்தன.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

விமானம் ஒன்று எமது இலக்கை வட்டமிட, தயாரான நாம் உடனே காப்பு எடுக்கவும், பெரும் சத்தத்துடன் சுமார் 50 மீற்றர் அப்பால் நின்ற பாலைமரம் ஓர் அதிர்வின் பின் சின்னா பின்னமாகி விழுந்தது. உண்மையில் அந்த வைர விறகுக் கட்டைகள் எம்மைத் தாக்கி கால்களில் பெரும் உராய்வுக் காயங்களை ஏற்படுத்தின. அயராத எமது தாக்குதல் வங்கி கட்டட குறிபார்ப்புடன் நிறைவடைந்தது.

நேரம் 11.35 அடுத்து 12.00 மணியளவில் எமது தாக்குதல் அணிகள் முகாமினுள் நுழைய தயாராக இருந்தமையால் வேகமாக பீரங்கியை அகற்ற வேண்டிய தேவை ஏற்பட்டது. ஏனைய பீரங்கிகள் இன்னமும் முழங்கியபடி இருந்தன. எமது இலக்கிலிருந்து தரைத்தாக்குதல் குறைவடையினும் விமானத் தாக்குதல் மென்மேலும் மோசமாக ஏற்பட்டது. உலங்கு வானூர்தி ஒன்று எமக்கு மிகமிக அருகாக ரவைகளைப் பாய்ச்சத் தொடங்கியது.

கொலை வலயத்துள் இருக்கும் எமது பீரங்கியை வெளிக்கொணர்வதற்காக ஏனைய பீரங்கிகள் மூலம் திசை திருப்பல் தாக்குதலை மேற்கொண்டு ஒருவாறு வெளிக் கொணர்ந்தோம். பீரங்கியை பாதுகாப்பாக அனுப்பியபின் மீண்டும் களத்திற்கு விரைந்தேன்.

11.59 பீரங்கி வேட்டுக்கள் யாவும் இறுதியாக சந்தித்து அடங்க யாவும் ஒருமுறை முகாமை உலுப்பி அடங்கின.

12.00 மணி 1990.11.23 இருளினூடாக உறுதியான துப்பாக்கிக் கரங்கள் ஊரத்தொடங்கின. நடுநிசி அமைதியாக அவர்களிற்கு விடைகொடுத்தது. வானில் ஊர்திகள் மட்டும் இருளைக் கிழித்தன.

தழுவி விடும் புற்கள் யாவும் தளிரிலைகளால் தடவி அனுப்பின. தொட்டாச் சுருங்கிகள் குத்தியிழுக்காமல் குழிந்து தலை சாய்த்தன. நிலவு அறவே எழவில்லை, எங்கே எங்களைக் கண்டுவிடுவார்களோ என்று. மேகங்கள் விண்மீன்களை மறைத்து இருளைக் கடுமையாக்க வரம்புகள் தாண்டி நெல்வயலினூடாக எமது போராளிகள் ஊர்ந்தார்கள். பீரங்கிக் குண்டுகளால் சிதைந்த எதிரிகள் திகைத்து நிற்க சொந்த மண்ணை ஆக்கிரமித்த கொடியவனை ஒழித்து தேசம் மீட்கவென இவர்கள் ஊர்ந்தார்கள். ரெயில் தண்டவாளத்தையும், வரம்புகளையும் கடந்து கடந்து முன் சென்றார்கள்.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

சட சட சட...... எதிரியின் ஏ.கே.எல்.எம்.ஜி தான் முதலில் கனன்று நேரடிச் சண்டையை மூட்டிவிட்டது. மறுகணம் ஒன்றாய் பத்தாய் நூறாய் முகாமினின்று தீக்கனல்கள் பொறிகக்க போராளிகள், காலத்தைச் செதுக்கும் சிற்பிகள் எந்தக் காப்பும் அற்ற வெளியின் ஊடாக முன்னேறினார்கள். இப்போ அவர்கள் கைகளிலுள்ள துப்பாக்கிகள் எதிரிக்கு பாடம் கற்பிக்க ஆரம்பித்தன. எதிரியின் எறிகணைகள் வெட்டவெளிப் பிரதேசத்தில் மழைத்துளிகளாக விழத்தொடங்கின. வான ஊர்திகள் வயல்களைக் களமாக்கி இரை தேடத் தாவின.

உலங்கு வானூர்திகள் 50 கலிபருக்கு ஓய்வு கொடுக்காது தீயைக் கக்கின. தரையினின்று எழும் வேட்டுக்கள் அவற்றை முகில் வரை துரத்திச் சென்றன. குன்றாத வீரத்திலக குன்று மணிகள் குருதிக் கடலில் மிதக்கத்தொடங்கினர். அவனைக் கடந்து கடந்து புலிவீரர் பாய்ந்து போய் பொருதினர். எதிரியின் காப்பரண்கள் ஆர்.பி.ஜி எறிகணைகளால் சிதறி விழ கூலிகள் விட்டு ஓடத்தொடங்கினர்.

வோக்கியை இயக்கி வைத்துக்கொண்டேன். தளபதியின் கட்டளைகள் இடையறாது பறந்துவந்தன.

ஜெகன் அண்ணாவையும் வதனன் அண்ணாவையும் இடையறாது கூப்பிடுவதும், ஏனைய அணிகளிற்கு கட்டளைகள் பிறப்பித்தபடியுமாக இருக்க, சிறிது நேரத்தில் ஜெகனது பக்கமாக திலீப் அண்ணாவினதும், கோபுவினதும் பெயர்கள் பலமுறை கூப்பிடப்பட்டு தொடர்பு அறுந்து கிடந்தது. கன்னியாஸ்திரி மடத்தைக் கைப்பற்ற முன்னேறிய இவர்களினது நிலை பிரச்சினைக்குரியதாக இருக்க வேண்டும் என எண்ணிக் கொண்டேன். ஏனெனில் ஒரு இலக்கு நோக்கிச் சென்ற நான்கு அணித்தலைவர்களினது தொடர்பும் அற்றுப்போவது வழமைக் குரியதன்று.

ஆயினும் சிறிது நேரத்தின் பின் வேறு ஒரு குரல், தாம் மடப்புறமாக சில காவலரண்களைக் கைப்பற்றியதாகவும் தான், ஒன்றினுள் நுழைந்துள்ளேன் எனவும் தெரியப்படுத்த, தளபதி உற்சாகமூட்டி மேலதிகமாக அனுப்புவதாகக் கூறினார். கோயிற்புறமாக சண்டை நடைபெறுவதும், போராளிகள் இலக்கை அண்மித்தமையும் அறிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது. பொலிஸ் நிலையப் புறமாக உள்ளிறங்கிய அணியினர் காயமடைந்து வர ஆரம்பித்ததுடன் நானும் ரெயில் ரக் ஊடாக

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

பின்புறமாகச் சென்றேன். ரவைகள் சீறிப் பாய்ந்தன. ஆ ஆ என மூச்சு இழுபடும் சத்தம் அண்மையாகக் கேட்க விரைந்து சென்றேன். ஒரு போராளி வயிற்றில் குண்டைத் தாங்கி அசையமுடியாது முடங்கிக் கிடந்தான். தோளினூடாக கையைத் தூக்கி மெதுவாகத் தாங்கி அழைத்து வந்தேன். ரவைகள் தண்டவாளத்தில் வரிசையாகப் பட்டுச்செல்வது தெரிந்தது.

கைகளை நுழைத்து குப்பியைத் தடவ கையை இறுகப் பிடித்துக்கொண்டான். ஈனமான குரலில் "நான் அவ்வளவு கெதியா சாகமாட்டன். உவங்களை துரத்தாமல் நான் சாகமாட்டன். இன்றைக்குப் போனா நாளைக்கு வருவான்" கறுவிக் கொண்டு பற்களை நறுமிக் கொண்டான். உடற் புண்ணுக்காக வருந்தி அழுபவனாகத் தெரியவில்லை. அவன் சிந்தை முற்றாகக் களத்தில் நின்றது.

இன்னமும் கரங்களை இறுகப் பற்றியபடி "அண்ணை சேப்ரியிலை விடுங்கோ" என்ற வார்த்தையுடன் மெதுவாக மயங்கிச் சாய்ந்தான். ரைபிளின் சேஞ்லிவரை மாற்றி அதை வேறு ஒருவனிடம் அவசரமாக ஒப்படைத்தபின் மீண்டும் வேகமாக உட் சென்றேன். ரவைகள் ஏராளமாக நெருக்கியபடி செல்ல, பதுங்கியபடி தாவி ஓடினேன், எமது அணிகளின் துப்பாக்கி கனல்களை நோக்கி.

"மச்சான் கொண்டு போறதுக்கு ஆக்களில்லை. கெதியா கொண்டுபோ." ஒரு போராளி திரும்பிச் சொல்ல எனது ரைபிளை மீண்டும் தோளில் மாட்டி இராணுவம் நிலையிருந்த வீட்டின் புறமாக பதுங்கிச் சென்றேன். இரு போராளிகள் ஏராளமாக இரத்தத்தை போக்கியபடி இருக்க, கட்டுவதற்கு எதுவுமற்ற அவலமான நிலை. அருகே ரவைகளும் செல்களும் கூவுகையில் எப்படித் தேடுவது? பேசாமல் எனது வரிப்புலி சீருடையைக் கழற்றி இரண்டாக துப்பாக்கிக் கத்தியால் மாற்றி, சுவாச வேகம் குறைந்து மெதுவாக இழுத்தவனின் வயிற்றில் கட்டியபின் மற்றையவனது தொடையில் பெரிய மாங்காயளவு துவாரத்தை மூடிக் கட்டினேன்.

இரு தோள்களிலும் இரு போராளிகளைச் சுமந்தபடி வேகமாக மறைவுகளுக்குத் தாவிய வண்ணம் பின்வாங்கினேன். "டேய் டேய் அடியடா ஆ.... ஆ பூரடா" என விக்கலோடு வயிற்றில் காயப்பட்டவன் முனங்கியபடி இருந்தான். ரைபிளை எத்தனை முயன்றும் விடாமல் சிலிங்கில் கையை நுழைத்து மடக்கி

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

வைத்திருந்தான். விக்கல்கள் மெதுவாக மெதுவாக அணையத் தொடங்கின. எனக்கு எதிராக இன்னுமோர் உருவம் பதுங்கி வருவது தெரிந்தது.

"இரண்டுபேரையும் தூக்கிறது கஸ்டமாக இருந்தா, ஓராளை என்னட்டத் தாங்கோ."

"ஆர், மாஸ்ரரே? நான் கொண்டுபோறன். நீங்கள் முன்னுக்குப் போய் கொண்டுவாங்கோ."

"ஆர், வியோவே? சரி, நீ அந்த மரத்தடி பங்கரில மெடிக்ஸ்காரரிட்ட கொண்டுபோ, நான் தூக்கிக் கொண்டு வாறன்" வேகமாக ஓடுவது தெரிந்தது.

இருவரையும் மருத்துவச் சிகிச்சைக்கு அளித்துவிட்டு மீளத் திரும்புகையில் பல மருத்துவவீரர்கள் வந்து நின்றார்கள். 'இனிப் பிரச்சினையில்லை காயப்பட்டா உடனை கொண்டு வருவது' என முன்னே ஓடிய போராளி கூறிச் செல்ல, ஏனையோர் பின் தொடர்ந்தனர். நான் மரஅடியில் மாஸ்ரரை காத்து நின்றேன். சண்டை, உக்கிரமாக நடைபெற்றுக்கொண்டிருந்தது.

இராணுவ எதிர்ப்புகள் செயல் இழப்பதையும், எமது அணிகள் காவலரண்களில் நுழைவதையும், வோக்கி மூலம் கேட்கக் கூடியதாக இருந்தது.

"மாஸ்ரர் வாங்கோ றோட்டுக்கரை பொயின்ருக்கு போனா ஸ்ரான்பை குறூப்புடன் உள்ளே இறங்கலாம். இல்லாட்டி சப்ளைக்காவது போகலாம்." என்று இருவரும் ஆர்வமாக விரைந்தோம். செல்கள் இரைச்சலுடன் அருகருகாக வீழ்ந்து வெடித்துச் சிதறியது.

"இன்றைக்கு எப்படியும் அரைவாசிக்கு மேல் பிடிக்கலாம். பிடிச்ச இடத்தை பொம்பர் அடியில் இருந்து காப்பாற்றுகிற தென்றால் வலு கஷ்டம்" மாஸ்ரர் கூறியபடி விரைந்து வந்தார்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# 7

விடிய 4.00 மணியளவில் முகாமின் சுற்றுப்புறப்பகுதிகளை மிகக் கடுமையான சண்டையின் பின் கைப்பற்றிய எமது போராளிகள் மிகக் களைப்புற்று நீர்த் தாகத்தினால் தவிக்கும் சந்தர்ப்பத்தில், இன்னமும் சொற்பநேரத்தில் பொழுது புலரத் தொடங்கியவுடன் நடைபெறப்போகும் உக்கிர விமானத் தாக்குதலுக்கு ஈடுகொடுத்து மறுநாளைய தாக்குதலுக்கான எதிரியின் மிகப் பெரிய காப்பரண்களை எமதாக்கிக் கொள்ளும் முயற்சியில் அவசரமாக சிறு பதுங்கு குழிகளை அமைக்கும் வேலைகளையும் மண்மூடைகள் கட்டும் வேலையையும் மும்முரமாக செய்துகொண்டிருந்தார்கள். இதில் கூட இவர்கள் தயக்கத்துடனோ தன்னிச்சையாகவோ செயற்படவில்லை. எதிரியின் இயந்திரத்துப்பாக்கிகளும் எறிகணைகளும் இயன்றளவு கட்டுப்படுத்த முயன்றுகொண்டே நின்றன.

இப்படியான சூழ்நிலையை தமிழீழ மக்கள் ஒருகணம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். மக்களை நாம் பதுங்குகுழி அமைத்தலுக்கு அழைக்கையில் கூட பல பெற்றோர்கள் தமது பிள்ளைகளை அனுப்புவதில்லை. ஒரு சண்டை இடம்பெற்றதாயின் சில நிமிடங்களில் பத்திரிகைகளை இரை மீட்டபின், ஏதாவது விமர்சனங்களை தெரிவித்தபின், தமது சுயநல வாழ்க்கைக்குள்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அமிழ்ந்து விடுகின்றார்கள். களத்தில் தமது பிள்ளைகளை ஒத்த இளைஞர், யுவதிகள் உண்ண உணவின்றி குடிக்க நீரும் தானின்றி உறுதியைத் தளரவிடாது போராடும் ஒரு உன்னதப் போராட்டத்தை இவர்கள் உணர்வுரீதியாகப் பார்க்கத் தவறுகின்றார்கள். வெறும் ஆயுதங்கள் மோதிக் கொள்வதாக எண்ணிக்கொள்கின்றனர். களத்தில் போராளிகளது உள்ளங்களும் போராடுகின்றதென்பதை அவர்கள் ஜீரணிப்பதில்லை. இது போராளிகளான எங்களுக்கு மிகுந்த துக்கத்தையும் அடக்கமுடியாத வேதனையையும், ஏன் சிறிது தளர்ச்சியையும் கூடத் தருகின்றது என்பது உண்மை.

மாங்குள சண்டை எனக்கூறின், உண்மையில் சகல போராளிகளும் குறைந்தது சண்டைக்கு இருநாட்கள் முற்றாக தயார்ப்படுத்தலை செய்வதனால் மிக சோர்வடைந்துபோவர். ஏனெனில் இரவில்தான் அதிக வேலைகளை முகாம் அருகே செய்யவேண்டிய அவசியம் உண்டு. உதாரணமாக எதிரி எம்மைக் கண்டுகொள்ளாத வகையில் புதிய இயந்திரத் துப்பாக்கி அரண்களை அமைக்கும் அவசியம் இருக்கும். இரவில் இதற்கு உரிய மண்மூடைகளை, சிலிப்பர்கட்டைகளை நிலத்தில் ஊர்ந்தபடி அல்லது முழங்காலில் நடந்தபடியே சுமக்க நேரிடும். இது எழுத்தில் எழுதுவதைப் போன்றதல்ல. மறுதினம் இடுப்பை நிமிர்த்தி நடக்கவே முடியாது. எனினும் மறுதினம் இதே வேலைகளைச் செய்கிறோம். பகலில் எதிரி இலக்குகளைத்தேடிப் பார்ப்பதனால் நித்திரையை இழந்து கண்கள் சிவந்து எரிவைக் கடுமையாகத் தரும். இரவில் நித்திரை விழிப்பில் பசியின் கொடூரம் மக்களுக்குத் தெரியாததல்ல. கொட்டும் பனியில் உடல் முற்றாகத் தோய்ந்திருக்க நாவறண்டு, தொண்டைபாளமாகப் பிளக்கும். உதடுகள் கடும் வேதனையைத் தரும். இவ்வாறு இருந்த களைப்புடன் பெரும் சண்டையை நடாத்திவிட்டு நீராகாரமின்றி விடிவதற்குள் காப்பரண்கள் அமைப்பது இலகுவான காரியமல்ல.

உண்மையில் போராளிகள் இதன்மூலம் மனதை மேன்மேலும் உறுதியாக்கிக் கொள்கின்றனர். அவ் உறுதி ஒரு தேசாபிமானமற்ற பொதுமகனைச் சந்திக்கும்வரை குலைவதில்லை. எதிர்மாறாக தேசாபிமானிகளைச் சந்திக்க அது மேன்மேலும் எஃகாகத் திரண்டு விடுதலைத் தீயை கொழுந்துவிடச் செய்யும்.

அதிகாலை 5.00 மணியில் ஓரளவு வெளிச்சம் படர இரு சியாமாசிட்டிகளும், இரு உலங்குவானூர்திகளும் இருளைக் கிழித்த

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

வண்ணம் முகாமைச் சுற்றத் தொடங்கின. ஒருமணி நேரத்துள் போராளிகள் மிக முயன்றுகூட நிலத்தின் கீழ் பதுங்கு குழிகளை அமைத்தலில் வெற்றி பெறமுடியவில்லை. பெரும் மழை பெய்த காரணத்தால் நீர், வெட்ட வெட்ட ஊறத் தொடங்கியது. மண்மூடைகளில் நீர், கசியத்தொடங்கியது. இந்நிலையில் விமானக்குண்டு வீச்சுக்களையும் உலங்குவானூர்தியின் உதவியையும் கொண்டு படைகள் மீண்டும் தரைமார்க்கமாக தாக்குதல்களை ஆரம்பித்தன.

விமானங்கள் கன்னியாஸ்திரி மடத்தையும் கோயிலையும் மூர்க்கமாகத் தாக்கின. கடும் விமானத் தாக்குதல்களால் எம்மால் ஈடுகொடுத்தல் மிகக் கடினமாக இருந்தது. தரையிலிருந்து இராணுவம் பெரும் சண்டையைத் தொடக்க சில பகுதிகளை விடுத்து நாம் வெளியேற வேண்டியதாயிற்று. இதில் கோயில்ப்புறப் பகுதிகளும் அடங்கும்.

எதிரி எம்மிடம் இருந்து கைப்பற்றிய காவலரண்களை துரிதமாகச் சீர்படுத்த ஆரம்பித்தான். எதிரியின் இந்த புனரமைப்பு வேலைகள் பெரும் அபாயத்தின் அறிகுறியாகத் தென்பட்டது. எதிரி புனரமைத்து மீண்டும் பலமடையும் வேளையில் நாம் மீண்டும் அதைக் கைப்பற்ற பெரிய உயிர் விலைகளைக் கொடுக்க வேண்டி வரும் என்பதை உணரத்தலைப்பட்டோம். உளவியல் ரீதியாக எதிரி ஸ்திரமான நிலையை அடைவதை நாம் விரும்பவில்லை. அதனால் மிகப்பெரிய பெரும் ஆபத்திற்கூடான ஒரு துணிகர அதிரடியை எதிரி மீது வெட்டவெளியூடு பாய்ந்து, தாக்க ஆரம்பித்தோம்.

ஒருகணம் எதிர்பாராத தாக்குதலினால் நிலைகுலைந்த எதிரிகள், தமது இறுதிக்கட்டம் தீர்மானிக்கப்படுவதை உணர்ந்தனராய் எதிர்ச்சண்டையை காப்பரண்களிலிருந்து வெட்டவெளியூடாக பட்டப்பகலில் பாயும் எங்களில் நடாத்தத் தொடங்கினான். குண்டு வீச்சு விமானங்கள் சரமாரியாக வெளிகளில் குண்டுகளை வீசியது.

ஈழத்தின் பெரும் பொருளாதாரவளம் நிறைந்த மாங்குள விவசாயப் பூமியில், பசுமையாக திகழவேண்டிய வயல்களில் எமது போராளிகள், செங்குருதியைப் பாய்ச்சி சாயத்தொடங்கினார்கள். இறுதி நொடியிலும் ஈழ மண்ணுக்கு வளமாகிப் போனார்கள், சுதந்திரக் காற்றைச் சுவாசித்து சுயமான சுவடுகளைத் தமது தாயக மண்ணில் பதிக்கத் துடித்த இளம் மறவர்கள்.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

வயல்காற்றுடன் கலந்து போனார்கள். ஒரு பாசறையில் பிறந்து ஒன்றாய் கூடிச் சிரித்து மகிழ்ந்த இளம் போராளிகள். உயிர்த்தோழன் சாய, உடனிருந்த மற்றையவன் இவனது உறுதியையும் பெற்றபடி வேகமாக எதிரியில் பாய்ந்தான். மடியும் வேளைதானும் மடி கிடைக்காது ஈழமண்ணில் புரண்டு தொட்டாச்சுருங்கிகளின் மேல் உயிர் விடும் சுதந்திர புருடர்கள். இளமையின் இன்பங்களை சுதந்திரத்திற்காக தொலைத்த பீஷ்மர்கள் இவர்கள்.

எதிரி இழப்புக்களைத் தாங்கமாட்டாது ஒவ்வொரு காவலரணாக இழந்து ஓடத்தலைப்பட்டான். இழந்தவற்றை ஒவ்வொன்றாக மீட்டெடுத்தோம். இனிய மாலையில் 4.00 மணியளவில், கோயில்புறத்து மின்சாரப்பாதைக் காவலரண்கள் முற்றாக எம்வசம் வீழ்ந்தன. ஓய்வு அற்ற போராளிகள் உறுதியுடன் இதமான காற்றை உணவாக்கத் தொடங்கினர். எதிரிகள் இப்போது பிரதான முகாமில் அடங்கிப்போயிருந்தனர். எதிரி தடுமாறத் தொடங்கியமை தெளிவாகப் புரிந்தது. இந்த வேளைகளில் தான் நாம் எமது மக்களிடம் உலர் உணவுகளைக் கேட்கின்றோம். ஏனெனில் இரவில் கைப்பற்றும் காவலரணிற்குச் செல்வதென்றால் மறுநாட் காலைதான் செல்லமுடியும். இந்தச் சூழ்நிலையில் போராளிகள் உண்பதற்கே மக்களிடம் சேகரிக்கின்றோம். இதை மக்கள் எங்களது பொடியளுக்கு என்ற உணர்வோடு செய்து தரும் பட்சத்தில் சத்தியமாக அவை எமக்கு அமுதமாக இருக்கின்றன; எமக்கு புதிய உத்வேகத்தை அள்ளித் தருகின்றன. உண்மையில் நாம் முட்டைமாவையோ எள்ளுப் பொரிகளையோ உண்ணும் போது முகம் மலர்ந்த தாய்களை, போராட்ட காலத்தில் சந்தித்த தாய்களை, நாம் கண்முன்னே காண்கின்றோம். இது பெரும் ஆத்ம திருப்தியைத் தரும்.

23 ஆம் திகதி மாலைப்பொழுது ஏக்கமாகச் சரியத்தொடங்கியது. இன்னும் வேள்விகள் நடைபெறுகின்றன. சூரியன் சிவப்பாகக் கொப்பளித்தான். இனிமையான, பறவைகள் ஒலிகளைக் கேட்க முடியவில்லை. இன்று அவை எங்கோ ஒதுங்கியிருப்பினும் நாளை அவை பூபாளத்தை அமைதிப் பொழுதில் மீட்டும். அது புனித ஆன்மாக்களின் சமாதிகளைத் தழுவிச் செல்வது நிச்சயம். இன்று அது மேலை வானத்தில் தூரத்தே தெரியும் காடுகளின் உச்சிகளைக் கடந்து உள்ளே புகுந்து மறைந்து கொண்டது. இருட்போர்வை வலையாக விரிந்துகிடந்தது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

நேற்றைய சண்டையைவிட குறைவான பீரங்கிகளுடன் தாக்குதலைத் தொடங்குவதற்காக கனகராஜன் குளத்திலிருந்து மாலை 6.00 மணிக்குப் புறப்பட்டோம். சந்தியில் திரண்டு நின்ற மக்கள் எம்மை வழிமறித்து உணவுப்பொருட்களை, சிற்றுண்டிகளைத் தந்து வாழ்த்தி அனுப்பினர். எமது வாகனம் ஊரத்தொடங்க, பின்னால் இருந்தவன் சத்தமிட நிறுத்திப் பார்த்தோம். வெண்துகிலுடன் ஏறத்தாழ 75 வயது வந்த மூதாட்டி குடுகுடு வென வேகமாய் வந்தாள். கையில் உரப்பையில் செய்யப்பட்ட ஒரு பையுடன். இறங்கி மூதாட்டியிடம் ஓடினோம்.

"என்ன ஆச்சி ஓடிவாறியள்?"

"நடந்துதான் வந்தனான். நீங்கள் வெளிக்கிட்டியள், எல்லாரும் இங்க கிட்ட வாருங்கோ."

பையுள் ஒரு பூவரசமிலையில் சுற்றியிருந்த திருநீற்றைப் பூசிவிட்டு, கன்னத்தில் முத்தமொன்றை பொக்கைவாயினால் வைத்து அணைத்தாள். சண்டையின்போது ஏற்பட்ட களைப்புகள், உடல்நலக்குறைவு, சக போராளிகளை இழந்த சோகம் யாவும் நொடிப்பொழுதில் மறைந்து, மனம் காற்றில் தவழ்தல் போன்ற உணர்வு. முத்த ஸ்பரிசம் மனதைக் கரைந்தோடச்செய்தது.

"கெட்டித்தனமாய் சண்டை பிடிச்சு வெற்றியோட வரவேணும். நான் அந்தக் குடிலில இருப்பன்."

தழுதழுத்த குரலில் அந்த ஈழத்தாய் கூறினாள். இதைவிட வேறு என்ன பேறு பெற்றோம் என்பதைப் போலிருந்தது.

"இன்றைக்கு எப்படியும் அவங்களைக் கொன்று இடத்தைப் பிடிக்காம வரமாட்டம் அம்மா."

உணர்ச்சியோடு ஏகமாக எல்லோரும் சொன்னோம். ஒவ்வொருதராக பைக்குள்ளிருந்த பொங்கலை எடுத்து வாய்க்குள் தீத்தி விட்டாள் அந்த அன்பான தாய். எமக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அந்த வெண்பொங்கல் சர்க்கரைப்பாகுவாய் இனித்தது. உடலில் இழந்து போன பலம் அனைத்தும் புத்துணர்வு பெற்றதாய் இருந்தது. சோர்ந்து கிடந்த நாடிகள் வேகமாகத் துடித்தன.

எந்த உணவாலும் வெற்றியாலும் பெறமுடியாத சந்தோசத்தை இந்த தேசப்பற்று மிகுந்த தாய் என்னவாய் ஊட்டிவிட்டாள்! நாம் மறையும் வரை பார்த்தபடியே நின்றாள்.


தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

அன்னையின் வடிவிலே இருட்டினுள் வெள்ளைச் சேலையுடன் அம்மா தூரத்தே தெரிந்தாள். என்னையறியாது இருதுளி கண்ணீர் உகுத்தேன். இப்படியான தாய்கள் இருக்கும்வரை நாம் என்றுமே ஓயப்போவதில்லை. அருகிலிருந்த கராட்டி மாஸ்ரர் அம்மாவின் திக்கையே வெறித்துப் பார்த்தவண்ணம் இருந்தார். முகத்தில் ஒருவித சந்தோசத்தை அனுமானிக்கக்கூடியதாக இருந்தது. "எதிரிகளின் பாசறையைத் தேடிப்போகிறோம்" மிருதுவாகப் பாடுவது கேட்டது.

எம்மைக் கடந்து சிவப்புப் புள்ளிகள் வரிசையாகப் போவது தெரிந்தது.

"மச்சான் நிற்பாட்டடா.... கெலி அடிக்கிறான்" என்று உரத்த குரலில் சத்தமிட, வெளிச்சத்தை அணைத்து ஒரு முதிரை மரத்தடியில் நிறுத்தினான். அந்த வானூர்தியோ இலகுவில் விட்டுவிடவில்லை. சுற்றிச் சுற்றி வந்து தாக்கினான். சிவப்பு நிற ரேசர் ரவைகள் தார் வீதியில் பட்டுத் தெறித்து, பின் மேலெழுந்து மீண்டும் கீழ்விழுவது சிவப்பாகத் தெரிந்தது. சில ரவைகள் வீதியில் பட்டு வெடித்தன. நாம் வீதியருகில் உள்ள நீர் பாயும் கால்வாய்க்குள் இறங்கி நின்றோம். "ரோட்டைத்தான் உழுகிறான்!" ஆரோ சொல்வது கேட்டது. மீண்டும் ஒரு தடவை வீதி நீட்டிற்கு ரவைகளைப் பாய்ச்சி வர, இரு ரவைகள் ரைக்ரரிலும் பீரங்கியிலும் படுவதை சத்தத்தை வைத்து அனுமானிக்கக்கூடியதாக இருந்தது.

ஸ்.... ஸ்.... இரைந்துவர "5 இஞ்சி போட்டுட்டான் எல்லோரும் கவர் எடுங்கடா" என்ற சத்தத்தில் இரு செல்கள் வீழ்ந்து சிதறின. நேரம் 7.35 காட்டியது.

"இனிப் பார்க்கேலாது! அடிச்சா அடிக்கட்டும்! இதயன். ரைக்ரரை எடடா!" என்றவுடன் இதயன் துணிவாக வேகமாக ஓட்டிச் செல்ல, வீதியின் இருபுறமாகவும் ஓடத் தொடங்கினோம். உலங்கு வானூர்தி கலைத்துக் கலைத்துச் சுட்டபடி வந்தான்.

தலைக்கு மேல போறான், கழட்டிப் போட்டுடுவான் கவனம் என்று சொல்ல, கும் கும் என செல்கள் 100 யார் பின்புறமாக வீதியில் வீழ்ந்து வெடிக்க, சந்தர்ப்பத்தை பயன்படுத்தி ஓடினோம்.

அது நேர்கோட்டில் சென்றது. திரும்ப உசாரானோம். நன்றாக கரைகளில் பதுங்கிக் கொள்ள 50 கலிபர் ரவைகள் வீதியை துளைத்துச் சென்றன. இதயன் ரைக்ரருடன்

காவலரண்புறமாகத் திரும்புவது தெரிந்தது. வயல்வெளிகளூடாக, பற்றைகளூடாக தண்டவாளத்தைக் கடந்து ஓடினோம். உலங்குவானூர்தி துரத்தியபடி வந்தது. திடீரென விரைவுபெற்று உறுமியது. அடுத்து ஸ்.. ஸ்.. என இரு ரொக்கட் மோட்டார்கள் தலைக்கு மேலாகச் சென்று மரமொன்றில் மோதிச் சிதறின. ''ஆ...'' என மாஸ்ரர் முனகியபடி ஓட, என்ன நடந்தது? வினவுவதற்குள் ரவைகள் உஸ்.... ஸ்.... என துரத்தின. மிகுந்த கவனத்துடன் வந்தடைந்தோம். மாஸ்ரரின் கையில் சின்ன உருக்குத்துண்டு ஏறிக்கிடந்தது. இழுத்தெடுத்தபின் பீல்ட் கொம்பிரசால் இறுக்கிக் கட்டினேன்.

சரியாக 8.02 ற்கு முதலாவது பீரங்கி வேட்டைத் தீர்க்க ஆரம்பித்தோம். எதிரி உடனடியாக ரவைகளைப் பாய்ச்சி எதிர்ப்பைக் காட்டினான். நேற்றைய உக்கிரம் இன்று இருக்கவில்லை. ரவைகளை எண்ணியே பாய்ச்சினான். செல்களையும் ஆர்.பி.ஜி களையும் ஓரளவாக இலக்குநோக்கி ஏவினான். நாம் இன்றைய இலக்காக பிரதானமுகாமையும் நெல் சந்தைப்படுத்தும் சபையையும் தேர்ந்து தாக்கினோம். நேற்றைய சண்டையை விட இன்று உலங்குவானூர்திகளும் குண்டுவீச்சு விமானங்களும் பெரும் பிரச்சினையைத் தந்தன. உண்மையில் நாம் மயிரிழையில்தான் தப்பினோம். ஏனெனில் வீசப்பட்ட குண்டு ஒன்று நாம் பதுங்கிய நிலையில் எமக்கு 10 மீற்றர் அப்பால் வீழ்ந்து சும்மா கிடந்தது! அது எதிரிக்கொரு துரதிர்ஷ்டமே எனலாம். அடுத்து நாம் பீரங்கியை இயக்கவேண்டி இருந்ததால் அதிர்வில் அக்குண்டு வெடித்திடலாமென்பதால் அதை அகற்றி, ஒரு காப்பரண் இட்டோம். இத்தனைக்கும் உலங்குவானூர்திகள் இரண்டு, 50 கலிபரையும் செல்களையும் பயன்படுத்தி எம்மைத் தீர்க்க முயன்றது.

இன்றையத் தினம் எமது தரப்பில் இரு போராளிகள் எதிரியின் ஆர். பி. ஜி. எறிகணையினால் காயமடைந்தனர். இருவரையும் மருத்துவக்குழுவிடம் ஒப்படைத்தபின் தாக்குதலை விரைவுபடுத்தினோம்.

12.54 மணி. இறுதிச் செல்லை பிரதானமுகாம் நோக்கி ஏவினோம். மேலே பச்சையும் சிவப்புமாக குண்டுவீச்சு விமானங்கள் இரண்டு சுற்றியபடி இருந்தன.

12.59 மணி.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பீரங்கிகளை ஓய்வடையச் செய்தபின் உடனடியாகக் காப்பு எடுக்கும்படி தளபதி கட்டளையிட " ட்ருங் " என்ற சத்தத்துடன் வீதியில் எதிரி இட்டு வைத்திருந்த அரண்களை இடித்துத் தள்ளியபடி பெரிய வெளிச்சத்துடன் வாகனம் உறுமியது.

"சக்கை லொறியடா கவனமாய்ப் பாருங்கோ" எனக் கத்தியபடி நான் குதிக்க, ஒருமுறை பெரும் ஒளிவெள்ளம் எழுந்தது. பின் காற்று ஒருமுறை முட்டி மோதித் தள்ளியது. இன்னதெனக் கூறமுடியாத - வர்ணிக்க முடியாத - சத்தம் காதைப் பிளந்து வானைக் கடந்து சென்றது. காட்டுமரங்கள் ஒருகணம் ஆடி அடங்கின. விலங்குகள் திகைத்து நிற்க கந்தகப் புகை மூக்கை அடைத்தது. ஒரு காவியநாயகன் கரும்புலியாகி சரித்திரம் படைத்துவிட்டான்!

போர்க் அண்ணை!

நான்கு நாட்களிற்கு முன், ஈசிசெயரில் சாய்ந்து கிடந்த போர்க் அண்ணாவை நினைத்துக்கொண்டேன். அன்றுதான் வீடு சென்றுவிட்டு வந்து எங்களிற்கு பலகாரம் தந்தபின் சிரித்தபடி இருந்தவர்.

"என்னடா, உங்கட செல் பொல்லாத சத்தமே? நான் கிட்ட நிற்கமாட்டன்" என பயமாய் நடித்தவர். தாயிடம் விடை பெற்று வந்தார்? கவிஞர் ரவீந்திரநாத் தாகூரின் "தாயே உனக்காக" என்ற இதயதுளிகள் நெஞ்சத்தை அடைத்தன. மெதுவாக இரைமீட்டு மென்றுகொண்டேன். தாயே உனக்காக.... நான் போகவேண்டிய வேளை வந்திவிட்டது. நான் போய்வருகிறேன் அம்மா..... உதயத்து மங்கிய இருளில் நேற்றுவரை உன்னுடன் கட்டிலில் படுத்திருந்த உனது குழந்தையை அவன் இன்னமும் உன்னுடன் படுத்திருக்கிறான் என்ற நினைப்பில் நோக்கி நீ கைகளை நீட்டும்போது உன்னுடைய குழந்தை அங்கே இல்லை என்று நான் கூறுவேன். அம்மா நான் போய்வருகிறேன்.

மெல்லிய காற்றின் அலையாய் வந்து நான் உன்னைத் தழுவுவேன். நீ குளிக்கும்போது நீர்த்துளியாக நான் மாறி உன்னை மீண்டும் மீண்டும் முத்தமிடுவேன்.

கார்கால இருளில் மழைத்துளிகள் இலைகளின் மேல் விழும்போது கட்டிலில் உறக்கமின்றிப் படுத்திருக்கும் உன்னுடைய காதுகளில் என்னுடைய குரல் மெதுவாக ஒலிக்கும். திறந்த யன்னல் ஊடாக உன்னுடைய அறைக்குள் பாயும் மின்னலின்

தமிழ் ஆவணக்காப்பகம் tamileelam

ஒளியோடு வந்து என்னுடைய சிரிப்பும் உன்னை வந்தடையும். என்னை நினைத்துக்கொண்டு நீ தூங்காது படுத்துக் கொண்டிருக்கையில் வானத்து நட்சத்திரக் கூட்டங்களிடையே இருந்துகொண்டு தூங்கு அம்மா தூங்கு என்றுதான் கூறுவேன்.

சந்திரனின் ஒளிக்கீற்றுக்களினூடே நான் உன்னுடைய கட்டிலை அடைந்து தூங்கிக்கொண்டிருக்கும் உன்மார்பில் மேல் தலை வைத்துப் படுத்திருப்பேன். நான் ஒரு கனவாக உன்னுடைய கண்ணிமைகளின் சிறிய இடைவெளியூடாக உனது உறக்கத்தின் ஆழத்திற்குச் சென்றுவிடுவேன். நீ நித்திரை விட்டெழுந்து பரபரப்புடன் எழும்போது ஒரு மின்மினிப் பூச்சியாய் வெளியே இருட்டினுள் தாவிமறைவேன். பூசைக்காலத்தில் அயலவர்களின் பிள்ளைகள் எங்களுடைய வீட்டில் விளையாடிக் கொண்டிருக்கும்போது புல்லாங்குழலின் ஓசையினூடாக நான் வந்து உன்னுடைய இதயம் முழுவதும் பரவி நிற்பேன்!

பக்கத்துவீட்டு மாமி பிரசாதத்துடன் வந்து குழந்தை எங்கே என்று கேட்டால் என்னுடைய செல்வன் என்னுடைய கண்மணிகளிலும் சரீரம் முழுவதிலும் நிறைந்து நிற்கிறான் என்று மெதுவாக அவளிடம் கூறு. போர்க் குழந்தையும் அம்மாவிடம் இப்படித்தான் கூறியிருப்பானோ?

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# 8

இரவுப்பொழுது ஓடிக்கொண்டிருந்தது.

எமது அணிகள் முகாமினுள் நுழைந்து தாக்குதலை ஆரம்பித்தன. எதிர்த் தாக்குதலின்மையால் எமது எதிர்ப்பை நிறுத்தி எச்சரிக்கையுடன் முகாம்களிலும் காவலரண்களிலும் நுழைந்தார்கள். அங்கொன்றும் இங்கொன்றுமாக இராணுவ உடல்கள் சிதறிக் கிடந்தன. சில கட்டடங்கள் எரிந்து கொண்டிருந்தன.

அதிகாலை 3.00 மணியளவில் முற்றாக முகாம் சல்லடையாகத் தேடப்பட்டது. அங்குமிங்குமாக ஆயுதங்களும் உடல்களும் சிதறிக்கிடந்தன. ஆயுதங்களை அப்புறப்படுத்தினோம். எமது தாக்குதலுக்கு ஈடுகொடுக்க மாட்டாது கரும்புலித் தாக்குதலின் பின் எதிரிகள் முகாமை விடுத்து மலைக் காவலரணிற்கு அருகாக லக்சபானா மின்சார தூண்களை அண்டிய காடுகளில் இறங்கி ஓடத்தொடங்கியதை ஊகித்துக் கொண்டோம். ஆயினும் அவர்களை இருட்டில் தொடர்வது ஆபத்தானது என்பதனால் பின்புறமாகச் செல்லவில்லை.

மறுதினம் காலைப்பொழுது மலர எமது வீரர்கள் இராணுவத்தை கனகராஜன் குளத்திற்கு முன்பாக வழிமடக்கித்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தாக்குவதை வோக்கி மூலம் அறிந்தோம். உலங்கு வானூர்திகள் இரண்டு அந்தக் காட்டுப்புறத்தைச் சுற்றி வட்டமிட்டுச் சுடுவது தெரிந்தது.

காலை 6.15 அளவில் முகாமில் மீட்புவேலைக்காகச் சென்று கொண்டிருந்தோம். நாம் சென்ற பாதை வவுனியாப்புறமான பிரதான வீதியிலாகும். வீதியின் இருமருங்கும் மிதிவெடிகளை இராணுவம் தாறுமாறாக விதைத்திருப்பதனால் பிரதான வீதியை விட்டு இறங்கவில்லை. எமது பிரதான வீதிக் காவலரணைக் கடந்து செல்லச்செல்ல எமக்குள் ஒரு இனந்தெரியாத உற்சாகம் பிறந்தது. தொலைவில் நின்று ஒளித்து ஒளித்துப் பார்த்து என்று எமக்குக் கிட்டும் என ஏங்கிய கட்டடங்கள், மாந்தோப்புகள், தென்னைகள், காவலரண்கள் எல்லாமே எமக்கு அருகருகாக வந்தன! ஏதோ ஒரு உந்துதலினால் ஓடிஓடிப் போனோம்!

உடைந்து சிதறிய காவலரண்களும், எரிந்துகொண்டிருந்த கடைக்காவலரணும் எம்மை வரவேற்றன. அருகே நின்ற வீரைமரம் எமது செல் வீச்சினால் முறிந்துபோய் வீதியைத் தடைபோட்டது. கடைக்காவலரணுள் சிலிப்பர்க் கட்டையில் மூண்ட தீ இன்னமும் விளாசி எரிந்தது. எரிந்து கிடந்த காப்பரணை எட்டிப் பார்த்தேன். மூன்று எதிரிகள் எரிந்து எலும்புக்கூடாகக் கிடந்தார்கள். அருகருகாக ரி. 81 ரக துப்பாக்கிகள் எரிந்து இரும்புப் பகுதி எஞ்சிக் கிடந்தது.

"டேய் என்னை மட்டும் விட்டிட்டு நீங்கள் மட்டும் வந்திட்டியள், பொறுக்கியள்!" என மாஸ்ரர் பேசியபடி உற்சாகமாய் ஓடிவந்தார்.

"கூப்பிட்டுப் பார்த்தம் நீங்கள் எங்கேயோ சப்பலுக்கு போட்டியள்!" என்று அழகு சொன்னான். அழகை நான் காட்டிவிட அவனைப் பேசித் திட்டினார்.

"இங்க ஓடியாங்கோ! முந்தநாள் அடியில எரிஞ்ச பொயின்ற் இதுதான்!"

ஓடிவந்து பார்த்தார்.

"அட அருமந்த ரைபிள்களும் எரிஞ்சு போச்சு. ஒரு தடி எடுங்கோ. தட்டி எடுத்துப் பார்ப்பம்."

"அது உதவாது பரலெல்லாம் வளைஞ்சு போச்சு" தரையில் போட்டபடி கூறினேன். தொடர்ந்து கடைக்குள் இறங்கினோம்.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

"உங்க பாருங்கோ" அவன் சாமான்களையும் கிற் பாக்குகளையும் தொப்பிகளையும் கொடியில் காயப்போட்ட உடுப்புகளையும் காட்டினார்.

"நியாயமான பேர்தான் இருந்திருக்கிறான்கள். வாங்கோ கடைக்குப் பின்னால போய் கிணற்றடியப் பார்ப்பம்."

"டேய்."

எங்கட பொடியளின்ர பொடியைப் பார்த்தேன். இரு போராளிகளின் சடலங்கள் ஒன்று ஒன்றை இழுத்தபடியிருந்தன. என்னை அறியாது கண்ணீர் திரை கட்டியது. வாத்தியார் வெறித்துப் பார்த்தார். "முந்தநாள் செத்த பொடியளின்ர பொடி போலக் கிடக்கு."

"ஓமடாப்பா, நல்லா உள்ளுக்க வந்து காயப்பட்டவனை தூக்கப் பார்த்திருக்கிறாங்கள்." வோக்கியை எடுத்து அறிவித்தபின் அருகில் சென்று பார்த்தேன். பின்புறமாக மாஸ்ரரும் நின்றார்.

முதலாமவன் நெஞ்சிலும் வயிற்றிலும் குண்டைத் தாங்கியிருக்கின்றான். தூக்க வந்தவனுக்கு நெற்றியில் இடதுபுறமாக துவாரம் இருந்தது. பின்புறமாக மூளையோடு இல்லாமல் வெளியாக இருந்தது.

"மச்சான் அவசரப்பட்டு பொடியத் தூக்காதே, றிலீஸ் சுவிச் ஏதாவது வைச்சிருப்பான்."றிலீஸ் சுவிச் என்பது ஏதாவது பொருளின் கீழாக வெடிப்பொருளை அழுத்தி வைப்பதாகும். கனமான பொருள் அகற்றப்பட்டவுடன், வெடிப்பொருள் வெடிப்பதற்கான அதிர்வு வழங்கித் தொழிற்படும். இது பலத்த சேதத்தை உண்டுபண்ணக்கூடியது.

ஏற்றமுறையில் இரு சடலங்களையும் ஆராய்ந்த பின் கடைக்குள் ஆளுக்கொருவராய் தூக்கிச் சென்று சீமெந்தில் வளர்த்தினோம். இரு சடலங்களிலும் ஏராளமான துப்பாக்கி கத்திக்குத்துக்களை அவதானிக்க முடிந்தது.

"பார்த்தியளே, எங்கட பொடிக்கு எவ்வளவு பைனட்சாச் பண்ணியிருக்கிறான்கள். தங்கட வெறிப்புத்தியை பொடியில காட்டிட்டுத்தான் போயிருக்கிறான்கள்" என்று கூறிய மாஸ்ரர் வெறித்தபடி நின்றார். "எங்கே போகப் போறீங்கள் காட்டைவிட்டு!"

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தனக்குள் கறுவிக்கொள்வது எனக்குக் கேட்டது.

நெற்றியில் சூடுபட்ட போராளியின் வயிற்றுப் பக்கம் தாறுமாறாக கிழிக்கப்பட்டுக் கிடந்தது. மற்றயதில் ஏராளமான பொத்தல்கள். ஒரு போர்முனை எத்தனைதான் உக்கிரமாக இருந்தாலும், போரில் பெரும் இழப்புக்களும் ஆத்திரமூட்டும் செயல்களும் மலிந்தாலும், எதிரி வீரனின் உயிரற்ற உடல் கிடைக்கப்பெறும் பட்சத்தில் கைப்பற்றிய வீரர்கள் பின்னர் ஊறு செய்ய மாட்டார்கள். தகுந்த மரியாதையுடன் இறுதிக்கிரியைகளை இராணுவ முறையில் செய்வது, எந்த இராணுவமோ அரசுகளோ தமது கடமைகளாகக் கொள்ளும் விடயமாகும்.

ஆயினும் சிங்கள இனவெறியர்கள் இதற்கு முரணானவர்கள். தமக்கு இழப்புகள், தோல்விகள் ஏற்படும் பட்சத்தில் போராளிகளினது இறந்த சடலங்களையே குதறுவார்கள். இவர்கள் மக்களுக்குள் நுழைந்தால் எத்தனை பெரும் கொடுமைகளை இழைப்பார்? அப்படியான செயற்பாட்டிலிருந்து அவர்கள் மீளமுடியாதவர்கள். இந்நிலையில் இவர்கள் போராளிகளில் இருந்து பெரும்பாலும் வேறுபட்டு நின்றார்கள். அடக்கப்படும் மக்களை எதிரி மேலும் அடக்குகையில்தான் எமது போராளிகள் முளைவிட்டுப் பெருகுகின்றார்கள். இதனை எந்த ஆதிக்க சக்திகளும் இறுதிவரை உணர்வதில்லை..... உணரினும் உணராதவராய் நடிப்பர். இது அவர்களது இயல்பு.

இவ்விதம் போராளிகளது உடல்களைச் சின்னாபின்னப் படுத்துவதில் இவர்களுக்கு ஆத்ம திருப்தி ஏற்படுகிறது போலும்!

உடல்களை மூடிவிட்டபின் கிணற்றடியை நோக்கிச் சென்றோம். நிறைய உடைகள் கொடிகளில் சிதறிக் கிடந்தன. பலவற்றில் இரத்தம் கிடப்பது தெளிவாகத் தெரிந்தது. கிணறு பெரிதான சுற்றளவில் கட்டப்பட்டதாக தெரிந்தது. கட்டுக்கள் உயரமாக கட்டப்படாமல் ஆபத்தானதாக இருந்தன. அதனைக் கடந்து மாந்தோட்டத்தில் ஏராளமான மாங்காய்கள் சிதறிக்கிடந்தன. சில மரங்கள் முறிந்து சிதைந்து கிடந்தன.

"லியோ, இங்கேபார், பிஸ்ரி எம்ரியள் நிறையக் கிடக்கு!"

"ஓ, உதாலதான் அடிச்சடிச்சு வித்ரோ பண்ணியிருக்கிறான் போல!" கரையோர சிலிப்பர் கட்டைகளை சுட்டிக்காட்டினேன். அவை 50 கலிபர் சூடுகளுக்கு அரணாக இருந்தமையால் முன்னால் கிடந்த பற்றைகள் தொட்டந் தொட்டமாய் கருகிக் கிடந்தன.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அவ்வடையாளம் நேராக மலைக்காவலரண் வரை சென்றது.

"இங்கே பார் இரத்தக்கறை பட்ட உடுப்புகள்!"

"ஓ, அதிலையும் கனக்க கிடக்கு! ஞாயமாத்தான் செத்து காயமும் பட்டிருக்கிறான்கள். ஏலாமத்தான் காட்டுக்குள்ள இறங்கியிருக்கினம்."

ஆங்காங்கே சிதறிக்கிடந்த ரவைகளை ஒன்றாக குவித்து வைத்தோம். கைக்குண்டுகள், துப்பாக்கி எறிகணைகள் பெருமளவு ஆங்காங்கே இருந்தன. அவற்றை பக்குவப்படுத்திய பின் ஆபத்தான நிலையில் இருந்த குண்டுகளை மெதுவாகத் திரட்டி "எச்சரிக்கை" என மரத்தில் குறித்து அருகில் குவித்துச் சென்றோம். இவ்வாறு சேர்க்கப்பட்டவற்றில் பாவனைப் பொருட்களும் கிடந்தன.

பகைவனைப் பொறுத்தவரை சிறிய இன்ரமீடியம் ரவைகளும் எம் ரவைகளும் மண்ணில் புதைந்து கிடந்து, சேகரிப்பதில் சிரமத்தைத் தந்தன. ஆயினும் நாம் ஒவ்வொரு ரவையாக கூட நேரத்தைச் செலவிட்டுக் கிண்டி எடுத்தோம். அரிய பொருட்களைப் போல போராளிகள் கவனமாக மண்ணைத் துடைத்து ரவைப் பெட்டிகளில் இடுவதில் ஆர்வம் காட்டினர். ரவைகளைப் பெறுவதற்காய் இடிந்து கிடந்த தூண்களை மிகக் கஸ்ரப்பட்டு அகற்றித் தேடினோம். நேற்றைய மதியத்தின் பின் உணவற்றிருக்கும் போராளிகள் இரவு முழுவதும் யுத்தத்தை நடாத்தியபின் இன்றும் இவ்வளவு ஆர்வத்துடன் தம் கடமையைத் தொடர்கிறார்கள். இந்தக் கணத்தில் மக்களிடம் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். என்னவெனில், எதிரி எம்மைவிட ஆட்பலத்திலும் ஆயுதபலத்திலும் மிகுந்து நின்று போரை நடாத்துகையில், பெருமளவு நாம் நம்பியிறங்கும் பலம் யாதெனில் அது உள உறுதியும் கொள்கைப் பற்றும், ஈழமக்களின் மண்ணின் பாற்கொண்ட அன்புமேயாகும். இவையே அசைக்கமுடியாத காவலரணில் பெரும் ஆயுதத்துடன் இருக்கும் எதிரியை நாம் காப்புத்தளமற்ற வெட்ட வெளிகளூடு முன்னேறி அழிக்க உதவும் எமது கவசகுண்டலங்களாகும். இவற்றை எமது மக்கள் நினைவில் நிறுத்திக் கொள்வது சிறப்பானது. அத்துடன், எதிரியிடமிருந்து கைப்பற்றும் ஒவ்வொரு ஆயுதமுமே நாளை அவனைக் களத்தில் எதிர்க்கின்றது. ஆயுதங்களைக் கைப்பற்றச் சென்று வீரமரணமடைந்த போராளிகளை எண்ணிப் பாருங்கள். எதிரியிடம் மீட்கும் ஒவ்வொரு ரவையும் நாளை எமது

Tamileelam Archive

அந்நியனின் பாதங்களைக் குறைக்கும். எதிரியிடமிருந்து கைப்பற்றுதலை இயன்றளவு சுறுசுறுப்புடன் நாம் செய்வது இதற்காகவேயாம். இவற்றின் மூலம் எம்மை வலுவாக்கி அந்நிய ஆதிக்கத்தை உடைத்து சுதந்திர ஈழ மலர்விற்காக போராளிகள் கணமும் உழைப்பார்கள் என்பது நிச்சயம். அந்த மைந்தர்களின் தாகத்தை மக்கள் தீர்க்க வேண்டும். எல்லோர்களாலும் இயலாதுவிடினும் அதனை மதித்தாவது நடக்கப் பழகிக்கொள்ளல் வேண்டும். இதுவே மாவீரர்களின் ஆசைக் கனவு.

"மாஸ்ரர், வாங்கோ, பெரிய காம்புக்குபோய்ப் பார்ப்போம்."

அழைத்துச் சென்றேன். பிரதான வீதியினூடாக நடக்கும் போது எனது சிறுவயது எண்ணங்களை நினைத்துப் பார்த்தேன்.

"மாஸ்ரர், இந்த இடங்களைப் பார்த்தவுடன் எனக்கு முந்திய ஞாபகம் வருகுது."

"ஏன் என்ன நடந்தது?"

"ஒன்றும் நடக்கேல்ல. 83, 84களில் எங்கட வீடு புதிசாக மன்னங்குளத்தில கட்டினனாங்கள். அப்ப முல்லைத்தீவு பஸ் வந்தா சந்தியில நிற்கும். அதில இறங்கினாப்பிறகு நேரா வாற வவுனியா, கொழும்பு பஸ்காறன்கள் ஏத்தமாட்டான்கள். அதால நடந்துதான் வீட்டுக்கு அநேகமாக போவோம். சில நேரம் லொறி வரும். நடந்து போகேக்க நானும் அம்மாவும் தான் போனனாங்கள். எங்களுக்கு முன்னாலை இரண்டு பெடியள் சைக்கிளில் வர உதுக்குள்ளயிருந்து இரண்டு ஆமி வந்தாங்கள். நாங்கள் அவங்களைக் கடப்பதற்கு இன்னும் 50 அடி இருக்கும். சைக்கிளை நிற்பாட்டச் சொல்லாமல் கிட்ட வந்தவுடனே ஒரு உதை. ஒன்றை ஓடுறவனுக்கு விட பொத்தென்று விழுந்தான்கள். அதற்குப் பிறகு துவக்கால விளாசித்தள்ளிப்போட்டு குளறக் குளற இழுத்துப் போனாங்கள். நாங்கள் திரும்பிப் பார்க்காமல் ஓட்டம் பிடித்தோம்."

"அவங்களுக்கு என்ன நடந்தது?"

"எங்களுக்குத் தெரியாது. ஆரோ சொல்லிச்சினம் காட்டில யானை மிதிச்சதென்று ஆஸ்பத்திரியில பொடியப் போட்டவங்களென்று. வீட்டுக்காரச் சனமும் ஏன் தாய்மார்கூட, தங்கட பிள்ளையள் என்று நம்பவில்லையாம். பிறகு உடுப்பைப் பார்த்துத்தான்...."

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

'இராணுவ முகாம் மாங்குளம்' எனும் சிங்கள வாசகம் சீமெந்துச்சுவரின் மேலாக இப்போ காயத்தோடு காட்சியளித்தது. இதே இடம்தான், முன்பு வெறியர்கள் மக்களைக் கொடுமைப் படுத்திய இடம். சுதந்திரமாக எல்லா நேரமும் திரியவோ, அக்கம் பக்கம் பார்க்கவோ அனுமதியில்லாத அந்த சூனியப் பிரதேசம், இன்று சுதந்திரக்காற்றை இதமாக சுவாசிக்கின்றது. பிரதான முகாமின் வாசலூடாக இறங்கி கற்கள் இறுக்கிய பாதையில் உள்ளே சென்றோம். ஆக்கிரமிப்புச் சின்னங்கள் சிதறி அலங்கோலமாகக் கிடந்தன.

முன் கட்டடத்துள் ஏராளமான மேசைகள், கதிரைகள், சொகுசான மெத்தைகளுடன் உடைந்துபோய்க் கிடந்தன.

அடுத்த அறையில் பெரிய குளிர்சாதனப்பெட்டி பொத்தல்களாகத் தெரிந்தது. ஓடுகளும் சீற்றுகளும் நொருங்கி சின்னாபின்னமாகக் கிடந்தன. அடுத்த அறைகள் யாவற்றிலும் ஸ்பிறிங் கட்டில்கள் ஏராளமாக மெத்தைகளுடன் நிறைந்து கிடக்க, பலவற்றிலும் உறைந்த குருதித்தடங்களை ஈக்கள் மொய்த்தபடி இருந்தன.

மேன்மேலும் பல பொருட்கள் அங்குமிங்குமாய் சிதறிக் கிடந்தன. மிகப் பிரமாண்டமான அறை ஒன்றில் நுழைந்தோம். அது முற்றாக உணவுப் பொருட்களால் நிறைந்து கிடந்தது சீஸ்ரின்கள், ரின்பால், மீன்ரின்கள், லக்ஸ்பிறே, மா, அரிசி, தேயிலை இவ்வாறு ஏராளமான பண்டங்கள் சேமிக்கப் பட்டிருந்தன. போராளிகளது வாழ்வையும் இராணுவச் சொகுசையும் ஒருகணம் ஒப்பிட்டுப் பார்த்தேன். காடுகளிலும் கல்லு முட்களிலும் நடந்து திரியும் அஞ்சாத இளம் புலிகள் எங்கே? சொகுசு வாழ்வில் சுகம் காணும் அந்நியர்கள் எங்கே?

ஏராளமான சிகரெட் பைகளும், அடிக்கட்டைகளும் கும்பல் கும்பலாக இருந்தன. மழையில் ஊறி அவை கெட்டமணம் ஒன்றைத் தோற்றுவித்தன. ஏராளமான ஆபாசப் படங்கள் சுவர் நெடுகிலும் அலங்கரித்தபடி கிடந்தன. இதுதான் சிறீலங்கா இராணுவப் படைமுகாம். இவர்களிடம் எவ்வாறு ஒழுக்கத்தை எதிர்பார்ப்பது? அவர்கள் விரும்புவதே ஒழுக்கக்கேட்டைத்தான் போலும்!

பெரிதாகக் கரிமண்டிப்போன சுவர்களுடன் சமையலறை தென்பட்டது. உள்ளே சென்று பார்த்தோம். பெரிய

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இந்த வெளிக்குள்ளால்தானே எங்கள் பெடியள் முன்னேறிய வங்கள்? பயங்கர வெளி. பொம்மர்கூட ஒவ்வொருதனாகப் பார்த்து அடிக்கலாம். எதிரி எல். எம். ஜி. களால் குண்டுவேலியே அமைத்திருப்பான். அப்படியிருக்க பழகின தோழர்களெல்லாம் ரத்தம் சிந்தி சாகச்சாக, அடிச்சு விழுத்தினவங்கள்தானே. இந்த றோட்டில ஏறி வெடிவாங்கினவன் றோட்டுக்கு வாறதுக்கு எவ்வளவு கஷ்ரப்பட்டிருப்பான்!

ஐயோ! திலீப் அண்ணை, பிரபா அண்ணை, கோபு ஆட்களெல்லாம் உந்த வெளியிலதானே உயிர்விட்டிருப்பர்?

“அசையாத மலையடா அவங்கள்,”

உணர்ச்சிவசப்பட்டு மாஸ்ரர் தழுதழுப்பதை உணர்ந்தேன். “ஆனால் அதற்கு உரிய வெற்றியைப் பெற்றிட்டம். அடிச்சுக் கலைச்சு இதே றோட்டாலை சுதந்திரமாக திரியிறம். என்னென்றாலும் அவங்களை நினைத்தால் தாங்கேலாது.”

“கோயில் மடத்தைப் பாருங்கோ, எந்தப் பெரிசா உடைஞ்சு கிடக்கு.” கதையை மாற்றினேன்.

“ம்ம்....” பெருமூச்சுடன் ஆமோதிப்பது தெரிந்தது.

ஒற்றையடிப் பாதையூடாக இறங்கி மடத்தை நோக்கி நடந்தோம். விஸ்தீரணமான காவலரண்கள் உருக்குலைந்து போய்க் கிடந்தன. மடத்தின் ஒருபுறம் சேதமாகி இருந்தது. இந்த மடத்தைப் பிடிக்கிறதுக்கு எவ்வளவு கஷ்ரப்பட்டிருப்பான்கள். உம், வெளியால் வந்து அடிப்பது கஷ்ரம்தான்.

மடத்தைத் தாண்டி கோயிலுக்குள் நுழைந்தோம். கோயிலுக்கு முன்பாக நின்ற பெரியமரத்தின் அடியில் இரு இராட்சத எதிரிகள் பிணமாகக் கிடந்தார்கள். ஒருவன் இடுப்பிலும் இன்னொருவன் காது அருகாகவும் ரவையால் துளைபட்டுக் கிடந்தனர். ஒருகணம் வெறுப்பு மேலோங்கினும் இறந்தவர்களிற்கு மரியாதையாக ஆயுதங்களை தோள்களினின்று கழற்றியபின், இரு சாக்குகளை எடுத்து மூடிவிட்டு வோக்கியில் அறிவித்தோம்.

இந்துக்கோயிலை இப்படியான ஒரு சூழலில் காணும்போது எனக்குள் ஒரு தாபம். முன்பு நான் சிறுவனாக இருக்கும் காலத்தில், சாதிப்பாகுபாடு காட்டி கோயிலுக்குள் ஒரு பகுதி மக்களை மற்றையவர்கள் தடுக்கும் வழக்கமும், பின் ஏதாவது சச்சரவு ஏற்பட்டு அவர்கள் சண்டையிட்டு வெட்டுப்படுவதும்

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

எனக்குப் பழகிப்போன சிறுவயது நிகழ்வுகள். இன்று அந்நியன் கோயில் கர்ப்பக்கிரகம் வரை துவசமாடுகின்றான். என்ன அசூசைகள் செய்யவேண்டுமோ அத்தனையையும் செயலில் காட்டியிருக்கின்றான். கோயிலின் மணிக்கூட்டுக் கோபுரத்தில் பெரிய காவலரண். இதைக் கேட்பதற்கு இன்று ஒரு சமய பக்தரும் இல்லை. இன்றுகூட சாதிப் பிரிவினையால் கோயில் சண்டைகள் சிறியளவுக்கு மறைமுகமாக நடைபெறுகின்றன. பலர் மனதில் எதிர்ப்பைத் தேக்கியுள்ளனர். இவர்களெல்லாம் ஏன் ஏகாதிபத்திய தலைவிரித்தாடலின் முன் வாயடைத்துப் போகிறார்கள்? இவற்றைக் கேட்க மட்டும் போராளிகள் என்ற நிலையா தேவை?

ஒரு சுதந்திரச் சூழலில் முற்போக்கான தலைமுறையைத் தோற்றுவிக்க போராளிகள் உயிர்த்தியாகம் செய்கையில், நீங்கள் ஏன் பிற்போக்குத்தனத்தைக் கைவிடத் தயங்குகின்றீர்கள்? இவை என்றும் எம்முடன் ஒட்டிப் பிறவாது நாமாக வரித்துக் கொண்டவைதானே? எல்லையிலே எமது துப்பாக்கிகள் எதிரிகளுக்கு சமாதி கட்டுகையில், நீங்கள் நாட்டினுள் சமுதாயச் சீர்கேட்டை குழி தோண்டிப் புதைத்துவிடுங்கள். நாளை நாங்கள் அனைவருமாய் புதியதோர் ஈழம் படைப்போம். கோயில் காவலரணைப் பார்வையிட்டபின் பிக்கப் வாகனம் ஒன்றில் ஏறி, கனகராஜன் குளம் நோக்கிப் பறந்து போனோம். கண்கள் வானத்தை வட்டமிட்டவண்ணம் இருந்தன. இயந்திரக் கழுகுகள் காற்றினுள் இன்னமும் சுற்றிக் கொண்டு இரைதேடின.

இராணுவம் காட்டினுள் இறங்கிவிட்ட செய்தி மக்களிடையே காட்டுத்தீ போல பரவ ஆரம்பித்தது. எங்கும் கூட்டம் கூட்டமாகக் கூடிநின்று கதைத்தார்கள். இவர்களில் பலர் சொட்கண் துப்பாக்கிகளையும், இடியன் எனப்படும் கட்டுத் துவக்குகளையும் ஏந்தியவண்ணம் காட்டை நோட்டமிடுவது தெரிந்தது. நாம் நேராக புதுவிலான்குளம் எனும் சிறிய அழகான கிராமத்தில் தங்கினோம். சுமார் ஐந்து பொதுமக்களது வீடுகளில் குழுக்குழுவாக தங்கி நின்றோம். இதில் நான், மாஸ்ரர், இதயன், அழகு ஆகியோரும் இன்னமும் ஆறுபேருமாக ஒரு வயோதிபர் வீட்டில் தங்கிக்கொண்டோம்.

சென்றவுடன் அவர்களது அன்பான மதிய உணவை அருந்தி விட்டு நன்றாக நித்திரை செய்து, இரவு 7.30 மணியளவில் தான் விழித்துக்கொண்டோம். தேநீரை அருந்தியபின் இரவுப் போசனத்தின் முன்பாக தலைவாசலில் சென்று, ஐயாவுடன்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அமர்ந்து கொண்டோம். உண்மையில் வயோதிபர்களுடன் உரையாடுவதோ அவர்களது கதைகளைக் கேட்பதென்பதோ எமக்கு மிகுந்த மகிழ்ச்சிதரும் விடயம். இவ்வாறான சந்தர்ப்பங்கள் கிடைக்கும் வேளைகளைத் தவறவிடுவதில்லை. நான்தான் உரையாடலைத் தொடக்கி வைத்தேன்.

"ஐயா இங்க வந்து குடியேறி கன வருடமோ?"

"எங்கட அப்பா அம்மா கலியாணம் கட்டி இதிலதான் குடியேறியவை. அப்ப அவைகள் புத்தூர் நாகதம்பிரான் கோயிலுக்குப் பக்கத்திலதான் இருந்தவை. நானும் அதிலதான் பிறந்து வளர்ந்தனான். பிறகு எனக்கு ஒரு இருபது இருபத்திரண்டு வயசிலதான் இந்தக் காணிகளெல்லாம் காடுவெட்டி பேமிட் போட்டு உறுதியாக்கினனான். பிறகு கலியாணம் செய்தபிறகு இங்கதான் பிள்ளை குட்டியள் பிறக்க இருக்கிறன்."

"அப்ப ஐயாவுக்கு இப்ப எத்தனை வயது?"

"எனக்கோ? இப்ப.... ஆ, எழுபத்தைஞ்சு ஆகுது. 14 ஆம் ஆண்டு பிறந்தனான் எண்டாப் பாருங்கோவன்."

"உங்களுக்கு எத்தனை பிள்ளைகள்?"

"மூத்தது பெடிச்சி, இப்ப கனகராஜன் குளத்தில குடும்பத்தோடு இருக்கிறாள். அடுத்தவன் பெடியன். அவன் ஏதோ வியட்டோ புளட்டோ இயக்கத்தில இருந்து பிறகு சுடுபட்டுச் செத்துப்போனான். இந்திய ஆமி இருக்கேக்கதான். மற்றவன் கடைக்குட்டிப் பொடியன். இப்ப புலவுக்குப் போட்டான் மருந்தடிக்க, இப்ப வந்திடுவான்."

"கன காணிபூமி கிடக்குதோ?" வாத்தியார் கிளறினார்.

"சீச்சி, என்ன இருபத்தைஞ்சு ஏக்கர் நிலம் கிடக்கு. அதிலதான் வயலுகள், தோட்டங்களும் இந்த ஒரு ஏக்கரில வீடும் கிடக்குது. இப்ப எல்லாம் போச்சு. உந்த கிளிச கெட்ட சனங்கள் வரத்தொடங்கினாப்பிறகு கைவிட்டுட்டன். ஏதோ வருசத்தில ஒருநாள் பெரிய படையல் செய்வன்; அவ்வளவுதான்.

இப்ப எங்கே? எல்லாச் சாதியும் இப்ப வெளிநாட்டுக்காரர். அந்தக் காசில எங்களை எங்கே மதிக்கினம்?" பெருமூச்செறிந்தார்.

"எல்லோரும் மனிசர்தானே? உதில என்ன சாதி பார்க்கிறது..." என இழுத்தேன்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

"என்னெண்டாலும் சாதிக்குரிய மதிப்பு வருமே?" அவருடன் மேலதிகமாகக் கதைப்பது அர்த்தமற்றது எனப் புரிந்துகொண்டேன்.

''ஐயா இளைய மகனை வெளிநாட்டுக்கு அனுப்பேல்லையோ? அங்கதானே எங்கட ஊர்ப்பொடியள் வாரிவாரி அள்ளி அனுப்புறாங்கள்?"

வாத்தியார் கூறினார்

"சா... அதுவும் ஒரு வேலையே. இஞ்ச எங்கட தேசத்திலை இத்தனை நிலம் சும்மா கிடக்க? குளம் நிறைய தண்ணி கிடக்க. பொன் விளையிற பூமியை விட்டுட்டு அங்க போறதோ? எனக்கோ பொடிக்கோ கனவிலையும் உந்த எண்ணம் இல்லை. எங்கட ஊரில இருந்து கஞ்சி குடிச்சுக்கொண்டு உந்தக் குளத்தை, காட்டை, கோயிலை, முற்றத்தைப் பார்த்துக்கொண்டு சாகலாம்! உவங்களுக்குப் பயந்து ஒருநாளும் போகமாட்டம்."

அவருடன் உரையாடலில் ஒன்றைத் தெளிவாகப் புரியக்கூடியதாக இருந்தது. இந்த நேரத்தில் நடக்கும் விடுதலைப் போராட்டத்துக்கு எந்தவகையிலும் ஒத்துப்போகக்கூடிய மனப்பாங்கைப் பெற்றிருந்தார். எமது மண் அநாதையாவதோ, எமது வளங்கள் வீணாகிப் போகையில் வெளிநாடு செல்வதோ அவரது விருப்பத்திற்கு மாறானது. ஆயினும் சில பழைய சமுதாயக் கட்டமைப்பை மாற்றத் தயங்குகின்றார். இந்த வேளையில்தான் இளைய தலைமுறைகள் விழித்துக்கொள்ள வேண்டும். இன்று நீங்கள் உங்கள் பெற்றோரை வழிகாட்ட வேண்டிய வரலாற்றுப்படியில் நிற்கின்றீர்கள். ஒரு சிலரால் அது முடியாதுவிடின் உங்களையாவது புதிய பிறப்பிற்காக மாற்றிக்கொள்ள வேண்டும்.

இன்று ஒரு நாகரிக வாழ்வைப் பெற விழையும் நீங்கள், உங்களைப் பிணைத்திருக்கும் பழைமைவாதக் கேட்பாடுகளை உடைக்க வேண்டும். இறுக்கமான கொம்யூனிசம் நிலவிய சீனாவை, சோவியத்ரஷ்யாவைப் பாருங்கள். சீனாவில் பத்து இலட்சம் மாணவர், தியனன் - மென் சதுக்கத்தில் ஜனநாயக உரிமை கேட்கின்றார்களே என்றால், அது பெற்றோரின் அனுமதியுடனானது என்பது முற்றான தவறு.

அங்கு கொம்யூனிசப் படைகள் மத்தியில் அவர்கள் இவ்வாறான மாபெரும் ஒன்றுகூடலை நடாத்தையில், நீங்கள் ஏன் உங்களுக்குக் காவல்செய்யும் போராளிகள் துணையாக

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இருக்கையில் முற்போக்கு நடவடிக்கையில் ஈடுபடாமல் வெறும் மனித பிண்டங்களாக வாழ்கின்றீர்கள்? ஈழத்தின் அனைத்துத் தரப்பினரும் ஒன்றுசேர்ந்து ஒரு இலட்சியத்திற்காக ஒரே தலைமையில் என்று வீதியில் இறங்கி அணிதிரள்கின்றனரோ, அன்றைய தினமே மாவீரரைக் கௌரவிக்கும் விடுதலைத் தினமாகும். இந்நிலைக்கு வருமுன் கூட, சமுதாயக் கட்டுக்களை உடைத்து, அனைத்து தேச மனித வளங்களையும் பொருளாதார சமூக மேம்பாட்டிற்காகப் பயன்படுத்துங்கள். இதுவே உலக பொருளாதார ஓட்டத்தில் எங்களையும் தக்கவைக்கும்.

"ஐயா, உங்கட தோட்டம் துறையளைப்பற்றி கொஞ்சம் சொல்லுங்கோவன்."

"அதுகளைப்பற்றி சொல்லுறதெண்டா என்ர வாழ்க்கையைப் பற்றி சொல்லுறதுக்குச் சமன்."

"அப்ப ரண்டையும் ஒன்றாத் தெரிஞ்சதாப்போகும்" நான் உற்சாகமூட்டினேன்.

"பொறு தம்பி வாறன். உவன் உந்த சுருட்டுக்கட்டை எங்கே வைச்சவன்?" தனக்குள் இழுத்தபடி மண் அறைக்குள் நுழைந்தார்.

கடப்புத்தடிகளை அகற்றியபின் இளைஞன் ஒருவன் வந்தான். தலைவாசலுக்குள் நுழைந்ததும் சிநேகிதமான ஒரு சிரிப்பை வீசியபடி, "அப்பா" என்றபடி அறைக்குள் நுழைய, "உந்தச் சுருட்டுக்கட்டு எங்க மோனை?" என்றார் அப்பா.

சிறிது நேரத்திலை சுருட்டு ஒன்றைப் பற்றவைத்து, அதை அணையவிடாது அடிக்கொரு தடவை இழுத்தபடி வெளியே வந்து, எதிர்க்குந்தில அமர்ந்தார்.

"சுறுட்டு நல்ல விருப்பம் போல?" வாத்தியார் கூற, "ஆருக்கு உமக்கோ?" என மாஸ்ரரைப் பார்த்து வாயில் விரலை வைத்து எச்சரித்தார். கிழவரிற்கு, பழைய புராணங்களைப் புரட்டிப்பார்க்க இருவரும் அகப்பட்டோம்.

"எனக்குத் தம்பி இருபது இருபத்தைஞ்சு வயசிருக்கேக்க உந்த குளத்தை வெள்ளையனுகள் வந்து புதுசா பெரிப்பிச்சு கட்டினாங்கள். அப்ப நிறையத் தண்ணி நிற்கும். அவங்கள் சொன்னவங்கள், யாரும் காடுவெட்டி கமஞ்செய்தா ஒரு ஐந்து வருசத்தில் சொந்தமாக காணி தருவம் என்றவங்கள். எங்கட சனங்கள் எங்க ஒருத்தனும் மாட்டனெண்டுட்டாங்கள்."


தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

"ஏனப்பு வசதியான நிலந்தானே?"

"இப்ப இப்படி சொல்லுவியள், அப்ப ஒரே ஆனைக்காடு. மனிச வாடையே காட்டேலாது. வெள்ளைக்காரனும் துவக்கோடதான் வருவான்."

"பிறகு நீங்கள் எப்படி.....?"

"பொறன்" ஒரு தம் இழுத்து விட்டார்.

"வீட்டில ஆச்சியும் அப்புவும் அறுதியாச் சொல்லிப் போட்டினம், நீ போகாதையென்று. ஆனா எனக்கு மனம் கேக்கேல்ல. நைசா வெள்ளைக்காரங்களைப் பிடிச்சு ஒரு துவக்கு வாங்கிப்போட்டன். அதுக்கு அப்பு குதிச்ச குதி! ஆற்றா உன்னை துவக்கு வாங்கி வீட்டுக்கை கொண்டரச் சொன்னது, என்று திட்டிச்சுது மனுசன். நான் விடாமல் வந்து குளத்துக்கு நல்லா நீர் ஏறக்குடியதாய் காணியை வெட்டிப்போட்டன். ஒவ்வொரு வருஷமும் தண்ணி தட்டுப்பாடில்லாமல் பயிரெல்லாம் நல்லா வளர்ந்து வர, பிறகு மிருகமெல்லாம் பூந்து அழிச்சுப்போட்டுப் போடும்!"

"உங்களுக்குச் சலிக்கேல்லையே?"

"நான் விடேல்லை, தொடர்ந்து செய்து செய்து கொஞ்சம் கொஞ்சமா தேடினேன். பிறகு கையோட ஒரு கலியாணம் செய்துகொண்டன்." புகையை நன்றாக உள்ளிளுத்துவிட்டபின் காறித்துப்பினார்.

"பிறகுதான் உவன் சிவலை மணியம், செல்லத்துரை, வேலன் ஆட்கள் வந்து குடியேறினவங்கள். எல்லாம் நான் இருக்கிற துணிவுதான்." கிழவர் புளுகத் தொடங்குவதை சுவாரசியமாகக் கேட்டோம். "ஒருநாள் இரவு உந்த மேட்டிலதான் அப்ப என்ரை குடிசை. வேலன் ஓடிவந்தான். 'ஐயோ வெள்ளையம்மான். நாலைந்து யானை என்ரை புலவுக்கை பூந்து தின்னுதுகள். வெடிபோட போகுதுகளில்லை. நீங்கதான் ஒருக்கா வரவேணும்' என்று."

"என்னடா கரைச்சல் என்று போனா ஆனைகள் நிண்டினம். எனக்குத் தெரியேல்ல. கொஞ்சம் வெறியுந்தான். அவன் வேலன் நின்றது எனக்குத் தெரியாது. இருந்தாப்போல மூசிவிட்டுது ஒரு ஆனை. பங்க போய் விழுந்தன். திரும்பிப் பார்த்தன். அஞ்சாறு கண்ணுகள் தெறித்துக்கொண்டு நின்றதுகள். ஓடவும் பாக்கியில்ல.

Tamileelam Archive

கிடந்தபடி வைச்சன் வெடி. அதுவும் ஒரு கையாலதான். விழுந்ததில மற்றக்கை பிரண்டுபோச்சு. எல்லா ஆனையும் பார்த்துப் பார்த்து ஓடிச்சுது. அடுத்தநாள் காட்டுக்குள் ஒரு ஆனை கிடந்தது என்று சொன்னாங்கள். வெள்ளையனும் சிறீலங்கன்களும் எனக்கு கையெல்லாம் கொடுத்தாங்கள். அதுவல்லோ காலம்!"

"அப்ப நீங்கள் பொல்லாத வேட்டைக்காரன்தான்?"

"ஓ, வைச்சனென்றால் புள்ளி தவறாது, ஞாயமாய் வேட்டையாடுவன். பிறகு பிள்ளை குட்டிகள் பிறந்து வளர்ந்து இப்படியிருக்கிறன்."

இம்.. என அவர் இழுக்கவும் துப்பாக்கி வேட்டுக்கள் சரமாரியாகக் கேட்கவும் சரியாக இருந்தது. துரிதமாக எங்களது அணிகளை நிரைப்படுத்தி சில போராளிகளைத் தேர்ந்தெடுத்தபின் ஏனைய போராளிகளைக் குழுக்களாக்கி எமது பீரங்கிகளை சூழ்ந்து வியூகமாக காவலில் ஈடுபடுத்த அனுப்பியபின், உழவு இயந்திரமொன்றில் 15 பேராக விளக்கை அணைத்தபின் விரைந்தோம். வோக்கிகளை சரியான அலைவரிசையில் இயக்கிய பின் கிட்டத்தட்ட சண்டை நடைபெறும் இடத்திலிருந்து 1 மைல் தூரத்தில் நிறுத்திய பின் விரைந்து வியூகமாக ஓடத் தொடங்கினோம்.

எமது வருகையை சண்டையில் ஈடுபட்டுள்ள எமது அணிகளுக்கு அறிவித்தபோது எமது தரப்பில் மாதவன் தலைமையேற்று பொருதுவதாக அறிந்துகொண்டோம். புதுவிளான் குளத்திலிருந்து இருளில் பாதையை மாறி காட்டினூடு நடக்க முற்பட்ட எங்களைப் பின்னால் விரைந்து வந்த குரல் இடைநிறுத்தியது.

"என்ன நானும் வாறன். இப்ப எவ்விடத்துக்கு போகவேணும்? சொல்லுங்கோ" அருகில் வந்த பின்னர்தான் அவர் அந்த ஐயாவின் மகன் எனக் கண்டுகொண்டேன். கையில் வேட்டைத் துப்பாக்கி இருந்தது.

"அட நீங்களே, எப்படி? வாத்தியார் வீட்டையல்லோ நின்றனியள். எனக்குத் தெரியாமல் நீங்கள் போட்டியள். நான் சேட்டும் போடாமல் துவக்கையும் பத்து காட்ரச்சையும் கொண்டுவந்திட்டன். இப்ப எங்க போகவேணும்?"

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

சண்டை நடக்கும் இலக்கையும் அதில் நாம் எந்தப்புறமாக தாக்கவேண்டும் என்பதையும் கூற, "வாருங்கோ காட்டிறன்" என முன்பாக நடந்தார். நான் அவரைத் தொடர ஏனையோர் வியூகமாக வந்தனர். சறுக் சடார் என காட்டுச் செடிகளை முறித்தபடி வேகமாக அவன் சென்ற வேகம் எம்மைத் திணற வைத்தது. விரைவாக நடக்கையில் நாம் அவருக்குச் சமமாக ஓடியே செல்லவேண்டியிருந்தது.

சிறிது தரித்து ஒருகையால் காலில் ஏதோ எடுத்து எறிந்த பின் வேகமாய்ச் செல்ல, "என்ன அண்ணை செருப்புப் போடாமலே வந்தனியள்?" என, "ஓ இதெல்லாம் எங்களுக்கு பழக்கம்" என்றார். வேட்டைத் துவக்கை செடிகளில் படாமல் லாவகமாக அசைத்தபடி நடந்தார். இலக்கை அண்மித்தவுடன் எம்மவர்களை நிலையெடுக்கும்படி கூறிவிட்டு, வோக்கியில் நிலையை மாதவனிடம் கேட்க பிரச்சினைகளையும் எதிரியின் பலம், பலவீனத்தையும் எடுத்துச் சொன்னவுடன் இதற்குரிய கட்டளைகளை ஏனையோர்க்குப் பிறப்பித்தபின் இருளை ஊடறுத்து முன்னே சென்றோம்.

அடர்ந்த காடுகளை எமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு ரோந்து நடவடிக்கை மிக அவசியமாகும். இடைநடுவில் சூரியனை கருமேகங்கள் மறைக்க சொற்பத்தில் பலத்த காற்றுடன் மழை பொழிய ஆரம்பித்தது. காற்று மரங்களின் கிறீச் சத்தமும் ஊ... எனும் பேரிரைச்சலும் எம்மால் எதனையும் அனுமானிக்க முடியாதிருந்தது. தண்டவாளத்தில் நாம் செல்வது கூட மிகச் சிரமமாக இருந்தது. எந்தவொரு பொருளையும் பார்க்க முடியாதவண்ணம் மழைநீர் கண்களை மறைத்து ஓடியது.

எதிர்பாராத திடீர் மழையினால் மிகத் தளர்வுற்றபோதும் ஓரளவு வேகமாக நடந்து ரோந்தை கனகராஜன்குளச் சந்தியின் ஊடாக தொடரமுடிவெடுத்தோம். சந்தியை அடைந்த சமயம் மழை ஓரளவு விட்டிருந்தது. மக்கள் திரளாகக் கூடியிருந்தார்கள். அவர்களிடையே காட்டுக்குள் இறங்கிய இராணுவம் பற்றிய செய்திகளும் வதந்திகளும் ஏராளமாக அடிபட்டன. மக்கள் எம்மை வற்புறுத்தி அழைத்துத் தேனீரும் சிற்றுண்டிகளும் தந்து உபசரித்தனுப்பினர்.

ஏறத்தாழ அவர்களிற் பெரும்பான்மையான ஆண்கள் வேட்டைத் துப்பாக்கிகளையோ, கட்டுத்துப்பாக்கிகளையோ வைத்திருந்தார்கள். திடீரென அவர்களிடையே சலசலப்பு

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஏற்பட்டது. சைக்கிளில் வந்து இறங்கிய இருவரைச் சுற்றிக் கும்பலாகக் கூடி உரத்துக் கதைத்தனர். ஒருவரை ஒருவர் இடித்துக்கொண்டனர். என்ன? என்னவாம் நடந்தது? பல கேள்விகளிற்கு விடைபகர்ந்தான், வந்த குடும்பஸ்தனில் ஒருவன்.

"அந்த கனகராஜன் கட்டைப் புலவு இருக்கல்லே? அதைச்சுற்றி வெளிதானே? வெளியால புலவுக்குப் போன பிள்ளை ஒன்றை சுட்டுப்போட்டான் ஒளிச்சிருந்த ஆமி."

"சுட்டுட்டானோ? பிள்ளை செத்துப்போச்சே?"

"சீ காலில்தான். வெடிச்சத்தம் கேட்டோடனே கடைசித் தெருவில நின்றவங்கள் துரத்திக் கொண்டு போனம். மூன்று ஆமிக்காரங்கள் விழுந்தடிச்சு ஓட துரத்திக்கொண்டு போனம். ஒரு பற்றைக்குள் ஒளிச்சிட்டாங்கள். பிறகு சுத்திவளைச்சு இரண்டு வெடி வைச்சம். எங்கட அப்பு அண்ணை சிங்களத்தாலை கதைக்க சரணடையிறம் எண்டானாம். பிறகு எங்கடையள் மிலாந்திக்கொண்டு நிற்க பத்தைக்கால ஒளிச்சு இரண்டு பேரைத் தள்ளி விழுத்திப்போட்டு ஓடிட்டாங்கள். அதுதான் உதெல்லாம். களுசறையள் அம்பிடேல்லை."

"ச்சா வீணா விட்டிட்டியள்" தொந்தி வயிறு குடும்பஸ்தவர் தனது தலையில் அடித்தார்.

ஆவலாக நின்ற பலருக்கு ஏமாற்றமாகப் போக, சீ வீண் என அலுத்தபடி கலைந்தார்கள். ஒரு மனிசி இரண்டுபேரைப் பிடிச்சுக் கொடுத்ததாம். சாப்பிடேக்க பிடிச்சதாம். பாலத்துக்கை பதுங்கேக்கை பிடிச்சதாம். எங்கும் இதே கதையாக இருந்தது.

சந்தோசமான சிரிப்புடன் பிரதான வீதியில் நடக்க ஆரம்பித்தோம்.

"மாஸ்ரர் எப்பிடி எங்கட சனங்கள்" என்று கேட்க, "விட்டா ஆமியை அடிச்சு தின்றுடுவாங்கள் போல கிடக்கு'' என்று சிரித்தார்!

"பின்னர் அவன் உதுக்கை இருந்து செய்த அட்டகாசம் எங்களுக்கே தெரியும்? வருடக்கணக்கா வாங்கின சனம் இதுகள்" என்றேன். எதிரே வயோதிபர் ஒருவர் வாயில் சுருட்டுடன் கட்டுத்துவக்கை தோளில் மாட்டியவண்ணம் எம்மைக் கடந்து சைக்கிளில் சென்றார்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

"காம்பை விட்டு கலைச்ச பிறகு சனம் ஆவென்று திரியுதுகள். அதற்கு முதல் எங்களோட சேர்ந்து ஏன் சண்டைக்கு வருதுகளில்லை? கடைசியாக எட்டிக்கூடப் பார்க்கேல்ல. சனம் இருக்கோ இல்லையோ என்றுகூடத் தெரியாது." மாஸ்ரர் கூற, "இதுதான் மாஸ்ரர் காலமாற்றம். இப்பதான் சனத்துக்கு மாங்குளக் காம்ப் இருக்கக் கூடாது என்ற தீவிரமும் அதுக்கை இருந்தவன்தான் இவ்வளவு காலமும் அநியாயம் செய்தவன் என்ற ஒரு மனோதிடமும் வந்திட்டுது. அவனைக் கலைக்கேக்க இருக்கிற ஆர்வம் இனிமேல் அவங்களை வரவிடாமல் பண்ணுறதிலை இருந்தா அவ்வளவும் போதும்" என்றேன்.

"ஓமோம்" என ஆமோதித்தபடி மாஸ்ரரும் நடந்தார்.

இப்போது நேரம் பி.ப.6.15 மதிய உணவு மறந்துவிட்டது. வீதியால் வேகமாக வந்த ஒருவர் சைக்கிளை சரேல் என பிறேக் போட அது 15 மீற்றர் தள்ளிப்போய் நின்றது.

"தம்பியவை தம்பியவை" வேகமாக அழைக்க வேகமாக ஓடினோம்.

"அந்தப் பக்கம் தெரிகிற முடக்கிருக்கெல்லே? அதில ஒரு கடை கிடக்கு. அதுக்குப் பக்கத்து வீட்டில ஒரு தடியன் ஓடுறதையும் ஒரு மனிசியின்ரை கத்திற சத்தமும் இடைக்கிடை சிங்களப் பேச்சும் கேட்கிது. தம்பி ஆமியாயிருக்கோணும். பின்னேரம் உதுவழிய திரிஞ்சவன் என்று சொன்னவங்கள்."

அவ்வளவுதான். வேகமாக கட்டளைகளைப் பிறப்பித்து ஓட ஆரம்பித்தேன்.

"எப்பிடியும் ஒருத்தனையாவது மடக்கோணும். வேகமாய்ப் போங்கடா!" மாஸ்ரர் தொண்டை கிழியக் கத்தினார்.

வளைவை அண்மித்தவுடன் இரு காணிகளாகப் பிரித்து ஒரு அணியை அந்த பெரிய வெளியில் தூரப்புறமாகச் சுற்றிவளைக்கும்படியும், எமது வளைப்பைக் கடந்து வெளிப்புறமாக தப்பித்தால் மாத்திரம் சுடும்படி கட்டளையிட்டு ஒரு அணியுடன் கடையை வியூகமாக நெருங்கினேன். கடைக்கு இருவரும், ஏனையோரைக் கொண்டு வீட்டைச் சுற்றிவளைத்தேன். நிலையெடுத்து நெருங்க நெருங்க வீட்டுக்குள்ளிருந்து பேச்சுக்குரல்கள் எழுவதும் இடையில் உண்மையில் சிங்கள வார்த்தையும், கொச்சைத் தமிழும் கதைக்கப்படுவதும் கேட்டது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

வீட்டை மிக மிக நெருங்கிச் சுற்றிவளைத்த பின் நான் முற்றத்தில் நின்ற நந்தியாவட்டைச் செடியில் மறைந்துகொண்டு அவதானித்தேன். பேச்சுக்களை செவிமடுத்தேன்.

"உனக்கு கொப்பன் தரவேண்டிய தெல்லாம் தந்துதான்ரி அனுப்பினவன். இப்ப என்ன முஞ்சியோட கொப்பற்ற இழவுக்கு வந்து ஆச்சின்ரை கொடியைக் கேப்ப. நானொருத்தன் மடையனென்று நினைச்சியோ?" ஆண்குரல் ஆவேசமாய் ஒலித்தது.

"இங்க பாருங்கோ மஸ்தான் நங்கி தெரியாம கேட்டுப்புட்டாங்க. நீங்க சமாதானமாகப் போங்க" சிங்களக்குரல் சமாதானம் பண்ணியது.

"நீ ஆரடா என்னைப் புடிக்க? சிங்கள வடுவா! என்ர சொத்தை கேட்டவளை கொல்லாமல் விடமாட்டன்; விடுறா விடுறா!" ஆவேசமாக வெறியில் திணறுவது கேட்டது.

"என்ர ஐயோ! பாடையில போவான். அள்ளுண்டு போவான். வெள்ளி விழுந்து வேரோட சாய! இவனை சுட ஆளில்லையோ?" பெண்குரல் ஒப்பாரி வைக்க, மெதுவாக விலகி சமிக்கை மூலம் உடனடியாக வெளியேறினோம். கடையருகே மாஸ்ரர் துப்பாக்கியை தயார்நிலையில் வைத்தபடி தயாராக நின்றார். எம்மைக் கடந்து ஓடும் பட்சத்தில் எதிரிக்கு எச்சரிக்கை வேட்டு தீர்ப்பதற்காக இருந்திருக்கலாம்.

"என்னடாப்பா, எங்கை ஆள் மாட்டேல்லையோ?"

"வாங்கோவன் பெரிய கதை சொல்லுறன்."

ஆங்காங்கே பற்றைகளில் மறைந்திருந்த அனைவரையும் ஒன்றுதிரட்டியபின் நடந்த சங்கதியைக் கூற விழுந்து விழுந்து சிரித்தோம். நல்ல விசர் வேலை, வீணான நேரம்! பின்னர் அலுத்துக்கொண்டனர்.

மீண்டும் ரோந்தைத் தொடர்ந்தோம். இருள் சூழ்ந்த நேரமாகையால் மிகுந்த எச்சரிக்கையுடன் நகர்ந்தோம். இடையிடையே மந்திகள் பாய்ந்தும், விலங்குகள் ஓடியும் எமது நேரத்தை விரயமாக்கின.

புதுவிளான் குளத்தை அடைந்தபோது நேரம் 9.45 அதிகாலை உணவின் பின் எவ்வித ஆகாரமும் அருந்தாது பசிக்களைப்பால்


தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

துவண்டு இருந்தோம். புதுவிளான் மக்களின் இடியப்பமும் இறைச்சிக் கறியும் இழந்த தெம்பை மீட்டுத் தந்தன. காலை 9.00 மணியளவில் ஒரு அணியினரைக் காவலில் ஈடுபடுத்தியபின் வளமான புதுவிளான் குளத்துள் நீராடச் சென்றோம்.

ஏற்கனவே திட்டமிட்டபடி இரு குழுவாக நீருனுள் இறங்கினோம். எனது கரையில் நானும் மாஸ்ரரும் டாவினும் இன்னும் இருவரும். மறுகரையில் இதயனும், அழகையாவும் மேலும் மூவரும் இரண்டு குழுவாக நின்று குளித்தோம். நெஞ்சளவு நீரில் அலைகள் தலையளவாக மோதுகையில் மூச்சுத் திணறியது. சிறிது நேரத்தின் பின் இரு அணியினரும் தனித்தனியாக ஒவ்வொருவர் தோள்களில் ஒவ்வொருவராக ஏற இறுதியில் சுமைதாங்கி தள்ளாட, சுமைதாங்கியில் இருவர் நிறுத்தப்பட்டார்கள். எமது அணியில் வாத்தியாரும் மறு அணியில் அழகையாவும் மேல் நிற்க சூரன் . முருகன் சண்டை போல பின்னாகவும் முன்னாகவும் ஓடியோடி எதிர்த்தோம்.

மாஸ்ரரும் அழகும் நன்றாக உயரத்தில் ஏற்றப்பட்டதுடன் இன்றைக்கு வெல்லுறது ஆர் பார்ப்பம் என போட்டியையும் கிளப்பி விட்டோம்.

"டாய் கிட்ட வந்தா உதைப்பேன், குத்துவேன். ஆகாகா!" மாஸ்ரர் கர்சிக்க, எங்க விடுறா பார்ப்பம் என அழகுவும் முறுக இருவரை மோத விடுவதாகவும் பின் கட்டிப்பிடித்து அடிக்கையில் பின்னால் இழுப்பதாகவும் இருந்தோம். இம்முறை அழகுவின் கையுக்குள் மாஸ்ரரின் கழுத்து அகப்பட பொறியில் அகப்பட்ட எலியாகத் திணறி அவனை வயிற்றில் ஓங்கித் தள்ள நாம் சமிக்கை செய்ய இரண்டாமவனாக நின்றவன் இருவரையும் நீரில் தூக்கியெறிய கட்டிப்பிடித்தபடி தொபீர் என விழ, ஏக ரகளையாக இருந்தது.

கரையில் ஈரம் வடிவாகத் துவட்டியபின் தோய்ந்த உடுப்பை போட்டுக்கொண்டேனோ இல்லையோ தொபீர் என நீரினுள் வீழ்ந்து அடியைத் தொட்டு வந்தேன். மேலே மாஸ்ரரும் அழகுவும் இடுப்பில் கைவைத்தபடி என்னைப் பார்த்துச் சிரித்தனர்.

"அடேய் எங்களை ஏமாத்த எமனாலும் முடியாதடா" என சினிமா வசனம் பேச, நொண்டியபடி மேல் வந்தேன்.

மதியம் உணவருந்தியபின் விளாக்காடு சென்று விளாங்காய் பறித்துவந்து துருவு பலகை வாங்கித் தேங்காயாகத் துருவி சம்பல்

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

போட்டு உறைக்க உறைக்க ஆளிடம் ஆள் பறித்து உண்டோம். இன்றைக்கு இரவுக்கு எப்பிடியும் மாஸ்ரருக்கும் அழகுவுக்கும் நான் ஆரெனக் காட்டவேண்டும் எனத் தீர்மானித்து அங்கு இருந்தவர்களுடன் சகஜமாகப் பழகினேன்.

"ஐயா, பிறகு எப்படி? வேறென்ன புதினம்?"

"என்ன புதினத்தைச் சொல்லுறது. கனகராஜன் குளத்தார் ஆமியளை மடக்கிறாங்களாம். இங்கால வரமாட்டேன் என்கிறாங்களாம்."

"வந்தா பிடிப்பியளோ?"

"பிடிக்கிறதோ? நான் ஆர் தம்பி? எருமைப்பிடி ஏரம்புவின்ர பொடியன் என்றா எல்லோரும் பீச்சல் பயம்! இப்பவெல்லோ இப்பிடி; எங்கட காலத்தில எத்தனை குழுவன் எருமைகளை பிடிச்சிருப்பம்? உவனை பிடிக்கிறது பெரிய வேலையே?" முந்திய தமிழ்ப் பரம்பரையில் காளை மாட்டை அடக்கிப் பெருமை சேர்ப்பது போல் இந்த மனிதர்கள் துப்பாக்கியுடன், எதிரியைக் கண்டு அடங்கிய மக்கள் இன்று அவர்களை மடக்குதலை வீர விளையாட்டாகக் கைக்கொள்வதும் ஒரு சமுதாயமாற்றமே!

மாஸ்ரர், நீங்கள் பிடிச்ச காம்பில நாளைக்குப் பால்ராஜ் அண்ணை கொடி ஏத்தப்போறார். சந்தோசமாகப் படுங்கோ!

யாவரும் படுத்துறங்கினர். நானும்தான்.

காலை வேகமாக எழுந்து புறப்பட்டோம். மாங்குள முகாமை நோக்கி இரு உழவு இயந்திரங்களும் ஊரத்தொடங்கின. முன்பு ஒரு காலத்தில் கொடுமைகள் அனைத்தையும் புரிந்து அவனது ஆக்கிரமிப்புக் கொடியை பறக்கவிட்டுக்கொண்டிருந்த அந்த மாங்குள முகாம் இன்று எம்மவர்களால் தகர்க்கப்பட்டு சிதைந்த கோலத்தில் காட்சியளித்துக்கொண்டிருந்தது.

ஓ, மாவீரர்களே! எம்மோடு தோளோடு தோள் நின்று போராட்டச் சுமையைப் பகிர்ந்துகொண்ட பராக்கிரமசாலிகள். எதிரியின் உடலிலும் உள்ளத்திலும், ஏன், ஒவ்வொரு அணுவிலும் நுழைந்து அவனைப் பீதியுறச் செய்த மறவர்கள். அரணுக்குள் கிடக்கும் எதிரியை அழிப்பதற்காக குண்டு வில்லையை ஊடறுத்து வெட்டை வெளிகளில் பாய்ந்த அஞ்சா நெஞ்சினர். சில வினாடிகளில் தமது உயிர் தமக்கில்லை எனத் தெரிந்தும் உடல் சிதற கரும்புலியாகி எதிரி முகாமையே இடித்துக் கொட்டிய

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இலட்சியவாதிகள் இவர்கள்தான். இந்த மாங்குள மண்ணின் தென்றலின் தழுவலில் பரணி வருபவர்கள். குளிர் நீரோடையின் சலசலப்பில் சந்திப்போர்கள். காட்டுமரங்களின் அமைதியில் உறைந்துபோய் மெல்லிய கிரீச்சிடலில் புன்னகை புரிவார்கள். இங்கே பொழியும் மழை முத்துக்களில் தோற்றம் பெற்று புனித மண்ணில் முத்தமிடுவார்கள். மெல்லிய நிலவின் நுழைவுகளின் ஊடாய் தவழ்ந்து வந்து தழுவுவர். காட்டு மயிலின் வனப்பான ஆடலிலும், வசந்தகாலக் குயில்களின் இனிமையிலும் கலந்து எமது உள்ளங்களில் மெல்லப் புகுந்துகொள்வர். தூங்காத தோழர்களை தமது இதமான வருடலினால் தூங்குவிப்பர்.

அவர்களின் குருதி தோய்ந்த மண் நாளை வளம் கொழிக்கும்.

இந்த எல்லைகளில் அவர்களே காவலாளிகள். மீண்டும் மீண்டும் தமிழ்த் தாயினூடாய் வருவர். சூரியன் இங்கே இனிச் சுடாது! ஒவ்வொரு போராளியின் உதட்டசைவிலும் நாவொலியிலும் விழிச்சுடரிலும் மாவீரரே பெற்று நிற்பர். பதிக்க வேண்டிய பாதச் சுவடுகளைப் பக்குவமாய்ப் பதிப்பதென பாலகரைப் பழக்குவர் நாளைய விடியலுக்காக!

இவர்கள் மறையாத சூரியர்கள்!

இவர்கள் ஓடித்திரிந்த பாடித்திரிந்த ஊர்களும் வயல்களும் மதகுகளும் இவர்களை என்றுமே மறக்காது. இயற்கையில் ஒவ்வொரு அசைவிற்கும் உயிர் என நிற்பர்.

இறுதியாக மீண்டும் ஒருமுறை அந்தச் சிதைந்த முகாமை பார்த்த வண்ணம் இருக்க, அது சிறிது சிறிதாகி மறைய ஆரம்பித்தது.

எமது உழவு இயந்திரங்கள் பீரங்கிகள் சகிதம் மீண்டும் யாழ்நகரை நோக்கிப் பயணிக்க இறுதியாக ஒரே ஒரு தரம் கைகளை உயர்த்தி அசைத்துவிட்டுத் திரும்புகிறோம். விழிகளில் நீர் படபடக்கின்றன. மேலே தெளிவான நீலவானத்தில் வெண்மேகக் கூட்டங்கள் சாரிசாரியாக எதிர்த்திசையாய் விரைகின்றன.

தூரத்தே கொக்காவில் கட்டடங்கள் சிறிதாகத் தெரிய ஆரம்பிக்கின்றன.

"விண்வரு மேகங்கள் பாடும், மாவீரரின் நாமங்கள் கூறும், கண்வழி கங்கைகள் பாயும்" எனும் மெதுவான குரல் என்

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

*காதுகளில் இசைக்கின்றது.*

*மாங்குள இராணுவ முகாம் தகர்ப்பு நினைவுகள் இத்தோடு முடிவுறுகின்றபோதும் அடுத்து சிலாவத்துறை நிகழ்வுகள் என் நெஞ்சில் பாயத்தொடங்குகின்றன.....*

**- மலரவன் (லியோ)**

இவர் சிலாவத்துறைச் சண்டையின் அனுபவத்தைப் பற்றி எழுதத் தொடங்குமுன், 23.11.1992 அன்று நடந்த பலாலி தளத்தின் கிழக்குப்பகுதி மீதான தாக்குதலில் வீரச்சாவெய்திய மாவீரர்களில் ஒருவரானார்.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# வீர மகனுக்கு
# தாயின் கவிதை அஞ்சலி!

மண்ணில் எங்கள் மைந்தனாய்
மலர்ந்திட்ட இளையவன் - மலரவன்
அண்ணர் மூவரின் அரும்பெரும்
ஆருயிர்ச் சோதரனாகியவன்.

குலம் விளங்க மலர்ந்தவன்
குடும்பத்தின் ஒளி விளக்கானான்
பாசத்தை உணர்த்திய பாலகன் - இவன்
பண்பினால் பலரைக் கவர்ந்தவன்.

மலர்களில் மோகம் கொண்டவன் - வண்ண
மீன்களைத் தொட்டியில் வளர்த்தவன் - ஆசையால்
நாய்களிரண்டை வளர்த்திட்டான்
சாகசம் பலவும் பழக்கிட்டான்.

கல்வியின் சிகரமாய் விளங்கியவன்
கவிதைகள் பல புனைந்தவன்
வீணர்களை வீழ்த்த வீறு கொண்டான்
வேங்கைகள் படையில் அணி திரண்டான்.

ஈன்றவர் இட்ட பெயர் விஜித்தன்
சான்றவர் இட்ட பெயர் லியோ
தேர்ந்தான் பெயரை மலரவன் - தானே
தாயவள் மொழியில் பற்றுடனே.

இலட்சியப் பயணங்கள் மேற்கொண்டு
பசீலனை இயக்கிடும் பணி செய்தான்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

சீறிப் பாய்ந்திடும் பசீலன் கணைகளால்
எகிறியே ஓடினர் எதிரிப் படையினர்.

களம் பல கண்டு ஓய்ந்தபின் – யாழ்
மாணவர் அமைப்பின் பொறுப்பாளனாய்
அணி திரட்டினான் மாணவரை – அரும்
பணிகள் பலவும் புரிந்திட்டான்.

இலட்சிய வேங்கையின் பயணங்களை – மாங்குள
முகாமை மீட்ட சாதனையை
விளக்கமாய் எழுதி வைத்திட்டான்
புயற்பறவை எனும் புனைபெயர் பூண்டு.

இடைவழியில் அவனை இழந்திட்டோம்
இராணுவ வேலியை அழித்திடவே
இளம் வேங்கையவன் வேட்கை கொண்டதனால்
களத்தில் காவியம் படைத்திட்டான்.

மண்ணில் உதிர்ந்திட்ட மைந்தனே! – இன்று
விண்ணில் உயர்ந்திட்டாய் மா வீரனாய்
விதையாய் வீழ்ந்திட்டாய் மண்ணிலே – இன்று
கதையாகி விட்டதே உன் சரிதை.

இருபதே வருடங்கள் வாழ்ந்தாலும்
அர்த்தமாய் வாழ்ந்திட்டாய் வல்லமையால் – இந்த
மண்ணின் விடியலே உன் கனவு – நீ
விண்ணிருந்து நோக்குவாய் மலரும் தமிழீழமதை!

- மலரன்னை

*(கப்டன் மலரவனின் அம்மா எழுதிய கவிதை இது.)*



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

எமது இயக்கத்தின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் அவர்கள் கப்டன் (லியோ) மலரவனுடனான தனது அனுபவங்களை இங்கே பகிர்ந்துகொள்கிறார்.

# குறைந்த கதை நிறைந்த செயல்

ஓ..... எங்கள் மலரவனே! உன்னைப்பற்றி நான் எழுத முனைகின்றபோது என் மனதில் ஓர் ஏக்கம், தவிப்பு. ஏனெனில் உன்னுடைய வாழ்க்கைப் பதிவு நிச்சயமாக எழுத்தாற்றல் உள்ள ஓர் எழுத்தாளனால் எழுதப்பட்டால், அது எத்தனை மடங்கு உயர்ந்த காவியமாக மாறும்! அதற்கு என்னால் முடியவில்லையடா. இருந்தும் உன்னைப்பற்றி என் மனதில் அடிக்கடி மீட்டுப்பார்க்கும் பசுமையான நினைவுகளை, இனி என்றுமே கிடைக்காத அக்காலத்தின் இனிமை நிறைந்த நினைவுகளை, சிறிதேனும் எல்லோருடனும் பகிர்ந்துகொள்ளும் அவாவும் என் மனதில் உண்டு.

ஆம், நான் முதன்முதலாக யாழ். மாவட்டப் பொறுப்பாளனாக, 1991 ஆம் ஆண்டு பொறுப்பெடுத்து வந்த

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

பொழுதுதான் உன்னைச் சந்திக்கின்றேன். அப்பொழுது நீ எமது பசீலன் பீரங்கிப் படைப்பிரிவின் ஓர் அணித்தலைவனாக இருந்தாய். பசீலன் அணியினர் எல்லோரையும் ஒன்றுசேர்ந்து சந்திக்கும் சந்தர்ப்பத்திலேயே நீ எனக்கு அறிமுகமாகின்றாய். எப்படியெனில் இருந்த அனைவருக்குள்ளேயும் நீ எழுந்து நின்று "எமது பசீலன் அணியில் பலர் குறைந்துவிட்டார்கள். வீரமரணமடைந்தும், கடுமையாக காயமடைந்தும் குறைந்துவிட்டார்கள். எங்களுக்கு புதிதாக ஆட்கள் எடுத்துத் தந்தால் நாம் பயிற்சி கொடுத்து, தற்பொழுது உள்ளதை விட பல மடங்கு பெரிய படைப்பிரிவாக வளர்க்கலாம்" என்றாய். அப்பொழுதே உன்னுடைய வேகத்தையும் ஆர்வத்தையும் துடிப்புள்ள செயற்பாட்டையும் காணக்கூடியதாக இருந்தது.

பசீலன் அணி என்பதைப் பற்றி நான் சிறிது விளக்கி உன் கதையைத் தொடர்வது பொருத்தமாயிருக்கும் என நினைக்கிறேன். பசீலன் என்றால் எதிரி தனது பின் வழியை அதாவது தப்பிச் செல்லும் பாதையையே தேடுவான்! அவ்வளவுக்கு எதிரிக்கு ஒரு சவாலான ஆயுதமாகவும் எத்தனையோ வளர்ச்சி பெற்ற நாடுகளின் ஆயுதங்களுக்கு ஒப்பான தரம் வாய்ந்ததாகவும் அமையப்பெற்றதுதான் எமது பசீலன் பீரங்கிகள். எமது பசீலன் அணியில் சேருவது என்பது சாதாரண விடயமல்ல. அதற்கான பயிற்சியை எடுப்பது, முடிப்பது என்பதை நினைக்கவே பலருக்கு கொஞ்சம் தயக்கமாக இருக்கும். ஆனால் எமது பசீலன் அணியில் இருந்த போராளிகள் உற்சாகத்தோடும் மகிழ்ச்சியோடும் தங்களை வருத்தி இப்படையணியின் வளர்ச்சிக்கு உதவினார்கள். இந்தப் பசீலன் அணி பல களங்களின் வரலாற்றுப் பதிவுகளுக்கு உறுதுணையாக நின்றது. இந்தத் தளர்வறியாப் போராளிகளின் வரிசையில், மலரவனே நீயும் நிச்சயம் ஒருவன்.

மலரவன் ஓய்வாக இருப்பதை நான் என்றுமே காணவில்லை; அவன் ஏதாவது செய்துகொண்டேயிருப்பான். பீரங்கிகளின் வேகத்தையும் தூரத்தையும் அளவிடும் கணிப்பீடுகளில் ஈடுபடுவான். அல்லது தன்னுடைய பீரங்கியை துப்பரவு செய்தபடி இருப்பான். அல்லாவிடின் தனது சக அணியினருக்கான விளக்க வகுப்புகள் எடுத்துக் கொண்டிருப்பான். அக்காலகட்டத்திலேயே பல சரித்திரச் சாதனைகளை எம்மவர்கள் பிறப்பித்து நின்றார்கள். பல முகாம்கள் தகர்க்கப்பட்டு, கைப்பற்றப்பட்டு அங்கே எங்கள்



தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

தேசியக்கொடி பறந்து நின்றது. அந்த ஒவ்வொரு வெற்றியின் பின்னும் மலரவனின் பங்கு குறிப்பிடத்தக்கதாக இருந்தது.

எமது தலைவர் எமக்கு அடிக்கடி கூறும் துணிவு, தந்திரம், கடும்பயிற்சி இவை அனைத்தின் வடிவத்தையும் நான் முழுமையாக எங்கள் மலரவனில் கண்டேன். நான் அவனில் இன்னுமொன்றையும் கண்டேன். குறுகிய கால அனுபவத்திற்குள்ளேயே அவனின்- ஓர் தளபதிக்கே உரித்தான திட்டமிடும் ஆற்றலைப் பார்த்தேன். அவன் கதைப்பது மிகவும் குறைவு. இதை அவனின் செயல்வடிவம் நிறைவுபடுத்திற்று. இது எங்கள் தலைவரிடம் இருக்கும் தனித்துவமான ஓர் உயர்ந்த தன்மை. அது எங்கள் மலரவனிற்கும் ஊட்டப்பட்டிருந்தது. அது சிலவேளை இன்னொரு படிமத்தைப் பெறும். மலரவனா இப்படி விளங்கப்படுத்துகிறான் என்று ஆச்சரியத்தோடு பார்ப்பேன். ஏனெனில் அவன் கதைப்பது மிகவும் குறைவெனினும், தேவையேற்படும்போது அவன் கதைக்காமல் விடுவதும் இல்லை; அங்கு வார்த்தைகள் தெளிவோடு விழும்.

நான் மலரவனில் இன்னுமோர் திறமையை அவதானித்தேன். ஒரு நல்ல ஆசிரியன் எப்படி அன்போடு அரவணைத்து அறிவை ஊட்டுவானோ அதேபோல் தன் சக போராளிகளுக்கு நல்லாசிரியனாக விளங்கினான். பிற்காலத்தில் அவனோடு பழகிய அனைவருமே இவற்றை உறுதிப்படுத்துகின்றார்கள்.

மலரவா! என்னால் மறக்க முடியாத சில சம்பவங்களை இங்கே மீட்டுப் பார்க்கின்றேன். மாங்குளம், மணலாறு, முல்லை, யாழ். கோட்டை, பலாலி என்று பல இடங்கள் உன் கதைகளைக் கூறத் துடிக்கின்றன. நீ சிலாவத்துறைக்கு வந்ததும் அங்கே பட்ட துன்பமும், சாவின் விளிம்பில் நின்று மீண்டு வந்ததும், நீ அங்கே நின்று துணிச்சலோடு சற்றுமே சளைக்காது, சலிக்காது துன்பத்தையும் வேதனையையும் ஆபத்தையுமே விளையாட்டாகவும், மகிழ்ச்சியாகவும், சாதனைகளாகவும் ஆக்கி நின்ற தன்மைகள் எங்களை மெய்சிலிர்க்க வைக்கின்றன. ஆம், வெட்டவெளிப் பிரதேசத்தில், எந்தவித தடையரண்களும் இல்லாது உன் பசீலனை முகாமுக்கு நேரே இழுத்துச் சென்று, நேருக்கு நேர் நின்று பீரங்கியால் அனல் கக்கிய காட்சி இன்றும் என் மனதில் பதிந்து நிற்கிறது. உண்மையாகவே நீ திரும்பி வரமாட்டாய் என்றே நான் அறுதியாக என் மனதில் நம்பினேன். ஆனால் எதிரியின் துப்பாக்கி ரவைகளும், எறிகணைகளும் உன்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பீரங்கி வாகனத்தையே சேதப்படுத்தின. ஆனால் நீ உன் பணியை மிகுந்த வேகத்தோடும், துணிச்சலோடும், சாதுரியத்தோடும் நிறைவேற்றினாய். உனது உயிரைப் பொருட்படுத்தாது, நீ நேசித்து நின்ற உன் பீரங்கியைப் பாதுகாப்பாகக் கொண்டுவந்த அந்த நாள் என்றும் என் மனதில்....

மலரவா, நாம் சிலாவத்துறைத் தாக்குதலுக்கு ஆயத்தமாக இங்கிருந்து சிலாவத்துறை நோக்கி பயணத்தை ஆரம்பித்தோம். அப்பொழுது எமது படை அணிகள் இரவோடு இரவாக அனுப்பப்பட்டுவிட்டன. ஆனால் எமது பசீலன் அணிகளை எப்படி இரவோடு இரவாக நகர்த்துவது? மிகுந்த சிரமப்பட்டோம். எவ்வளவு முயற்சி செய்தாலும் குறிப்பிட்ட தூரம்தான் எம்மால் இரவு நேரங்களில் நகர்த்தலாம். ஆனால் உன்போன்ற ஆற்றல்மிக்க போராளிகளால் அதையும் வெற்றிகரமாகச் செய்ய முடிந்தது. பகல்பொழுதில் யாராவது உளவாளிகள் கண்ணில் பட்டால் எமது தாக்குதல் திட்டத்தையே எதிரி ஊகித்துவிடுவான் என்ற ஏக்கம். அந்த நேரத்தில் நாம் பலதடவைகள் அப்பாதையால் தேவைகளுக்காகச் செல்ல வேண்டியிருந்தது. அதுவும் அடர்ந்த காடுகள், அருகே வீதி..... இரவுப்பொழுது முழுமையாக நீயும் உன் பீரங்கியும் சக போராளிகளோடு நகர்வீர். பகலில் அடையாளமே தெரியாது காட்டில் உருமறைப்பு. ஆனால் நீயும் ஒரு சில சகோதரர்களும் தெருவுக்கு அருகே சிறிய பானையில் உணவு தயாரித்து உண்டு உறங்கி, மகிழ்ச்சியாகவும், உற்சாகமாகவும் செயற்பட்டு நின்ற விதம் என்னையும் இந்த இடத்தில் பசீலன் அணியில் சேர்க்கக்கூடாதா என்ற ஆவலைத் தூண்டும்.

ஆம் மலரவா! ஆபத்துக்களும் சோதனைகளும் நிறைந்த உன்னுடைய செயற்பாடு ஒருபுறமும், உன்னுடைய உற்சாகமான - எல்லோர் மனங்களையும் மகிழ்ச்சியாக வைத்திருக்கும் பண்பு மறுபுறமாகவும் போராளிகளின் வாழ்க்கை முறைக்கே உதாரணமானவையாக அமைந்திருந்தன. இதேபோன்று காரைநகரிலும் உன்னுடைய சோதனையும் ஆபத்தும் நிறைந்த களச்செயற்பாடுகளையும் இப்போது நினைக்க, நீ உயிரோடு மீண்டது வியப்பாகவே உள்ளது. இத்தாக்குதல்கள் முடிவடைந்து எமது பசீலன் அணிகள் தற்காலிகமாகச் சிறிது காலம் நிறுத்திவைப்பதென முடிவெடுத்தபோது நீ எழுந்த கோலம் என்னைக்கூட கலங்க வைத்தது. பின்னர் உனக்கு நன்கு விளக்கித் தெளிவுபடுத்தியதோடு வேதனையோடும்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

சோகத்தோடும் ஏற்றுக்கொண்டு அதற்கு ஒத்துழைப்பு வழங்கினாய்.

மலரவா! இதுவரை காலமும் தாக்குதல் களத்தில் நீ புரிந்த சாதனைகளை மிகவும் சுருக்கமாக ஒன்றிரண்டு சம்பவங்களையே இங்கு குறிப்பிட்டிருக்கிறேன். இது உன் தாக்குதற் களத்தில் மிகச் சொற்ப பதிவுகளே.

இதற்குப் பின்னர் நான் உன்னிடம், "தற்பொழுது அரசியல் துறையில் அநுபவம் வாய்ந்த ஆட்கள் குறைவாக உள்ளது. சிறிதுகாலம் இத்துறையில் நீ வேலைசெய்ய வேண்டும்" என்று வேண்டிக்கொண்டேன். உன்னிடம் எப்பொழுதுமே ஒரு போராளிக்குரிய- பொறுப்பாளர்களின் வேண்டுதல்களை, கட்டளைகளை மனச்சுத்தியோடு ஏற்கின்ற பண்பு முழுமையாக இருந்தது. அதனால் யாழ்.மாவட்ட மாணவர் அமைப்பிற்கு பொறுப்பாளனாக நியமிக்கப்படுகின்றாய்.

அக்காலகட்டத்தில்தான் உன்னுடைய மாணவப் பருவத்தின் சாதனைகளும் உனது குடும்பச்சூழலும் எனது காதுக்கு எட்டிற்று. உன்னுடை தந்தை ஒரு வைத்தியர். தாய் அறிவாற்றல் உள்ள ஓர் அன்னையாகவும், உன் சகோதரர்கள் வைத்தியராகவும், பட்டதாரிகளாகவும், அவற்றிற்குள்ளேயே நீ எல்லோரையும் விட திறமைசாலியாகவும் பாடசாலையிலேயே முதல்தர மாணவனாகவும் திகழ்ந்ததாக அறிந்தேன். யாழ். நகரிலே உள்ள பிரசித்தமான பாடசாலையிலேயே முன்னணியாகத் திகழ்வது என்பது, சாதாரண விடயமல்ல. அதிலேயும் உன் ஆற்றலை நிரூபிக்க 9 ஆவது தரம் படிக்கும்போதே ஞ/க பரீட்சையில் தோற்றி, அரைவாசிக்கு மேற்பட்ட பாடங்களில் அதிவிசேட சித்தியும் எய்தி, எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தினாயாம். அதன் பின்னர் ஞ/க பரீட்சையில் அனைத்திலுமே அதிவிசேட சித்தி எய்தி முதல்தர மாணவனாக தேர்ந்தெடுக்கப்பட்டாயாம். அத்தோடு தமிழ்ப்பாடத்தில் தேசிய ரீதியில் முதல் புள்ளியைப் பெற்று சாதனை புரிந்தாயாம். மலரவா, உன் குடும்பமே இப்போராட்டத்தோடு பின்னிப்பிணைந்து நின்றது.

உன் அண்ணன் ஓர் வைத்திய கலாநிதி. அவனும் ஓர் போராளி. உன் அப்பா, வைத்திய வசதியே அற்ற வன்னி மண்ணில், எம் மக்களுக்கு தன்னுடைய முதிர்ந்த வயதிலும் உயிர்கொடுக்கும் உத்தமராகத் தன்பணியை அர்ப்பணித்துள்ளார். அத்தோடு போராளிகளின் தாக்குதற் களத்திலும் தவறாது

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அவரைக் காணலாம். அப்படியான தேசப்பற்றுள்ளவர் உன் தந்தை. இப்படியே உன் குடும்பம் இவ் விடுதலைப் போராட்டத்தின் மிகப்பெரிய உறுதியான பங்காளிகள்.

இக்காலகட்டத்தில்தான் எமது சில துறைசார்ந்த வளர்ச்சிகளுக்கு கற்றவர்களின் தேவை அதிமுக்கியமாக இருந்தது. எமது தலைவரின் வேண்டுதற்கிணங்கி, எமது அணிகளில் இருந்த ஒரு சில- பல்கலைக்கழக அனுமதி கிடைத்தும் எம்மோடு போராட்டக்களத்தில் நின்ற போராளிகளுக்கு கல்வியைத் தொடரும் ஒழுங்குகளைச் செய்து கொடுத்தோம். அப்பொழுது பலர் கல்வியைத் தொடரமாட்டோம் நாம்; போராடத்தான் வந்தோம் என்று அடம்பிடித்து நின்றார்கள். அப்படி நின்ற சிலரை எமது தலைவர் கூப்பிட்டு நேரடியாகக் கதைத்து, கல்வியைத் தொடரவைத்தார். "நீங்கள் உங்களுக்காகவோ உங்கள் வாழ்க்கைக்காகவோ படிக்கத்தேவையில்லை. இந்தப் போராட்டத்திற்காக, எமது இயக்கத்தின் தேவைக்காக உங்கள் கல்வியைத் தொடருங்கள்" என்று கூறினார். அப்பொழுதுதான் மலரவனின் திறமைகளை அறிந்து "மலரவன் படியுங்கோ" என்று கேட்டேன். ஆனால் நான் வற்புறுத்தவில்லை. ஏனெனில் அவனுடைய அசாதரண செயற்பாடுகள் அவனின் மேல் எனக்கோர் மதிப்பையும், பற்றையும் பதித்திருந்தன. அதுமட்டுமல்ல, நான் அவனிடம் எதுவுமே கூறுவதில்லை. சொல்வதற்குள்ளேயே நினைப்பதைப் புரிந்துகொண்டு நிறைவேற்றிவிடுவான். நான் படிப்பதற்குக் கேட்டபொழுது அவன் மௌனமாகத் தலையைக் குனிந்துகொண்டு நின்றான். "மலரவன், நீங்கள் ஆறுதலாக சிந்தித்து முடிவு செய்யுங்கள்" என்றேன். நான் நினைக்கின்றேன் அவனுக்கு படிக்கவேண்டும் என்ற விருப்பம் இருந்தும் ஏதோ ஒரு சக்தி தடுத்து விட்டது போலும். அதாவது அவனோடு ஒன்றாக வாழ்ந்த, சிரித்துக் கும்மாளமிட்டு இன்பங்களிலும் துன்பங்களிலும் பங்குகொண்ட சகோதரர்கள், யுத்த களத்திலே நின்று எதிரிக்கு மரண அடிகொடுத்த சகோதரர்கள் பலர் இன்றில்லை. அவர்களை நினைத்துவிட்டானோ தெரியவில்லை. அவர்களைப்பற்றிக் கதை வரும்போதெல்லாம் அவனது கண்கள் கலங்கி, கதைக்க முடியாமல் அவன் தளதளப்பதைப் பார்த்திருக்கிறேன்.

இறுதியாக உன்னோடு நீண்ட நாட்கள் வாழ்ந்த, களத்தில் உன்னோடு சேர்ந்து இன்னோர் பசீலன் அணிக்குப் பொறுப்பாக இருந்து பல சாதனைகளைப் புரிந்த மேஜர் லம்பா, பலவேகய-2



தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

இல் வீரமரணத்தைச் சந்தித்த பொழுது, நீ என்னுடன்தான் நின்றாய். அன்றைய நாள் என்னையே மிகவும் வாட்டிய, உலுக்கிய கொடிய நாள். அன்றுதான் உனது உள்ளத்தைப் பார்த்தேன். சோகத்தின் மீதிலும் துடித்தெழுந்தாய்; லம்பாவின் ஆயுதத்தை உன்னிடம் தரச்சொல்லி அடம்பிடித்து நின்றாய். ஏதோ உன்னுடைய விடாமுயற்சியால் அந்த ஆயுதத்தைப் பெற்றுவிட்டாய். அன்றைய இரவு உன்னை நான் காணவில்லை. சண்டை உக்கிரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நீ யுத்த களத்திற்குச் சென்றுவிட்டாயோ என்று நினைத்துவிட்டு நான் வேறு இடம் சென்றுவிட்டேன். காலையில் வருகின்றபொழுது, எழுதப்பட்ட சில பேப்பர்களுடன் அவசரமாக என்முன்னால் நின்றாய். "நான் சண்டைக்குப் போகப்போகிறேன்; அதற்கு முதல் எனது லம்பாவைப் பற்றி எழுதிவைத்துள்ளேன்" என என்னிடம் தந்து, பத்திரிகைக்கு அனுப்பச் சொன்னாய்.

அந்தக் கடும் யுத்தத்தில் எறிகணைகளும் ரவைகளும் எம்மை உரசிச் சென்றுகொண்டிருந்த சூழலிலும் ஒரு இரவில், எங்கோ ஓர் சிறிய மூலையில், தெரியாத ஒளியைப் பயன்படுத்தி லம்பாவை நினைத்து எழுதிய அந்த நினைவுக் கட்டுரையைப் பார்த்தபொழுது, என் கண்கள் கலங்கிநின்றன. நீ அவசரமாக எழுதித் தந்தது எனக்குப் புரிந்துவிட்டது. லம்பாவின் ஆயுதத்தையும் நீ மிகமிக அவசரமாக எடுத்து வைத்திருந்ததும் எனக்கு முழுமையாகப் புரிந்துவிட்டது. நான் இதை உனக்குக் காட்டிக்கொள்ளவில்லை. நீ உணர்ச்சி வேகத்தில், ஆத்திர உணர்வில் உன் நிதானத்தை இழந்து சிலவேளை வீணாக எதிரியின் இலக்கிற்குப் பலியாகிவிடுவாயோ என்பதை, உன் செயற்பாடுகள் காட்டிநின்றன. அதனால் நீ கொஞ்சம் நிதானமான நிலைக்கு வரும்வரை உன்னை முன்களத்திற்கு விடுவதில்லை எனத் தீர்மானித்து, அதை உனக்கு வெளிப்படுத்தாது, சண்டையின் பின்தள வேலைகள் சிலவற்றைப் பொறுப்புத் தந்தேன். அன்றுதான் நீ என்னை வெறுப்பாகவும் கோபமாகவும் பார்த்ததைக் கண்டேன். இருந்தும் எமது தலைவருடைய செல்லப்பிள்ளைகளாகிய நாம் அவருடைய உயர்ந்த வளர்ப்பாகிய கட்டுப்பாடு, ஒழுக்கம், வீரம், முயற்சி, கட்டளைக் கீழ்ப்படிவு என்ற போராட்ட வாழ்க்கையின் உறுதியான வழிகாட்டலை என்றைக்கும் மீறியதில்லை. அந்த ரீதியில் நீயும் அதன் உயரிய பண்பைக் காட்டிநின்று உன் கடமையை நிறைவேற்றி நின்றாய்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அதன்பின் ஒவ்வொரு சண்டைக் களத்தில் நின்ற போராளிகளிடமும் சண்டையில் நடந்த சம்பவங்களைத் தொகுத்துக்கொண்டிருந்தோம். அப்போது நீ "நாம் இப்படித் திட்டமிட்டிருந்தால், செயற்பட்டிருந்தால், வெற்றிபெற்றிருக்கலாம்; இழப்புக்களை குறைத்திருக்கலாம்" என்று விளக்கம் தந்தாய். இப்படி பல சந்தர்ப்பங்களில் உன்னுடைய விவேகத்தையும், ஆளுமையையும், திட்டமிடும் ஆற்றலையும் தலைமைத்துவப் பண்பையும் காட்டிநிற்பாய். நிச்சயமாக எதிர்காலத்தில் நீ எமது போராட்டப் பயணத்தில் மிகப்பெரிய பொறுப்பாளராக வளர்ந்து வரக்கூடியவனாக வந்தாய். ஆனால், அந்தக் கற்பனை எதிர்பார்ப்பு இடையில்.... ஆனால் மலரவா, ஏக்கமும் தவிப்பும் எம்மைக் கலக்கி நிற்க நாம் இடமளிக்கவில்லை. நீ இல்லாதபோதும் பலமடங்கு வேகத்தையும் இலட்சிய வெறியையும் எங்களுக்கு ஊட்டியே நின்றாய். இப்படியே உன்னுடைய சம்பவங்களை, எங்கள் மனதிலுள்ளவைகளை எழுதிக்கொண்டு செல்லலாம். அதற்கு நாட்கள் போதாது.

மலரவா! நான் உன்னைப்பற்றி எழுதுகின்றபொழுது உன் குடும்பம் என் மனதில் அடிக்கடி வந்து உறவாடிச் செல்கிறது. ஆம், நீ எம்மோடு யுத்தகளத்தில் நின்று தீவிரமாகச் செயற்படும்போது, உன் அண்ணன் இன்னோர் தளத்தில் நின்று காயமடைந்த நிலையில் உயிருக்காக போராடும் எம்முயிர்ச் சகோதரர்களுக்கு உயிர்கொடுத்து நிற்பான். வன்னியில் என்றால் உன் அப்பாவும் சேர்ந்துவிடுவார். உன் அம்மாவும் மற்றைய சகோதரர்களும் சண்டை வெற்றிபெற விரதமிருப்பார்கள். இதைவிட நான் உன் குடும்பத்தைப் பற்றிச் சொல்லத் தேவையில்லையடா.

மலரவா, அந்த இறுதி நாளை அதாவது உன்னை இழந்த, நீ எம்மை விட்டுப் பிரிந்த அந்த நாளை, என்றைக்குமே எம்மனதிலிருந்து அகற்ற முடியாது. நாங்கள் அனைவரும் மிகவும் களைப்புற்றிருந்தும் சண்டை ஆரம்பித்தவுடன் எம்மையறியாத உற்சாகம் கொண்டோம். ஏனெனில் பல நாட்கள் பல இரவுகள் ஓய்வின்றி இப்பெரிய தாக்குதலுக்காக உழைத்தோம். இதில் சண்டை தொடங்குவதற்கு முன்னர் ஏதாவது ஒரு சின்ன தவறு நடைபெற்று எதிரி எச்சரிக்கை அடைந்து எமது திட்டம் குழம்புமாக இருந்தால், எமது சகோதரர் பலரை நாம் இழக்கவேண்டிவரும். எனவே, எல்லோர் மனதிலும் இந்த ஏக்கம் குடிகொண்டிருந்தது. தாக்குதல் திட்டத்தை ஒழுங்கு


தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

படுத்தும்பொழுது, எமது தலைவர் இதை அடிக்கடி குறிப்பிட்டு, எமக்கு இழப்பின்றி வெற்றிபெறுவதற்கான ஒவ்வொரு சிறிய நுணுக்கமான விடயத்தையும் வலியுறுத்தி நின்றார் அதேபோல் எமது தாக்குதல் முழுவதற்கும் பொறுப்பாக இருந்த தளபதி பால்ராஜ், தாக்குதல் களத்தை நோக்கி நகரும்படி கட்டளை பிறப்பிக்கின்றார். நகரும்பொழுது எமது நெஞ்சங்களில் ஏக்கமும் ஒருவித அச்ச உணர்வும் இருந்தது. ஏனெனில் சரியான இடங்களுக்கு நகர்ந்துவிட்டால், அதன்பின் யாரும் எம் போராளிகளோடு சண்டையிட முடியாது. அந்த ஒருசில மணித்தியாலங்கள் கடக்கும்வரை எம்மனதில் பட்ட சிந்தனைகளை எழுத்தில் எழுத முடியாது. அந்த நேரத்தில் எல்லோருடைய முகங்களிலும் ஓர் ஏக்கமும் அமைதியும் குடிகொண்டிருந்தது. அந்த ஒருசில மணித்தியாலங்களில் முக்கியமான பிரதான அணி தனது நிலைக்குச் சென்றுவிட்டதாக அறிவித்தல் வருகின்றது. அப்பொழுது எங்கள் மனங்களில் ஏற்பட்ட ஆனந்தக் களிப்பு என்றைக்குமே நாங்கள் வாழ்க்கையில் அனுபவித்திருக்க முடியாதது. அந்தக் கணப்பொழுது நேரம் நீ உன்னையறியாது துள்ளிக் குதித்து, உருண்டு புரண்டு, வெற்றிக் களிப்பை வெளிப்படுத்தியது என் மனதில் ஆழமாகப் பதிந்து நிற்கிறது.

தாக்குதல் தொடங்கி சண்டை உக்கிரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பல முனைகளில் இருந்தும் வெற்றிச் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. அள்ளப்பட்ட ஆயுதங்கள் கொண்டுவந்து குவிக்கப்படுகின்றன. நாம் நின்ற இடம் பாதுகாப்பற்றதாக இருந்ததால் உடனுக்குடன் எடுக்கப்பட்ட ஆயுதங்களை அகற்றவேண்டியிருந்தது. ஆகவே உன்னிடம் அந்தக் கடமையைப் பொறுப்புத்தரத் தேடினேன். நீ செய்தியறிந்து முன்னணிப் பகுதிக்குச் சென்றுவிட்டதாக பக்கத்திலிருந்தவர்கள் கூற, ஆத்திரமடைந்தேன். சிறிது நேரத்தில் முகாமில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களுடன், உன் சக்திக்கு அப்பாற்பட்ட சுமைகளோடு இளைத்து இளைத்து வருவதைக் கண்டவுடன், பேச எடுத்த வாய் தன்னையறியாது மூடிவிட்டது. சிறிது நேரத்தில் நான் உன்னைக் கூப்பிட்டு தயவுசெய்து தூர ஓரிடமும் சென்றுவிடாது, என்னுடனே நிற்கச் சொன்னேன். அதன்படி நின்று, எடுக்கப்பட்ட ஆயுதங்களை வேகமாக உடனுக்குடன் பின்னிலைக்கு அனுப்பும் ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தாய்.

ஆம், அந்த இறுதி நேரத்தில் எம்மை அண்டிய

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

பகுதிகளிலெல்லாம் எறிகணைகள் சரமாரியாக விழுந்து வெடித்தன. இது எங்களின் தாக்குதலின் முழுமையான வெற்றியைக் காட்டி நின்றது. ஏனெனில் எதிரி முழுமையாக இறந்தும் ஓடியும் விட்டான். அதனாலேயே தன் பகுதிகளுக்குள்ளேயே குண்டுமாரி பொழிகின்றான்! ஆனால், குண்டுகளின் மத்தியிலும் எம் கடமைகளைத் தொடர்ந்தோம். ஏனெனில் பகல் புலருவதற்குள் எடுக்கப்பட்ட ஆயுதங்களையும், காயமடைந்தோரையும், வீரச்சாவடைந்தோரையும் அகற்றித் தாக்குதலைப் பூரணப்படுத்திவிடவேண்டும். மழை பொழிகின்றபொழுது நனைந்துகொண்டு உழவர்கள் வயல்வேலை செய்வது போல், எம் போராளிகள் குண்டு மழைக்குள்ளேயும் தங்கள் கடமைகளைத் துடிப்போடு செய்துநின்றார்கள். வெற்றிக் களிப்பில் ஆனந்தத்தோடு இராணுவத்திடமிருந்து பெற்ற பல பெறுமதிமிக்க இராணுவத் தளபாடங்களை எம் நிலைகளுக்கு அனுப்பிக்கொண்டிருந்த பொழுதுதான்....

அத்துர்ப்பாக்கிய-

கனவில் கூட எண்ணமுடியாத-

அந்நிகழ்வு நடைபெற்றது. திடீரென எமக்கெதிரே இரைச்சலோடு வந்த மூன்று எறிகணைகள் ஒரே நேரத்தில் விழுந்து வெடித்து, தன் பசிக்கு எம் தோழர்கள் மூவரைப் பலிவாங்கிக் கொண்டது.

அதில் நின்ற அனைவரிலும் ஒருவரைத் தவிர மிகுதி அனைவரும் கடுமையான காயங்களுக்குள்ளானார்கள். அந்தச் சகோதரர்கள் வரிசையில் மலரவனும்.......

எல்லோரையும் மருத்துவ சிகிச்சை அளிக்கும் இடத்திற்கு அவசரமாக அனுப்புகின்றோம். என்னோடு நின்ற ஒருவர் வந்து என் காதருகில் மலரவனிற்கு கொஞ்சம் கடுமையாக உள்ளது; கால் துண்டாடப்பட்டுவிட்டது என்று கூறுகின்றார். கால் கழற்றினாலும் பரவாயில்லை, உயிரோடு இருந்தால் அவன் இன்னும் எவ்வளவோ சாதனைகளைப் படைப்பானென்று என் உள்ளுணர்வு அடிக்கடி வேண்டிக்கொள்கிறது. ஏனெனில் பல நூற்றுக்கணக்கான போராளிகளில் ஒருசிலர், இவ்வித நிலையிலும் அபரிமிதமான திறமைகளையும் ஆற்றல்களையும் வெளிப்படுத்தி நிற்பவர்களாவர். அவ்வரிசையில் எங்கள் மலரவனும் ஒருவன்.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

இவ்வேளையில் எமக்கு அடுத்த நிலையில் உன் அன்பு அண்ணன்- உன்மீது உயிரையே வைத்திருந்த உனது சகோதரன், அவர் ஒரு வைத்திய கலாநிதியும், போராளியுகூட- எமது மருத்துவ நிலையில் நின்று பல போராளிகளின் உயிர்களைக் காக்கும் கடமைகளில் துரிதமாகச் செயற்பட்டு நின்றான். ஆனால்..... தாக்குதல்கள் முடிந்து எம் நிலைகளுக்கு நாம் வருகின்றபொழுதே எங்கள் உள்ளத்தை உருக வைக்கும் பேரதிர்ச்சி தரும் அந்தச் செய்தியைச் சொன்னார்கள்.....

வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லும் வழியில் எங்கள் மலரவனின் உயிர் பிரிந்துவிட்டது....

அதில் நின்ற அனைவரினதும் கண்களில் இருந்து பாசத்தினதும், துக்கத்தினதும் படைப்பான கண்ணீர்த்துளிகள் முகங்களை ஈரமாக்கி நின்றன. உன் அண்ணன் செய்தி அறிந்து விம்மி விம்மி அழுததை அறிந்தேன்..... ஆம், அவனும் பல நூறு சகோதரர்களின் உயிரற்ற உடல்களைக் கண்டு விடுதலையின் பெறுமதியை அறிந்தவன். அவ்வரிசையில் உன்னையும் சேர்த்து தன்னைத் தேற்றிக்கொள்ளவே முயன்றான்.

ஆம் மலரவா, உன்னுடைய போராட்ட வாழ்க்கையின் செயற்பாடுகள் எமக்கு வழிகாட்டியாக மட்டுமல்ல வீரமும், உறுதியும் வேகமும் கொண்ட எமது விடுதலைப் போராட்டத்தில் ஒரு உதாரணமாகவும் விளங்கும் என்பது உறுதி.

மலரவா, உன்னுடைய ஆற்றல்களின் பெரும்பகுதியை நீ எம்மைவிட்டுப் பிரிந்தபின்பு மேன்மேலும் அறியக்கூடியதாக இருக்கின்றது. அத்திறமைகளில் ஒன்றுதான் நீ எழுத்துருவில் தந்துவிட்டுப் போன இவ்வெழுத்துருவாக்கம். இது நிச்சயமாக எம் சந்ததியின் மனங்களிலே ஆழப்பதியும் என்பதில் சந்தேகமேயில்லை.

உனது இறுதி நிகழ்வு நடைபெற்று முடிந்த மூன்று நாட்களின் பின், உன்னுடைய வீட்டிற்கு மிகவும் தயக்கத்துடனும் சோகத்துடனும் செல்கின்றேன். அநேகமான வீடுகளில் இருக்கும் நிலைபோன்றே நானும் என்மனதில் எண்ணிக்கொண்டு செல்கிறேன். ஆனால் நான் கற்பனையில்கூட எண்ணியிராத- சாதாரண நடைமுறைக்கு எதிர்மாறான உன்குடும்பத்தின் செயற்பாட்டைக் கண்டு நின்றேன். அழுதுகொண்டு நின்ற அனைவரும் முகத்தைத் துடைத்துக்கொண்டு எம்மை

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

வரவேற்றார்கள். திடீரென உன் அன்னை உள்ளே சென்று சில கடதாசிகளைக் கொண்டுவந்து உன் அப்பாவிடம் கொடுத்தார். உன் அப்பா அதை வாங்கி என்னிடம் தந்து, இதில் ஒன்றை செஞ்சோலைக்கும் மற்றையதை காயமடைந்த போராளிகளின் மருத்துவத் தேவைக்கும் கொடுங்கள் என்றார். பிரித்துப் பார்த்தேன். ஆம், மலரவனின் பேரில் இடப்பட்ட இரு வங்கிக் கணக்குகள். அதில் இலட்சக்கணக்கான ரூபாய்கள் இருந்தன. நீ பிறந்த நேரத்தில் உனக்காக உனது தந்தை கணக்கிலிட்ட பணம் அது. இன்று அது பெருகி பலமடங்கு ரூபாய்களாக இருந்தது. ஆம், இச்சம்பவம் உன்னுடைய தனித்துவமான தன்மை உன் குடும்பத்திலும் இருந்ததை எமக்கு உணர்த்தி நின்றது.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive